தெய்வப் புலமைத்

திருவள்ளுவ நாயனார்

திருக்குறளும்,

தேசாபிமானி

வ. உ. சிதம்பரம் பிள்ளை

விருத்தியுரையும்.

முதற் பாகம்:

சிறப்புப்பாயிரத்துடன்

அறப்பால்.

1935.

காகிதம், மை, கட்டுநூல்,
முதலியன வெல்லாம் சுதேசியம்.

பிரதி செய்யும் உரிமை
பதிவு செய்யப்பட்டுள்ளது.

சமர்ப்பணம்.

(நேரிசை யாசிரியப்பா.)

உலக மனைத்து நலனுறப் புரக்கும்
சச்சிதா நந்த மெய்ப்பொரு ளருளால்,
வேண்டிய வெலாந்தரும் பாண்டிய நாட்டில்
தேட்ட நிறைந்த ஓட்டப் பிடாரம்
என்னும் பெயர்கொள் தென்னள கைநகர்ச்
சிதம்பரக் கவிஞன் சீரார் பேரன்
உலகநா தன்மகன் சிதம்பரம் எனும்யான்
திருவள் ளுவரின் திருக்குறட் கியற்றிய
உரையினை நற்பவ வருடந் தையிரு
பத்தா றிற்சமர்ப் பித்தனன் பண்புடன்;
நூற்றுக் குடியெனச் சாற்றும் பெயரினை
மருவி நிற்குந் திருமந் திரநகரில்
சீருஞ் சிறப்புஞ் செல்வமிட் டாக்களும்
பொன்மனை மாளிகை நன்மனை மக்களும்
பெற்றறம் புரிந்து கற்றுநன் னூல்கள்
சிறந்து விளங்குஞ் சிலுக்கம் பட்டி
அ. செ. சு. கந்த சுவாமி ரெட்டியார்
அ. செ. சு. முத்தைய ரெட்டியார் என்னும்
மாண்பா ரிரண்டு வள்ளல் களுக்கே;
அவர்கள் முருகன் அருளாற் றமது
மக்கட் கெலாநன் மணங்கள் செய்வித்துப்
பேரர் பேத்திகள் சீருறப் பெற்றிவண்
இன்பந் துய்த்தற மியற்றி
நீள்புகழ் பெருக்கி நீடுவாழ்ந் திடவே.

பொருட் குறிப்பு.

பொருள்.	பக்கம்
சமர்ப்பணம்	III.
முன் னுரை	V
உரைப் பாயிரம்	1
சிறப்புப் பாயிரம்	9
இடைப் பாயிரம்	101
பாயிரம்	117
இல்லற வியல்	122
துறவற வியல்	227
ஊழியல்	269
செய்யுள் முதற்குறிப் பகராதி	288
பிழை திருத்தம்	294
....	301

திருவள்ளுவர் திருக்குறள்.

அறப்பால்.

முன்னுரை.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் திருவள்ளுவ காய
நர் திருக்குறளுக்கு யான் இயற்றியுள்ள உரையில், அறப்பா
யை மூலத்துடன் அச்சாய் முற்றுப் பெற்றது. அதனை
ச்சிடத் தொடங்கிய காலையில் அறப்பால், பொருட்பால்,
ன்பப்பால், ஆகிய மூன்று பால்களின் உரைகளையும் மூலத்
டன் அச்சிட்டு, அவற்றை ஒரே புத்தகமாக வெளியிட
வண்டு மென்று நினைத்தேன். இப்போது, திருவள்ளுவ
ாலச் செய்யுள்களும், மகா வித்வான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை
வர்கள் முதலிய நால்வர் செய்யுள்களும், அவற்றின் உரை
னும், அறப்பால் மூலமும் உரையும், முந்நூறு பக்கங்கள்
நின்றன. பொருட்பால் மூலத்திற்கும் உரைக்கும் முந்
று பக்கங்களுக்கு மேலாகு மென்றும், இன்பப்பால் மூலத்
ற்கும் உரைக்கும், திருவள்ளுவரது காலம், சாதி, சமயம்,
ருக்குறளை இயற்றியதற்குரிய காரணம், அக் காலத்துத்
மிழ் நாட்டின் நிலைமை, திருக்குறளுக்கு ஆதாரமான நூல்
ள், முதலியவற்றைப் பற்றிய எனது ஆராய்ச்சிக் குறிப்புக்களு
ும் சில ஏறக் குறைய முந்நூறு பக்கங்கள் ஆகு மென்றும்
ஊகித்தேன். அதுபற்றி, ஒவ்வொரு பாலையும் அதனதன்
ரையையும் தனித்தனி ஒவ்வொரு புத்தகமாக வெளியிடத்

திருக்குறள்—அறப்பால்.

துணிந்து, இப்பொழுது அறப்பாலையும் அதன் உரையை
ஒரு புத்தக மாக்கி வெளியிடுகின்றேன்.

அறப்பாலில் 76 குறள்களில் என் உரை பரிமேலழ
உரைக்கு வேறுபடுகின்றது; 12 குறள்களில் என் உரை அ
உரையை வெளிப்படையாக மறுக்கின்றது; 5 குறள்களி
என் உரை அவர் உரையை வெளிப்படையாக ஆமோதி
கின்றது. மீதம் குறள்களில் என் உரையும் அவர் உரையு
ஒத்திருத்தல் கூடும். அறப்பாலில் பரிமேலழகர் கொள்ளுள்
மூல பாடங்களுக்கு வேறாக 151 மூல பாடங்களை மண
குடவரும் மற்றும் மூன்று உரையாசிரியர்களும் கொண்டு
ளார்கள். பரிமேலழகர் கொண்டுள்ள மூல பாடங்களுக்
வேறாக 74 மூல பாடங்களை யான் கொண்டுள்ளேன். அவ

றில், 30 பாடங்கள் முந்திய உரையாசிரியர்கள் கொண்டுள்
பாடங்கள். மீதம் 44 பாடங்கள்தான் யானாகக் கொ
டுள்ள பாடங்கள். அப் பாடங்களை யான் கொண்டத
குரிய காரணம், அப் பரிமேலழகர் பாடங்கள் ஏடு பெயர்
தெழுதியோரால் நேர்ந்த பிழைப் பாடங்கள் என யா
கருதியதே. யான் கருதியது போலவே, பழம் பெரு
புலவரான மகா வித்வான். மீனாச்சிசுந்தரம் பிள்ளை யவ
களும் பல பிழைகள் அக்காரணத்தால் மூலத்தில் புகுந்து
ளன என்று கருதியிருக்கிறார்கள். அவர்கள் திருக்குறள்-
—பரிமேலழகருரை—ஆறுமுக காவலர் பதிப்புக்குக் கொடு
துள்ள சிறப்புச் செய்யுள்களில் ஒன்றில் . " ஏட்டுவை
தெடுத்துணர்ந்து வருநாளி லெங்கணுஞ்சா லெழுத்துக்குற்ற

முன்னுரை.

டும்வகை யுணராராய்ப் பரம்பரை யொன்றே கருதி
ழிந்தா ரந்தோ " என்று கூறியிருத்தல் காண்க.

இந் நூலையாவது அச்சுப் பிழை இல்லாமல் அச்சிடு
க வேண்டு மென்று யான் மிக்கவாக் கொண்டிருந்தேன்.
ற்காக அதன் புருவ்களை என்னுடன் பார்க்க வேண்டு
ன்று என் நண்பர்களான மதுர ஆசிரியர். திரு. க. ரா. இராதா
ஷ்ணைய ரவர்களையும், பிரசங்க ரத்தினம். திரு. மு. பொன்
பலம் பிள்ளை யவர்களையும் வேண்டிக் கொண்டேன். ஒவ்
ரு புருவும் என்னால் மூன்று முறையும், அவர்களால்
ண்டு முறையும் படிக்கப்பட்டது. அவ்வாறு படிக்கப்பட்
அச்சுப் பிழைகள் "மற்றொன்று ருழினும் தான்முந்
ம்" என்றபடி எங்கள் மூவர்களுக்கும் தெரியாமல் நாலு
ன நுழைந்து, "பிழை திருத்தம்" என்னும் ஒரு பக்கத்
க் கவர்ந்து விட்டன. இராதாகிருஷ்ண அய்யரவர்கள் என்
ன் புருவ் பார்த்ததோடு எனது உரையை ஆங்காங்குச்
ார்த்தும் தந்தார்கள். பொன்னம்பலம் பிள்ளை யவர்கள்
ப் பார்த்ததோடு அய்யரவர்களும் யானும் எனது உரை
சிற் சில இடங்களில் பொருத்தமான சொற்களைப் பெய்

ாக ஆலோசனை செய்துகொண்டிருந்த போது பொருத்த
ா சில சொற்களைச் சொல்லியும் உதவினர்கள். அவ் உதவி
க்காக அவ்விருவர்க்கும் எனது மனமார்ந்த வந்தனம்
அளிக்கிறேன்.

இந் நூலை அச்சிட்டுக் கட்டுதற்கு எனக்குப்பொருள்
த்தவர்கள் இந் நகரின்கண் பல சீர்களும், சிறப்புக்

களும் பெற்று வாழும் புதுக்கோட்டை மிட்டாதாரு
பெரிய மிலச்சுவான்தாரும், அநி தனவந்தரும், திருநெல்வே
டிஸ்டிரிக்டு போர்டு அங்கத்தினரும், திருச்செந்தூர் தி
சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான கௌரவ தருமகர்
தரு மாகிய திரு. அ. செ. சு. கந்தசுவாமி ரெட்டியா ரவர்களு
அவர்களது அபிபக்த அருமை மைத்துனரும், திருநெ
வேலி டிஸ்டிரிக்டு போர்டு அங்கத்தினரும், தூத்துக்கு
ஸர்க்கிள் தேவஸ்தானக் கமிட்டி வைஸ் பிரசிடண்டு மாகி
திரு அ.செ.சு. முத்தைய ரெட்டியா ரவர்களுமே. எனது கண்ட
களிற் சிலர் என்னைப் பார்த்து "நீங்கள் அநிர்ஷ்ட சாலிதான்
மகாத்மா காந்திக்கு ஜமன்லால் பஜாஜி கிடைத்தது போ
உங்களுக்கு ரெட்டியார்கள் கிடைத்திருக்கிறார்கள்" என்
சொல்வ துண்டு. அதற்கு "தானும் கடவுள் ஞானத்திலு
தேசபக்தியிலும், பாஷாபி மானத்திலும் குறைந்தவ ன
லவே" என்று பதில் சொல்வ துண்டு. அவ் விரு வள்ளல்களு
இன்னும் பல பெண்மக்களும் ஆண் மக்களும் பெற்றுப்பேரு
"வாழையடி வாழையென" இவ் வுலகின்கண் எஞ்ஞான்று
இன்பமும் புகழும் எய்தி வாழ்ந்திருக்கும்படி யாகவும், அவ
கள் வீட்டு வாயில்கள் தினந்தின கல்யாண வாயில்களாய் விள
கும்படியாகவும் அருள்புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல
இறைவனை யான் இறைஞ்சுகின்றேன்.

தூத்துக்குடி.
9—2—35.

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

திருவள்ளுவர் திருக்குறள்.

(வ. உ. சிதம்பரம் பிள்ளை உரையுடன்.)

உரைப்பாயிரம்.

பூவுலகின்கண் தோன்றி நிலவுகின்ற மொழிகள் பல. வற்றுள் நம் தமிழ் மொழியில் ஆக்கப்பட்ட நூல்கள் ண்ணில. அவற்றில், அழிந்துபோனவை பல; அழியாது ற்பவை சில. அச் சிலவற்றில் சிறந்தவை மிகச் சில; லச் சிறந்தவை மிக மிகச் சில. அந் நூல்களை "மேற் ணக்கு" எனவும், "கீழ்க்கணக்கு" எனவும் பகுத்துத் காகுத்துள்ளார் நம் முன்னோர். மேற்கணக்கு நூல்கள் தினெட்டு. அவை "பத்துப் பாட்" டிலுள்ள நூல்கள் த்தும், "எட்டுத்தொகை" யிலுள்ள நூல்கள் எட்டு மாம். ழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு. அவை "பதினெண் ழ்க் கணக்" கிலுள்ள நூல்கள் பதினெட்டு மாம்.

அப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய திருக்குறள் என்று வழங்கும் முப்பால் திருவள்ளுவரால் யற்றப் பெற்றது. அது மக்கள் அடைதற்குரிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும், யுவற்றை அடையும் நெறிகளையும் ஞாயிறு போல விளக்கு ன்ற ஓர் அருமையான நூல். அதன் ஒப்புயர்வற்ற பெருமை, அதனை ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமய நூலின்றும், அதன் ஆசிரியரைத் தத்தம் சமயத்தவரென் றும் கூறிவருகின்ற தொன்றாலேயே நன்கு விளங்கும்.

அஃது அறப்பால், பொருட் பால், இன்பப் பால் என் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. அம் மூன்று ப களையுடைய காரணத்தால், அது முப்பால் எனப் பெ பெற்றது.

அம் முப்பால்களில் அறப்பால் பாயிரம், இல்லறவி துறவறவியல், ஊழியல் என்னும் ஐந்து இ களாகப் பகுக்கப்பட் டுள்ளது. பொருட்பால் அரசி அமைச்சியல், அரணியல், பொருளியல், படையியல், பியல், குடியியல் என்னும் ஏழு இயல்களாகப் பகுக்கப் டுள்ளது. இன்பப்பால் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூ இருபாற் கூற்று என்னும் மூன்று இயல்களாகப் பகு பட் டுள்ளது. இப் பதினேந்து இயல்களும் நூற்றுமுப்ப அதிகாரங்களைக் கொண்டுள்ளன. ஒவ்வோர் அதிகார பப்பத்துக் குறள் வெண்பாக்களைக் கொண்டுள்ளது.

திருக்குறட் சுவடிகளில் பாயிரத்தின் முதல் மூ அதிகாரங்களாகக் காணப்படும், 'கடவுள் வாழ்த்து', 'வ சிறப்பு', 'நீத்தார் பெருமை' என்னும் மூன்று அதிகா பாக்களும் திருவள்ளுவரால் இயற்றப் பட்டவை ய வென்றும், அவை திருவள்ளுவர் காலத்திற்குப் பிற் மும் முன்திய உரையாசிரியர்கள் காலத்திற்கு முற் கா மாகிய இடைக் காலத்துப் புலவர் ஒருவரால் பாடிச் சே சுப்பட்டவை யென்றும் யான் கருதுகிறேன். அவ் யான் கருதுவதற் குரிய காரணங்களிற் சில :—(1) மூன்று அதிகாரங்களிலும் காணப்படும் பாக்கள் நூல்

க்களைப் போலச் சொற் செறிவும் பொருட் செறிவும்
ட்டன அல்ல. (2) இப் பாக்களிற் பலவற்றின் பொருள்
பல தடைகளுக்கு இடம் கொடுக்கின்றன. (3)"மெய்
ர்தல்", "துறவு" என்னும் அதிகாரங்கள் நூலின்கண்
க்கின்றமையால், "கடவுள் வாழ்த்து", "நீத்தார்
ருமை" என்னும் அதிகாரங்களைப் பாயிரத்தில் கூற
ண்டில்லை. (4) "மெய்யுணர்த"லில் கடவுளுக்குக்
றியுள்ள இலக்கணங்களையும், "கடவுள் வாழ்த்"தில்
வுளுக்குக் கூறியுள்ள இலக்கணங்களையும் ஒப்பிட்டுப்
ர்த்தால், இரண்டு அதிகாரங்களையும் இயற்றியவர் ஒருவ
ல சென்பது நன்கு விளங்கும். அல்லாதே, "துற"
ர் பாக்களையும், "நீத்தார் பெருமை"யின் பாக்களையும்
பிட்டுப் பார்த்தால், அவ் விரண்டு அதிகாரங்களையும்
ற்றியவர் ஒருவ ரல்ல சென்பது நன்கு விளங்கும்.
ழையச் "சிறப்பிற் றணிப்பாரு மில்லை, வறப்பிற் றரு
நமில்" லாகையால் "வான் சிறப்" பைக் கூறுதலால்
ன் ஒன்றும் இல்லை.

ஆயினும், நம்மவர்களிற் பலர் அம் மூன்று அதிகாரங்
ம் திருவள்ளுவராலே இயற்றப் பட்டவை என்று
ி வருகின்றமையால், அவர் மனம் நோகும்படியாக
மூன்று அதிகாரங்களையும் திருக்குறளிலிருந்து நீக்கி
. யான் விரும்பாதவனுய், அவை இடைக் காலத்தில்
ஞ சேர்ந்த பாயிர மென்று யாவரும் தெரிந்துகொள்ளும்
ருட்டி, அவற்றிற்கு "இடைப் பாயிரம்" என்னும்
ப்பெயர் கொடுத்து, அவற்றை எனது உரையுடன் திருக்

திருவள்ளுவர் திருக்குறள்.

குறட் கையெழுத்து ஏடுகளிலும் அச்சுப் புத்தகங்களிலும்
அவை காணப்படுகிற இடத்திலேயே சேர்த்துள்ளேன்.
திருவள்ளுவ மாலைப் பாக்களைத் திருத்தணிகைச் சரவணப்
பெருமாளையரவர்கள் உரையோடும், திரிசிரபுரம் மகா
வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் முதலிய நால்வ
பாக்களை எனது உரையோடும் "சிறப்புப்பாயிரம்" எ
னும் தலைப்பெயருடன் இவ்வுரைப் பாயிரத்திற்கும் இடை

பாயிரத்திற்கும் இடையில் சேர்த்துள்ளேன்.

திருவள்ளுவ மாலைப் பாக்களிற் சில மேற்கண்ட மூன்று அதிகாரங்களையும் திருக்குறட் பாயிரம் என கூறுகின்றனவே எனின், அப் பாக்களைப் பாடியவர்களாக குறிக்கப் பட்டுள்ள புலவர்கள் திருவள்ளுவர் காலத்திற்கு மிகப் பிற்பட்ட காலத்தவர்க ளென்றும், அவர்களிற் சில தாம் திருக்குறளைப் படித்த காலங்களில் அதன் பெருமையைப் பற்றிப் பாக்கள் பாடித் திருக்குறட் சுவடிகளிற் சேர்த்தன என்றும், அவர்களில் வேறு சிலர் தமிழ் நூல்களில் பல அழிவுற்ற காலத்தில் திருக்குறளில் உள்ளவை இவை யென்று பிற் காலத்தார் தெரிந்து கொள்ளும் பொருட்டுத் தமக்குக் கிடைத்த திருக்குறட் சுவடிகளில் கண்டபடி பால், இயல், அதிகாரங்களின் தொகைகளை வரையறை யிட்டுப் பாக்களைப் பாடித் திருக்குறட் சுவடிகளில் சேர்த்தனரென்றும், அப் பாக்க ளெல்லாம் சேர்ந்து அவர்களுக்குப் பிற்பட்ட காலத்தார் ஒருவரால் கொடுக்கப் பட்ட "திருவள்ளுவ மாலை" என்னும் தலைப்பெயருட்டு வழங்கி வருகின்றன வென்றும் விடையளித்திடுக.

உரைப்பாயிரம்.

திருக்குறளுக்கு உரை சொல்லியவர்களும், எல்லை மிகுந்த எல்லை குறைந்தும் உரை எழுதியவர்களும் பலர் என்றும், எல்லை மிகாதும் எல்லை குறையாதும் எல்லைப்படி உரை எழுதியவர்கள் பதின்மர் என்பதும் "தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர்; பரிமே லழகர், பரிதி,-திருமலையர்; காளிங்கர், கவிப்பெருமாள், காளிங்கர் வள்ளுவர்நூற்; கெல்லை யெழுதினோர்" என்னும் வெண்பாவால் விளக்கும். இவ் எல்லை உரைகளுள் பரிமேலழகருரையும் மணக்குடவருரையும் அச்சாகித் தமிழ் நாட்டில் நிலவுகின்றன. இவை தவிர, வேறு மூன்று உரைகள் கையெழுத்துப் பிரதிகளாகத் தமிழ் நாட்டில் சென்னை அரசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலை முதலிய சிற் சில இடங்களில்

ாப்படுகின்றன. அவற்றிற் காணப்படும் சமயக் கோட்
ி, தமிழ் நடை முதலியவற்றைப் பார்த்து, யான் அவற்
க் தருமருரை, காமத்துருரை, நச்சருரை எனக் கருது
றேன். அவை முறையே அவ்வுரை யாசிரியர்களால்
ற்றப் பெற்றவை என்பதற்கு வேறு சான்று ஒன்றும்
ாதலும் கிடைத்திலது. ஆயினும், அவ் உரைகளிற்
ட குறட் பாடல்களை யான் எனது உரையில் குறிக்கும்
க்களில் அவ் உரையாசிரியர்கள் பாடல்கள் எனலே குறித்
ளேன். இவ் ஐந்து உரைகளிலும் திருக்குறளின் சில
ிகாரப் பெயர்களும் வரிசைகளும், அதிகாரக் குறள்
ன் வரிசைகளும் வெவ்வேறு யிருக்கின்றன.

இவ் உரைகளெல்லாம் கற்றற்குப் பெரியனவாகவும்,
ிதற்கு அரிய தமிழ் நடையில் எழுதப் பெற்றன வாக

5

திருவள்ளுவர் திருக்குறள்.

வும், பிழைபுட்ட மூல பாடல்கள் சிலவற்றைக் கொண்டன
வாகவும், சில குறள்களுக்கு மண்ணிய அறிவுடையார்
ஏற்றுக்கொள்ள இயையாத பொருள்களை உரைப்பனவாக
வும் காணப்படுகின்றன. அவை பற்றி, திருக்குறளை கேரிய
பொருளோடும் பிழைகள் இன்றியும் தமிழ் மக்கள் எளிதில்
கற்கும்படியாக அதற்கு ஓர் உரை இயற்றப் பல ஆண்டு
களுக்கு முன் நினைத்தேன்; சில ஆண்டுகளுக்கு முன்
இயற்றி முடித்துத் திருச்செந்தூர்த் திரு. முருகப் பெரு
மான் சந்நிதியில் அரங்கேற்றினேன்; இப்பொழுது அச்
சிட்டு வெளியிடுகின்றேன்.

பரிமேலழகருரை அச்சுப் புத்தகத்தின் இல்லறவிய
லுள் காணப்படுகின்ற 'வெஃகாமை', 'பயனில சொல்
லாமை' என்னும் இரண்டு அதிகாரங்களையும் துறவற
வியலுள் சேர்த்தும், துறவற வியலுள் காணப்படுகின்ற
'வாய்மை', 'கள்ளாமை' என்னும் இரண்டு அதிகாரங்
களையும் இல்லற வியலுள் சேர்த்தும் இருக்கிறேன். வாய்
மையும் கள்ளாமையும் இல் வாழ்வார்க்கும் இன்றி யமை
யாதன வாகலானும், வெஃகாமையும் பயனில சொல்லா

மையும் இல்வாழ்வார் கைக்கொள்வதற்கு அரியன வாகலா
னும், அவை துறவிகள் கைக்கொள்வதற்கு உரியன வாகலா
னும், முன்னிரண்டு அதிகாரங்களின் பாக்களிற் சில இல்
வாழ்வாரைக் குறித்தும் பின்னிரண்டு அதிகாரங்களின்
பாக்களிற் சில துறவிகளைக் குறித்தும் பாடப்பட்டிருக்கின்
றமையானும் அவ்வாறு செய்தேன். இஃதன்றியும், நேரிய
பொருள் கோடலுக்கு இடையூறாக வரிசை யொழுங்கு

உரைப்பாயிரம்.

றிக் கிடந்த சிற்சில குறள்களின் வரிசையை ஒழுங்கு
த்தி யுள்ளேன்.

வீடு இல் வாழ்வார் துறந்தார் ஆகிய இரு திறத்தார்க்
ம் உரிய தாகலானும், அறத்துப் பாலில் 'வீட்டியல்'
ா ஓர் இயல் உண்டென்று யான் கேட்டிருக்கின்றமை
னும், "நிலை யாமை" முதலிய நான்கு அதிகாரங்களும்
ட்டியலிற் குரியனவாகலானும், அவற்றை "வீட்டியல்"
ாறு ஓர் இயலாக அமைத்துள்ளேன். முந்திய உரைகளிற்
னும் அதிகாரங்கள் சிலவற்றின் தலைப் பெயர்களிலும்,
ள்கள் சிலவற்றின் மூல பாடங்களிலும் சிற் சில எழுத்
களும் சொற்களும் ஏடு பெயர்த் தெழுதியோர்களால்
ந்த பிழைகள் என யான் கருதுகின்றமையால், அவற்
த் திருத்தியுள்ளேன். முந்திய உரையேடுகளிற் காணப்
ம் பாடங்களையும், அவற்றை யான் திருத்தியதற் குரிய
ணங்களையும் அவ்வவ் இடங்களில் குறித்துள்ளேன்.
றைப்படி, பரிமேலழகர் உரைப் புத்தகப்படியே அதிகார
சையையும், குறள் வரிசையையும் அமைத் துள்ளேன்.

"ஓரா தெழுதினே னாயினு மொண்பொருளை, ஆராய்
கொள்க வறிவுடையார்—சீராய்ந்து, குற்றங் களைந்து குறை
ப்து வாகித்தல், கற்றறிந்த மாந்தர் கடன்" என்பதும்,
ருந்ததிக் கற்பினாள் தோளும் திருந்திய, தொல்குடியில்
ண்டார் தொடர்ச்சியும்—நூலின், அரிலகற்றுங் கேள்வியார்

புமிம் மூன்றும், திரிகடுகம் போலு மருந்து" என்பதும்,
திய உரையாசிரியர்கள் சில குறள்களில் வேறு வேறு

திருவள்ளுவர் திருக்குறள்.

பாடங்கள் கொண்டிருப்பதும் திருக்குறளின் மூல பாட
களில் புகுந்திருந்த எழுத்துப் பிழைகளையும் சொற் பிழை
களையும் திருத்தும்படியான துணிவை எனக்குத் தந்தன.

எனது உரையில் பொருள் என்னும் சொல்லோ
தொடங்கிப் பதவுரை எழுதியுள்ளேன்; அவ்வுரையி
வருவிக்கப்பட்ட சொற்களை ( ) இவ் வடையாளங்களு
அமைத்துள்ளேன்; அகலம் என்னும் சொல்லோ
தொடங்கி இலக்கணக் குறிப்பு, வினா விடை, மேற்கோ
பாடபேதம் முதலியவற்றைக் குறித்துள்ளேன்; கருத்
என்னும் சொல்லோடு தொடங்கிக் கருத்தினைக் கூறியு
ளேன். என் உரையைப் படிக்கத் தொடங்குபவர்கள்
முன் இலக்கிய இலக்கண ஆராய்ச்சி யில்லாதார், முத
முறை படிக்கும்போது பொருளையும் கருத்தையும் மாத்தி
படிக்குமாறும், நூல் முழுவதையும் ஒரு முறை படித
முடித்து நூலை இரண்டாம் முறை படிக்கும்போது அக
தையும் சேர்த்துப் படிக்குமாறும் வேண்டுகிறேன்.

அவையடக்கம் கூறுதல் பேரறிவுடையார் வழக்க
லின், அஃதில்லாத யான் அதனைக் கூறாது விடுகிறே
தமிழ் மக்களெல்லாம் திருவள்ளுவர் திருக்குறளைக் கற்
கேட்டும் உணர்ந்து, அது கூறும் நெறியில் ஒழுகி மேம்
வேண்டு மென்று யான் கோருகிறேன். எல்லாம் வ
இறைவன் துணை.

தூத்துக்குடி.
9-1-1935 } உரையாசிரிய

திருவள்ளுவர் திருக்குறள்.

சிறப்புப் பாயிரம்.

(திருவள்ளுவ மாலை)

அசரீரி.

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

இ—ள். திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோடு—அருட் ல்வத்தையும் அதற்குத் தக்க தெய்வத்தன்மையையு முடைய திரு ளுவரோடு, உருத்தகு நற் பலகை உருத்திரசன்மர் ஒக்க இருக்க உரைத்து—அவர் இருத்தற்குத் தனது உருவத்தினாலே தக்க ல சங்கப் பலகையிடத்து உருத்திரசன்மர் ஒருவரே ஒப்ப ஏறியிருக்க ன்று கூறி, வானில் ஒருக்க ஓர் சொல் ஓ வென்றது—ஆகாசத்தி ந்து அவ்விடத்துள்ள புலவர் கருத்தை யெல்லாம் ஒற்றுமை ப்யும்படி ஒரு வாக்கியம் ஓ வென்று இரைந் தெழுந்தது.

"அருட் செல்வஞ் செல்வத்துட் செல்வம்" என்ப வாகலின், வென்றதற்கு அப்பொருள் உரைக்கப்பட்டது. தெய்வத்தன்மை தெய்வத்தின் அவதாரமாய் விளங்குகை. தெய்வத்தன்மை யில் க்கு அருளுளதாயினும் அதனாலே பெரும் பயன்விளையாமையின், தி சொல்லப்பட்டது. திருவள்ளுவ ரென்னும் பெயருள், திரு ன்பது உயர்வையும், வள்ளுவரென்பது வண்மையையுடைய ன்பதையும் விளக்கி நின்றன வாகலின், அது வேதத்தில் இலை ற காய்கள் போற் பல விடங்களினும் மறைந்து வெளிப்படா ந்த மெய்ப்பொருள்களை யெல்லாம் தொகுத்து உலகத்தாருக்குக்

திருவள்ளுவர் திருக்குறள்.

கொடுத் தருள்செய்தவ ரென்னுங் காரணம்பற்றி வந்த பெயராயிற்று. 'வள்' முதனிலை; 'அர்' இறுதிநிலை; 'உ' சாரியை. அம் முத னிலைக்குப் பொருள் ஈகை. 'உருத்திரசன்மர்' உருத்திரனால் அடைந்த

சன்மத்தையுடைய சென விரியும். அவர் முருகக் கடவுளது திருவவ தாரமாய் வணிக மரபிற் றோன்றிய மூங்கைப் பின்னையார். அசரீரி— அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதற் றெய்வம். அரங்கேற்றத் தொடங்கிய காலத்துத் தெய்வப் புலவரோடு ஒப்பவிருந்து கேட்டற் குத் தகுதியுடையோர் யாரென யாவரும் எண்ணமுற்று நின்றவழி இவ் வசரீரி வாக்கியம் பிறந்தது. என்ற தெனப் படர்க்கை வினை பாகக் கூறலின், ஆண்டு நின்று கேட்ட புலவர்களுள் ஒருவர் அதனை இங்ஙனம் பாடலாகச் செய்தன ரென்றறிக. வ. உ. சி. பாடம் 'என உரைக்க.' (க)

நாமகள்.

நாடா முதலுன் மறைநான் முகனுமிற்
பாடா விடைப்பா ரதம்பகர்க்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி யிலங்கிலேவேல் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

இ—ள். கூடாரை எள்ளிய வென்றி இலங்கு இலை வேல் மாற— கைவரைப் புறங்கொடுக்கச் செய்து இழந்த வெற்றியை உண்டாக்கி மிளங்காநின்ற இலைபோலும் வேற்படையை யுடைய பாண்டிய ராசனே, நாடா—உலகத்தார் விதி விலக்குக்களை அறிந்து உய்யும் வழியை நாடி, முதல் நான்முகன் காவில் நான் மறை பாடா—படைப் புக் காலத்திலே பிரமனது காவிலிருந்து இருக்கு முதலாகிய நான்கு வேதங்களையும் பாடி, இடைப் பாரதம் பகர்ந்தேன்—இடுவின காலத் திலே பாரதமாகிய வேதத்தைக் கூறினேன்; பின் என் வாக்கு வள்ளுவன் வாயது—அதற்குப் பிற்பட்ட இக் காலத்திலே எங்

சிறப்புப் பாயிரம்.

வாக்குத் திருக்குறளாகிய வேதத்தைச் சொல்லி வள்ளுவன் வாயின் மண்ணதாயிற்று.

தன் கணவனுகலின் நான்முகன் காவிலிருந்தென்றும், அவன் அவதாரமாகலின், வள்ளுவன் வாயதென் வாக்கென்றும் கூறினுள். பாரதம் வியாசரைக் கொண்டு சொல்லப்பட்டது. இதனுல் நான் மறை பூர்வ வேதமும், பாரதம் மத்திய வேதமும், திருக்குறள் உத்தர வேதமும் என்ற தாயிற்று. வேதம் மூவகைத் தென்பதூஉம் அவற்றது தோற்ற முறையால் இஃது வாக்கியப் பிரமாணத்திற் றொகுத்தது தென்பதூஉம் சொல்லியபடி. (உ)

இறையனர்.

என்றும் புலரா நியாணர்காட் செல்லுநிறும்

நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

• இ—ள். மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்—புலவர்க்கு அரச
ாகிய வள்ளுவன் வாயிற் பிறந்த திருக்குறளானது, என்றும் யாணர்
லராது நாட்செல்லுகினும் நின்று அலர்ந்து தேன் பிலிற்றும் நீர்மைய
ாய்—எக்காலத்துந் தன்னழகு கெடாது நெடுங்காலங் கழியினும்
லைபெற்று மலர்ந்து தேனைச் சொரிகின்ற குணமுடையதாய் விளங்கு
ாதலால், குன்றாத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்
பான்ம்—குறைவுபடாத செய்ய தளிர்களையுடைய கற்பகத்தினது
தய்வத்தன்மை பொருந்திய உயர்வாகிய மலர்போலும்.

திருக்குறளுக்கு, அழகு சொன்முடிபு பொருண்முடிபின்
ணங்களும், அலர்தல் எங்கும் பரவுதலும், தேன் பிலிற்றல் இருமை
ன்பங்களும் விளைத்தலுமாம். 'சொல்' ஆகு பெயர். இறையனார்

திருவள்ளுவர் திருக்குறள்.

கடவுளாகவின், இனி இதிற் சிறப்பதொன் றுளதாவது இன்றென்னும்
தணிவு தோன்ற என்று மென்றும், பின்னும் அதனை வலியுறுத்தற்கு
நாட் செல்லுகினு நின்றென்றும், வாழ்த்துப் பொருள்பட இவ்வாறு
கூறினார். இது அழியாது நின்று பெருகிப் பயன்படுமாறு சொல்
லிய படி. வ உ. சி. பாடம் 'நீர்மையதாம்'. (௩)

உக்கிரப் பெருவழுதியார்.

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

இ—ள். நான் முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனாய் நான்
மறையின் மெய்ப்பொருளை முப் பொருளாத் தந்து உரைத்த நூன்
முறையை—நான் முகன் தான் தன்னுரு மறைந்து திருவள்ளுவனாய்
அவதரித்து நான்கு வேதங்களி னுண்மைப் பொருளை அறம் பொருள்
இன்ப மென்னும் முப்பாற் பொருளாகத் தமிழில் தந்து கூறிய திருக்
குற ளெழுதிய திருமுறையை, சென்னி வந்திக்க—என்தலை வணங்
குக, வாய் வாழ்த்துக—வாய் துதிக்க, நன்னெஞ்சம் சிந்திக்க—நல்ல
மனம் தியானிக்க, செவி கேட்க—காது கேட்க.

'முப்பொருள்' ஆகுபெயர். இவ் வேதப் பொருள் ஆதியிலே

வேதஞ் சொல்லியோனுலேயே சொல்லப்பட்டமையால், உலகத்துச் சமயாசிரியர்களாலும் பிறராலும் ஒன்றற்கொன்று மாறுகக் கொள்ளப் பட்ட பொருள்கள்போல்வ தன்றென்பது தோன்ற மெய்ப்பொருளென்றார். "கலியுணர் புலமையிற் றலைமையோ னுகி, விதிமுறை வழாது முதுசிலம் புரக்கும், பெருந்தகைக் உக்கிரப் பெருவழுதி யென்னும், தன்னிக ரில்லா மன்னவர் பெருமான், தான்மேற் கொண்ட சிறப்பைப் பலரும், அறிந்தமேற் 'கொள்ளிவ் வாறு வழிபாடு.'

சிறப்புப் பாயிரம்.

றிஞன், "மன்ன னெப்படி மன்னுயி ரப்படி" ஆகலின். இப் புத்தகத்தை முன்னே பூகித்து மெய் மொழி மனக்களால் வணக்கஞ் செய்து பின் கேட்க வேண்டு மென்று சொல்லியபடி. (ச)

கபிலர்.

நினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—பனையளவு
வள்ளோங் குறங்கும் வளநாட வள்ளுவனூர்
வெள்ளோங் குறட்பா விரி.

இ—ள். பனை அளவு வள்ளோங்கு உறங்கும் வள நாட—பனையில் னர்க்கப்படுகின்ற பறவைப் பேடுகள் உலக்கைப் பாட்டால் கண் றங்குகின்ற வளம் பொருந்திய காட்டையுடைய அரசனே, ள்ளுவனூர் வெள்ளோங் குறட்பா விரி—திருவள்ளுவரால் அருளிச் ய்யப்பட்ட குறன் வெண்பா மிகப் பெரிய பொருளைத் தன்னுட் ாண்டு காட்டுதல், நினை யளவு போதாச் சிறு புன் னீர் நீண்ட பனை ளவு காட்டும் படித்து—நினையளியினி னளவுக்கும் போதாத சிறிய ல்லினது துளியின்க ணுள்ள பனி நீர் உயர்ந்த பனையின் அளவான தன் சாயையைத் தன்னுட்கொண்டு காட்டுங் குணம்போலுங் ணத்தை யுடைத்து.

'பனை' ஆகு பெயர். 'ஆல்' அசை. பறவை—கிளி முதலியவை. லக்கைப் பாட்டு, மகளிர் பரிமளப் பொடி இடிக்கின்றபோது பாடும் ட்டு. விரி—விரித்தல். எப்படி மிகச் சிறிய பனித் துளியிலே கப் பெரிய பனை மரத்தின் சாயை அடங்கி விளங்குகின்றதோ ப்படியே மிகச் சிறிய இக் குறள் வெண்பாவில் மிகப் பெரிய பாருள் அடங்கி விளங்குகின்ற தென்பதாம். இது சுருங்கியிருந்தும் ரிவான பொருளை விளக்குமாறு சொல்லியபடி. இது முதலியன ற்கத்துப் புலவராலே பாடப்பட்டன. (இ

திருவள்ளுவர் திருக்குறள்.

பரணர்.

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுது மயக்களந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தா
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

இ—ள். மாலும் குறளாய் வளர்ந்து இரண்டு மாண் அடி
ஞாலம் முழுதும் மயக்கு அளந்தான்—திருமாலும் குறளாய்ப் பிற
வளர்ந்து இரண்டு பெரிய அடிகளால் உலகமனைத்தையும் விரு
அளந்தான்; வாலறிவின் வள்ளுவரும் தம் குறள் வெண்பா அடி
வையத்தார் உள்ளுவ எல்லாம் தேர்ந்து அளந்தார்—மெய்யறிவி
டையர் திருவள்ளுவரும் தம்மினின்றுந் தோன்றி அக்கிலே நிற்கி
வெண்பாக் குறளின் இரண்டு சிறிய அடிகளால் அவ் வுலக மனைத்
முன்னோரால் நினைக்கப்பட்டவற்றையெல்லாம் ஆராய்ந்து அளந்

உம்மை யிரண்டும், முறையே தேவரிற் பெரியோரு
வென்றும், மனிதரிற் சிறியராய்க் காணப்பட்ட வென்றும் பொ
பட நின்றன. உவமானத்திலே வளர்தலும் பெருமையும் சொல்
லால், உவமேயத்திலே அவற்றுக்கு முரணிய நிலைமற்ற
தொழிலும் வருவிக்கப்பட்டன. மாலுக்குத் தானே குறளாத
பின்பு அக்கிலே நில்லாது வளர்தலும், பேரடிகளால் அளவு
உலகத்தை யளத்தலும், திருவள்ளுவருக்குத் தம்மினின்றுங் கு
உண்டாக்குதலும், அது தன்னிலே நிற்றலும், அதன் சிற்றடிக
அளவுபடாத நினைப்பின் விடயங்களை அளத்தலும் சொல்லப்
வாலும், வேற்றுமை யணி. நினைக்கப்பட்டனவெல்லாம் இதனை
வளவு செய்யப்பட்டமை சொல்லியபடி.

சிறப்புப் பாயிரம்.

நக்கீரர்.

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று.

இ—ள். தானே முழுது உணர்ந்து—தானே வேதப் பொரு
ாத்தையும் அறிந்து, தண் தமிழின் வெண்குறளால் ஆனா அறம்
லா அந் நான்கும் ஏனோருக்கு ஊழின் உரைத்தாற்கும்—தண்ணிய
ழின்கண் குறள் வெண்பாக்களால் விட்டு நீக்குதல் கூடாத அற
லாகிய அந் நான்கு பொருள்களையும் அவற்றை அறியாதவர்
க்கு அவர் எளிதி னறிய முறையாற் சொல்லியருளிய திருவள்ளு
க்கும், ஒண்ணீர் முகிலுக்கும்—ஒள்ளிய நீரைத் தந்த மேகத்துக்
உலகு மற்று என் ஆற்றும்—இவ்வுலகம் எதிர் நன்றி யாது
யும்? செயக் கிடந்தது ஒன்றும் இல்லை; வாழி—அவரும்
வும் வாழ்க.

ஆனாமை—நீங்காமை. தானே முழுதுணர்ந் தெனவே, ஆசாரி
பிருந்து பிறர் அறிவிக்க அறிந்திலரென்றதாயிற்று. முழுது
ன்னு மும்மை தொக்கது. 'ஒண்மை' இனிமை மேனின்றது.
ற-நூலின் முப் பொருள்களின் கிடக்கை யொழுங்கு. நாயனார்
டைச் சிறப்புச் சொல்லியபடி. (எ)

மாமூலனார்.

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

திருவள்ளுவர் திருக்குறள்.

இ—ள். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அந் நான்
திறம் தெரிந்து செப்பிய தேவை—அற முதலாகச் சொல்லப்
அவ் வேதப் பொருள்களாகிய நான்கனது கூறுபாட்டையும் தெரி
உலகத்தார்க்குச் சொல்லிய தேவனை, மறந்தேயும் வள்ளுவன்என்
ஓர் பேதை—மறந்தாயினும் ஒரு மனிதனாக உட்கொண்டு வள்
னென்று சொல்லுதற்கு ஒருவன் உளனாயின், அவன் ஓர் அறி
லாதவனாவன்; அவன் வாய்ச்சொல் அறிவு உடையார் கொள்ளா
அவனது வாயிற் பிறந்த அச் சொல்லை அறிவுடையார் கொள்ளா

அற முதலியவற்றின் கூறுபாடு—அவற்றினது தோகை வ
விரிகள். மறந்தேமுமென்றதனுல், நினைப்புடன் சொல்லுவே
பேதையிற் பேதையா மென்ற தாயிற்று. மூன்னும் பின்னும்
பாட்டுச்களில் இப் பெயர் தெய்வத்தன்மையைக் குறிப்பிக்கும்
நன்குமதித்து உயர்த்திச் சொல்லப்படுதலால், ஒரு மனிதனுக
கொண்டென்பது வருவிக்கப்பட்டது; அன்றி ஒலிக் குறிப்பிலு
சாதி யிழிவு தோன்ற வள்ளுவ னென்பா னெனினும் அமையும்.
குறிப்பொலியை வட நூலார் காருசுர மென்பர். தெய்வப் புல
அவமதிப்பி னிழிவு சொல்லியபடி.

கல்லாடர்.

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப வாறு சமயச்தார்—நன்றென
எப்பா லவரு மியையபவே வள்ளுவனூர்
முப்பான் மொழிந்த மொழி.

இ—ன். ஆறு சமயத்தார் ஒன்றே பொருள் எனின் (
என்ப—அறுவகை மதத்தோரும் ஒரு மதத்தார் தமது நூலிலே
மும் உயிரும் கடவுளுமாகிய பொருள்கள் ஒன்றே யென்று நா

•

சிறப்புப் பாயிரம்.

ரின், மற்றொரு மதத்தார் தமது நூலிலே அதனை மறுத்து அவை
ரு மென்று காட்டுவர்; வேறு எனின் அன்று என்ப—அப்படி
றென்று காட்டின், பின்னொரு மதத்தார் அதனை அன்றென்று
ப்பர்; ஆதலால், சமய நூல்களெல்லாம் இவ்வாறு மறுக்கப்படு
றன. வள்ளுவனூர் முப்பால் மொழிந்த மொழி நன்று என எப்பா
ரும் இயைப—திருவள்ளுவராலே முப்பாலாகச் சொல்லப்பட்ட
ல நன்றென்று கொள்ளுதற்கு எவ்வகைப்பட்ட பருதியோரும்
ன் படுவார்.

'மொழி' ஆகு பெயர். ஆறு மதமாவன வியாச மதம், மினி மதம், பதஞ்சலி மதம், கபில மதம், கணாத மதம், அகபாத மதம்; அன்றிச் சைவ வைணவ முதலியவற்றைக் கூறினு மாம். எச் யத்தாரு மென்னுத எப் பாலவரு மென்றதனுல், வேதத்துக்கு பட்ட சமயத்தாரே யன்றிப் புறப்பட்ட சைனம், பௌத்தம், லிய மதத்தாரும், பலவகைப்பட்ட சாதியாரும், தேசத்தாரும், லத்தாரும், பிறரும் தழுவப்படுத லறிக. இதுவே பொது வேத ன்றபடி. (கு)

சீத்தலைச் சாத்தனுர்.

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதிரு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுக்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் ருன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

இ—ள். வள்ளுவர் பா முறை தேர் முப்பால்—திருவள்ளுவரது க்களின் முன் பின் முறை தெரிதற் கிடனுகிய திருக்குறளானது, ம்மலையும்—கொல்லிமலை கோடிமலை பொதியமலை எனப் படுகின்ற ன்று மலைகளையும், மூந் நாடும்—குடநாடு புனனுடு தென்னுடு எனப் கின்ற மூன்று நாடுகளையும், மூந் நதியும்—பொருகைநதி காவிரி

திருவள்ளுவர் திருக்குறள்.

நதி வைகைநதி எனப் படுகின்ற மூன்று நதிகளையும், முப் பதியும்— கருவூர் உறையூர் மதுரை எனப் படுகின்ற மூன்று பதிகளையும், மு முரசும்—மங்கலமுரசு வெற்றிமுரசு கொடை முரசு எனப் படுகின் மூன்று முரசுகளையும், முத் தமிழும்—இயற்றமிழ் இசைத்தமிழ் நா கத்தமிழ் எனப் படுகின்ற மூன்று தமிழ்களையும், முக் கொடியும்— வில்கொடி புலிக்கொடி மீனக்கொடி எனப் படுகின்ற மூன்று கொ களையும், மும் மாவும்—கனவட்டம் பாடலம் சோரம் எனப் படுகின் மூன்று குதிரைகளையும், தாம் உடைய மன்னர் தட முடிமேல் தா அன்றே—தாம் முறையே யுடைய சேர சோழ பாண்டியர் என படுகின்ற மூவரசருடைய பெரிய முடிகளின் மேலுங் கொள்ளப்பட் மாலை யன்றே.

அன்றே வென்பது பல ரறி தேற்றம். 'மூப்பால்' ஆகு பெய
மும் முரசும் முத் தமிழும் அம் மூவரசர்க்கும் பொதுமையவாயினு
இம் முறை யுரிமை அவர் குடி மாபிற்கு இயைந்தன போலும். அர
மூவரும் மேற்கொண்ட சிறப்புச் சொல்லியபடி. (

மருத்துவன் தாமோதரனார்.

சிந்நீர்க் கண்டங் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குந்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்மூப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

இ—ள். காந்தி மலைக் குத்தும் மால் யானை—தன் பகை யெ
வெகுண்டு மலையைக் குத்துகின்ற பெரிய களிறு போலுன்
அரசனே, சிந்நீர்க் கண்டம் தெறிசுக்குத் தேன் அளாய் மோந்தபி
யார்க்கும் தலைக்குத்து இல்—சிந்நீர்ச் சருக்கரையையும் தைக்க
பட்ட சுக்கையம் தேனெடு கலந்தமோந்த பின் அகனல் தலைக்

சிறப்புப் பாயிரம்.

டையோர் யாவர்க்கும் தலைக்குத்து இல்லையாகும். வள்ளுவர்
ப்பால் சாத்தற்குத் தலைக்குத்துத் தீர்வு—நிருவள்ளுவர் அருளிச்
த மூப்பாலினுலே சித்தலைச் சாத்தனுர்க்குத் தலைக்குத்து இல்லை
ற்று.

யானை போல்பவனை யானை யெனலால், ஆகு பெயர். மூன்
ட்டப்பட்ட நூல்களி லெல்லாம் பல சொற்குற்றங்களும், பொருட்
றங்களும், கண்டு பொருது தலையில் அறைத்துகொண்டு வந்தமை
; புண் பட்டுக் குத்தல் உண்டாயிருந்தது; இதன்கண் நூர் குற்ற
காணப் பெருமையால் அது நீங்கிற்றென்க. எப்படி அம்
று சரக்கும் அதற்கு மருந்தாமோ அப்படியே இதற்கு இம் மூன்று
லும் மருந்தாயின வென்பதாம். நீர் வெண்ணூர் தொழிற் பெயர்
றுப் பொருளில் வந்தது. இதன் குற்றமற்று வினக்குறை
ல்லியபடி. (இ

நாகன் றேவனூர்.

காளார் மலர்ப்பொய்கை காங்குடைவார் தண்ணிரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதா
மப்பா லொருபாவை யாய்பவோ வள்ளுவனூர்
மூப்பால் மொழிமூழ்கு வார்.

இ—ள். தான் ஓர் மலர்ப் பொய்கை குடையவர் தண்ணீரை னா தொழிதல் வியப்பு அன்று—ஞானத்தோடு பொருந்திய மரை மலர்களே யுடைய ஒரு குளத்து நீரின்கண்ணே மூழ்குவோர் று தண்ணீரை விரும்பா தொழிதல் வியப்பைச் செய்வதன்று; ிருவள்ளுவர் முப்பால் மொழி மூழ்குவார் தாம் வானா அப்பால் ஒரு வை ஆய்பவோ—திருவள்ளுவரது முப்பால்களையுடைய நூலின் ாணே மூழ்குவார் நாம் வீடாத அப்பால் ஒரு நூலை விரும்புவரோ?

விரும்பார். ஆகலின், இதுவே வியப்பைச் செய்வதாம். வ.உ.சி உரை:— அதுபோல, இதுவும் வியப்பைச் செய்வ தன்று.

தானார் மலரினாலும், தாமரை மலரெனப்பட்டது. வியப்பை செய்வதை வியப் பென்றார். 'மூழ்குதல்' இங்கே கருத்து முழுதும் அழுந்தி நிற்றன்மை னின்றது. 'மொழி' ஆகு பெயர். 'ஓகாரம்' எதிர்மறை. விரும்புதலாகிய காரணத்தை ஆய்பவோ வெனக் காரிய மாக உபசரித்தார். அது வியப்பன் றென்றமையால், இது வியப் பென்ற தாயிற்று. உயர்வான பொருள் பெற்றோர்க்கு அதின் இழிவான பொருளையும் பெற விரும்புதல் இயல்பா யிருக்க, குளிர்ச்சி, இன்சுவை நறுமணம் முதலிய குணங்களாலே சிறந்த ஒரு தாமரைக் குளத்து நீரைப் பெற்றோர்க்கு அதனுற்றாலே அமைந்து பெற்று வேறு தண் ணீரைப் பெற விரும்பாமை வியப்பைச் செய்வதாயிற்று; ஆயினும் இதுகாறும் ஒரு நூலைக் கற்றோர்க்கு வேறு நூலைக் கற்க விரும்பு வன்றி விரும்பாமை யில்லாதிருக்க, இப்போது உள தாகலின், இதுவே பெரு வியப்பைச் செய்வ தென்ற தாயிற்று. இதனால் இத் தலைதத எந் நூற் பொருளும் அடங்கி யிருக்கின்றமை குறிப்பிக்கப்பட்டது பல நூல்களையும் கற்க விரும்புவோர்க்கு இது வொன்றே அமைந்தது சொல்லிய படி. (உ)

அரிசிற் கிழார்.

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து நிறந்தொறுஞ் சேர்த்—தருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

இ—ள். பரந்த பொருளெல்லாம் பார் அறிய வேறு தெரிந்து வேதத்திலே ஒன்றே டொன்று மயங்கி நின்ற நால் வகைப் பொருள் களையும் இப் பூமியி லுள்ளோர் அறிதற் பொருட்டு வேறாகப் பிரிக்க.

•

சிறப்புப் பாயிரம்.

நற்றொறுஞ் சேரச் சுருங்கிய சொல்லால் பொருள் விளக்க விரித்துச் சால்புதல் வல்லார்—அது அது தனது தனது வரையோடு சேரும் சுருங்கிய சொல்லால் பொருள் விளங்க விரியும்படி வைத்துச் சால்புதல் வல்லார், வள்ளுவ ரல்லால் ஆர்—வள்ளுவ ரல்லது ஒரு ரு மில்லை.

'பார்' ஆதி பெயர். நிறம்—அறம் முதலியவற்றின் கூறுபாடு. நுங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலிய அழகுகள் எப்படி வரால் அமைக்கப்பட்டனவோ அப்படிப் பிறரால் அமைக்கப்படுதல் டாமை காட்டிய தாயிற்று. நூலுக்கும் காயனர்க்கும் தகுதி ல்லியபடி.

(மே)

பொன் முடியார்.

வானின்ற தொங்கலாய் காசிபனுர் தந்ததுமுன்
கூனின் றளந்த குறளென்ப—நான்முறையான்
வானின்ற மண்ணின் றளந்தசே வள்ளுவனுர்
தானின் றளந்த தூறள்.

இ—ள். கான் நின்ற தொங்கலாய்—மணந் தங்கப் பெற்ற லையையுடைய பாண்டிய ராசனே, முன் காசிபனுர் தந்தது கூனின்று ந்த குறள் என்ப—முன் காசிபராலே தரப்பட்ட குறளே மண்ணின் ணே நின்று உலகத்தை அளந்த குறளென்று சொல்லுவர்; தாம் து வள்ளுவனுர் அளந்த குறள் நான் முறையான் வான் நின்று நின்று அளந்தது—தாம் இங்கே எழுத்தருளித் திருவள்ளுவ ல தரப்பட்ட குறள் நூலின் முறையோடு கூடி விண்ணின் ணே நின்றும் மண்ணின் கண்ணே நின்றும் உலகத்தை அளந்தது. •'கு' 'கூ'•என நீண்டது. ஆ றுருபு ஒடு வுருபின் பொரு வந்தது. அஃ குறள் வஞ்சித்துப் பெற் றளத்தலால் நான் றையோடு கூடாத தாயிற்று. இச் குறளுக்கு ஒலி வடிவும் வரி

வடிவு மென இரண்டு வழி வண்மையால், ஒலி வடிவுக் கிடம் வாலு
வின் வானின் றென்றும், வரி வடிவுக் கிடம் மண்ணுகலின் மண்ணி
றென்றும் கூறினர். இக் குறளுக்கு தான் முறையோடு கூடலு
வானிற்றலும் மிதத்தச் சொல்லி வேற்றுமை செய்யப்பட்டது
மூன் "மாலு" மென்பாட்டிலே நாயனுர்க்கும் மாலுக்கும், இ
பாட்டிலே நிருக்குறளுக்கும் மாலவதாரக் குறளுக்கும் ஒப்புமை
குறித்துச் சொல்லலால் வேறுபாடாம். உரைத்துப் பொருளை
லாம் இவ்வது அனைத்தற் சிறப்புச் சொல்லியபடி. (அ)

கோதமனுர்.

ஆற்ற லழியுமென் றக்கணர்க ணூன்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லுகரும் வல்லாரும் வள்ளுவனுர் முப்பாலைச்
சொல்லிடினு மாற்றல்சோர் வின்று.

இ—ள். அக்கணர்கள் நான் மறையை உரைத்துப் போற்
ஆற்றல் அழியும் என்று ஏட்டின் புறத்து எழுதார்—அக்கணர்க
நான்கு வேதங்களையும் வாய்ப் பாடமாகக் காப்பாற்றி, ஏட்டின்கண்
எழுதினைத்தால் வலியில்லாரும் ஒதுவராகலின் இவற்றின் வலிமை
குறையு மென்று ஏட்டின்கண் எழுதார்; வள்ளுவனுர் முப்பாலை
ஏட்டி எழுதி வல்லுகரும் வல்லாரும் சொல்லிடினும் ஆற்றல் சோ
வின்று—திருவள்ளுவரது திருக்குறளை ஏட்டின்கண் எழுதினைத்த
வலியுடையவரும் வலியில்லாரும் ஒதினாலும், வலிமை குறைதலில்லை

அவ் வேதத்திற்கு உதாத்தம் அநுதாத்தம் சுவரித மென்னுஞ்
சுரங்களின் வழுவாமல் ஒதல் வேண்டு மென்னும் வீதியுளதாகலின்
அதற்குத் தகுதியுடைய அக்கணரே அதிகாரிகளாயினர்; இதற்கு
அஃ தில்லாமையால், யாவரும் அதிகாரிகளாய் சென்றறிக. சொல்

சிறப்புப் பாயிரம்.

மெற்றதனுல் பொருளுணர்ச்சிக்கு இதற்கும் வலிமை வேண்டு
ம்பது பெறப்பட்டது. (அ)

ஆற்றல்—சொற் செறிவின் றிட்பம். இவ்வகை கூறலே, அவ்

கம் சொல்லின்கண்ணே தலைமை யுடைத்தென்பதூஉம், இவ்
தம் பொருளின்கண்ணே தலைமையுடைத் தென்பதூஉம் பெறப்
டன. ஒதப் படுதலின் அவ் வேதத்தினும் இது சிறப்புடைமை
ல்லியபடி. (எடு)

நத்தத்தனார்.

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நாலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

இ—ள். பாயிரத்தினோடு ஆயிரத்து முந்நூற்று முப்பது
ங் குறளும் பகர்ந்ததற்பின் போய் ஒருத்தர் வாய்க் கேட்க நால்
வோ—பாயிர நான் கதிகாரங்களோடு சேர்த்து தொகையாகிய
ய் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்களையும் ஒதி
ர்ந்த பின்பு, போய் ஒருவரது வாயாலே கேட்டறிதற்கு நாலு
வா? இல்லை மன்னு தமிழ்ப் புலவராய்க் கேட்க வீற்றிருக்கலாம்
லே பெற்ற தமிழிலே புலமை நிரம்பியோராகிப் பிறர் தம்மிடத்து
து கேட்க வீற்றிருக்கலாம்.

வீற்றிருத்தல் ஒரு சபை நடுவிலே உயர்வாகிய ஆதனத்தில்
பிருத்தல். இவற்றுட் பலவகைப்பட்ட நூல்களின் கருத்துக்க
ல்லாம் விளங்கி நிற்றலின், கேட்க நாலுளவோ வென்றார். புல
ரெனவே, உலமை நிரம்புதற்கு இவை ஆயிரத்து முந்நூற்று
பது குறள்களும் போது மென்பது பெறப்பட்டது. ஒதி
ர்க்கு வரும் இம்மைப் பயன் சொல்லியபடி. (எசு)

திருவள்ளுவர் திருக்குறள்.

முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.

உள்ளுக வுள்ளி யுரைத்த வுரைத்தகனைத்
தெள்ளுக வல்லே செயற்பால—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

இ—ள். வள்ளுவனுர் மூப் பாலின் மிக்க மொழி உண்டு னப் பகர்வார் எப் பாவலரிலும் இல்—திருவள்ளுவரது திருக் றளின் மேற்பட்ட நூலொன்று உளதென்று சொல்ல வல்லவர் எவ் கைப்பட்ட புலவருள்ளும் இல்லை; செயற்பால உள்ளுதல் உள்ளி ரைத்தல் உரைத்ததனைத் தெள்ளுதல் அன்றே—ஆதலால், நாம் க் நூலைக் குறித்துச் செயக் கடவன நாம் இதன் பொருளைச் சிற் த்துக் கொள்ளுதலும், சிந்தித்துப் பிறர்க்கு அதனைச் சொல்லுத லும், பிறராலே சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அன்றே!

'மொழி' ஆகு பெயர். ஒப்பது வடமொழி வேத மிருத்த ன் மிக்க மொழி யென்றும், தமிழின் மாத்திரமன்றி வடமொழி தலியவற்றி லுள்ள புலவரையுந் தழுவுதற்கு எப் பாவலரினு ன்றும் அறிவொப்புக் காண்டற்கு உரைத்ததனைத் தெள்ளுத ன்றும், கூறினர். உள்ளுத லெனவே கேட்டலும், தெளித னவே அவ்வா றெழுதலும் அடங்கின. இது பயிற்சி செய் ாழுதுமாறு சொல்லியபடி. (எ)

ஆசிரியர் நல்லந்துவனுர்.

சாற்றிய பல்கலையுந் தப்பா வருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
மூப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பா
ரெப்பா வலரினு மில்.

சிறப்புப் பாயிரம்.

இ—ள். சாற்றிய பல் கலையுந் தப்பா அரு மறையும் போற்றி ரித்த பொரு ளெல்லாம் தோற்ற—அறிவுடையோரால் சொல்லப் ட பல நூல்களாலும் தப்பாத அரிய வேதத்தினாலும் காப்பாற்றி ப்பித்திருந்து உலகத்தார்க்குச் சொல்லப்பட்ட விடயங்க ளெல்லாம் ானிடத்தே காட்டும்படி, மூப்பால் மொழிந்த முதற் பாவலர் பார் எப் பாவலரினும் இல்—நிருக்குறளைச் சொல்லிய திருவள்ளு வர யொப்பவர் எவ்வகைப்பட்ட பாவலருள்ளும் இல்லை.

தம்மாலே சொல்லப்பட்டவற்றில் வழு வுருமையால் தப்பா ன்றும், பொரு ளுணர்தற்கே யன்றி ஓதுதற்கும் எளிதன் முகலின் ந வென்றும் விசேடணஞ் செய்யப்பட்டது. 'எப்பாவலரினு மில்' தற்கு முன்னுரைக்கப் பட்ட படியே கொள்க. முதற் பாவலர்

தன்மையை யுடைய பாவலர்; நால் வகைப் பாக்களில் வெண்பாக்
நம் அவற்றுள்ளும் குறன் வெண்பாவும் தலைமை பெற்று நிற்ற
ன், அக் குறன் வெண்பாவால் நூல் செய்த வல்லமை யுடைய
ன்று மாம். புலமையிலே காயனுருக்கு ஒப்பின்மை சொல்லிய
ட. (அ)

கீரந்தையார்.

தப்பா முதற்பாவாற் றுமாண்ட பாடலினுள்
மூப்பாலி னுற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

இ—ள்: எப் பாலும் வை வைத்த கூர் வேல் வழுதி மனம்
ழ—எவ்விடத்திலும் கூர்மை வைத்த சிறப்புப் பொருந்திய வேல
டைய பாண்டிய ராசன் மனம் மகிழ, தப்பா முதற் பாவால் தாப
ண்ட பாடலினுள் மூப் பாவின் நாற் பால் மொழிந்தவர்—சொல்லட
ட பொருள் வழுவாமல் முதன்மையுடைய பாவாலிய குறள்

திருவள்ளுவர் திருக்குறள்.

வண்பாக்களிலே தாம் மாட்சிபெற்ற பாடற்றொழிலினுலே மூன்
ல்களிலே அறம் முதலிய நான்கு பகுதிப் பொருளையும் திருவா
லர்ந்தவர், தெய்வத் திருவள்ளுவர்—தெய்வத்தன்மையையுடைய
ருவள்ளுவ நாயனார்.

கூர்—சிறப்பு. நான்கினுள் மூன் றடங்குவ தன்றி மூன்றினுள்
ன் றடங்காமையின், வியந்து கூறப்பட்ட தாயிற்று. நூல் செய்
நப்பும், அதனுல் அரசனை மகிழ்வித்தமையும் சொல்லியபடி. (அ

சிறு மேதாவியார்.

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய மூப்பத்து மூன்றென்றாழ்—கூடுபொரு
ளெள்ளி லெழுப திருபதிற் றைந்நின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

இ—ள். வள்ளுவர் சொன்ன வகை—திருவள்ளுவரா
சொல்லப்பட்ட திருக்குறளின் அதிசார வகை, பாயிரம் நான்கு

ாயிரம் நான் கதிகாரத்தை யுடைத்து; அறம் மூப்பத்து மூன்று—
றம் மூப்பத்து மூன் றதிகாரத்தை யுடைத்து; ஊழ் ஒன்று—ஊ
ரதிகாரத்தை யுடைத்து; பொருள் எழுபது—பொருள் எழு
திகாரத்தை யுடைத்து; இன்பம் இருபதிற் றைந்து—காமம் இ
த்தைத் ததிகாரத்தை யுடைத்து.

அறத்துப்பாலு ளடங்காது அதனை விட்டு நூற்கெல்லா
பாதுவாய் நிற்றலின் வீடொன்று பாயிர மென்றும், இம்மை
றுமை வீடு மூன்றும் பயத்தற் றெப்பிற்றுய் மூன்றனுண் முதனி
லின் விளக்கற மென்றும், யாவர்க்கும் பொதுப்பட நாடித் தொகு
ப் பட்ட அறத்தின் கூறுபாடு இவையே யாகலின் நாடிய் மூப்பத்
முன் றென்றும், முன்னின்ற அறமும் பின்னின்ற இன்பமும் வ
டுதற்குத் துணையாய் நிற்றலின் கூடு பொரு ளென்றும், அ

சிறப்புப் பாயிரம்.

பாருளின் பாரு பாடுக வெல்லாம் இவற்றி னடங்குதலின் என்னி
ல்முப தென்றும் கூறினர்.

என்னல்—இசைத்தல். சில பழைய நூல்களிலே சிலவற்றைச்
நியாரும் சமயத்தாரும் மிகுத்தும் குறைத்தும் வேறு படுத்தலால்
ப்படிப்பட்ட வேறுபாடு இதற்கும் வரினும் வருமென்று ஆசங்
த்து, இத னதிகாரங்களுக்கு இங்ஙனந் தொகை செய்தார். பின்
வ்வாறு தொகை செய்யப்பட்டு வருவனவற்றிற்கும் இதுவே கருத்
ாகக் கொள்க. மூப்பால்களுக்கும் அதிகாரத் தொகை சொல்லிய
டி. (உ)

நல்கூர் வேள்வியார்.

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்க
மாதானு பங்கி மறுவிற் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

• இ—ள். உப் பக்கம் நோக்கி உபகேசி தோள் மணந்தான்
த்தர மா மதுரைக்கு அச்சு என்ப—அப் பக்கத்தைக் குறித்துச்
சன்றோனுகிய உமா தேவியினது தோளை மணந்த கடவுளை வட
துரைக்கு ஆதார மென்று சொல்லுவர்; இப் பக்கம் மாதானுபங்கி
றுவில் புலச் செந் நாப் போதார் புனற் கூடற்கு அச்சு—இப் பக்கம்
மாதானுபங்கி யெனப்படுகின்ற குற்றமற்ற புலமையாகிய தேனைச்

சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரை யுடையவர் நீர் வளத்தை
டைய தென் மதுரைக்கு ஆதார மாவர்.

உப்பக்கம் இடைக்காடர் அரசன் தன் பாடலை அவமதித்தமை
ற்றிப் பிணங்கிச் சென்ற பக்கம். உப்பக்க நோக்கி யென்றது
வினையாலணையும் பெயர். கேசி திருமால்; இது அக் கடவுள் சகசி

திருவள்ளுவர் திருக்குறள்.

நாமத்திற் கண்டது. கேசிக்குப் பின்னே பிறந்தவன் உபகே
யென்றாயது, உபேந்திர னென்பது போல. மாதா அனுபங்
மாதாவை நிகராகக் கொண்டு நடக்கின்ற ஒழுங்கின னெனப்படுதலி
அவன் பின்னைமேலேபோல், இவர் உலகத்தார்மேல் அருள் செய்த
சொல்லப்பட்ட தாயிற்று. நாப் போ தென்றதற் கேற்பப் புலன
யிலே தேன் ஆரோபிக்கப்பட்டது. அச்சுப்போற் றாங்குதலா
அச் சென்றார். நாயனாராலே "திங்கட் குடையுடைச் சீர்சா
வழுதியுஞ், சக்கப் புலவருந் தழைத்தினி தோங்கிய" மதுரைக்
உண்டான சிறப்புச் சொல்லியபடி. வ. உ. சி. பாடம்:—'மாதா
பங்கி மருவு.' மாதானுபங்கி வள்ளுவர் மனைவியார். (உய

தொடித்தலை விழுத்தண்டினார்.

அறநான் கறிபொரு ளேழொன்று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

இ—ள். அறத் திறம் நான்கு—பாயிரம், இல்லறம், துறவற
ஊழ் என அறப் பாலினுட் பிரிவுகள் நான்கும், அறி பொருட் டி
ஏழ்—அரசு, அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, ஒழிபு எ
அறியப்பட்ட பொருட் பாலினுட் பிரிவுகள் ஏழும், காமத் தி
மூன்று எனப் பகுதி செய்து—ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்
அவ் விருபாற் கூற்று எனக் காமத்துப் பாலினுட் பிரிவுகண் மூன்
மாகப் பகுதி செய்து, பெறலரிய நாலும் மொழிந்த பெரு நாவல
—பெறுதற் கரிய அறம் பொருள் இன்பம் வீடு எனப் படு
நான்கு பொருளையும் சொல்லிய பெரு நாவலரே, ஒழிந்த பொரு
நன்கு உணர்வார் போலும்—அவற்று ளடங்காது ஒழிந்த பொரு
உளதாயின், அதனை நன்றாக அறிய வல்லவர் போலும்.

திற மென்றது அறம் முதலியவற்றோடுங் கூட்டப்பட்டது
வலரே யென்றமையால், பிறரால் அறியப்படுவ தன்றென்
யிற்று. முப்பா லியற் றொகையும், இவற்றி னடங்காதது ஒன்
ல்லை யென்பதும் சொல்லியபடி. (உ௰உ

வெள்ளி லீதியார்.

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

இ—ள். செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்
பாய்யா மொழிக்கும் பொருள் ஒன்றே—ஒருவராலே செய்ய
டாத மொழியாகிய வேதத்துக்கும் திருவள்ளுவரால் அருளி
சய்யப்பட்டதன் வழியி னொழுகுவோர்க்குப் பயன் விளைவிலே
பாய்படாத மொழியாகிய திருக்குறளுக்கும் பொருளொன்றே
ராயிற் செய்யா அதற்கு உரியர் அந்தணரே—ஆராயுங்கால், செ
ப்படாத அவ் வேதம் ஓதுதற் குரியவர் அந்தணரே; ஏனை யிதற்
ரியர் அல்லாதார் இல்—பொய்படாத இத் திருக்குறள் ஓதுதற்
ரியவ ரல்லாதவர் உலகத்தி லில்லை.

பூர்வ வேதத்தை நித்திய மென்பார் மதம் பற்றிச் செய்ய
மாழி யென்றார். அது வட மொழியும் இது தென் மொழியுமா
ன்று சில வேறுபா டுடையனபோல் தோன்றினும் நுண்ணுண
ா னோக்குவார்க்குக் கருத்து வேறுபடாமையின், பொருளொன்
யனத் தேற்றேகாரம் கொடுத்துக் கூறினார். 'செய்யா மொழி
பொய்யா மொழி' அன்மொழித் தொகைகள். இதற்குரிய ரல்
ா ரில் லென்றதனாலும் பொது வேத மாத லறிக. அதற்கு
தற்கும் பொருள் வேறா வென்றும், இதனை யோதற் கதிகா

திருவள்ளுவர் திருக்குறள்.

னாவார் யாவரோ வென்றும் நிகழ்கின்ற ஐய மொழித்தபடி. (உ

மாங்குடி மருதனார்.

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோ
ருள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

இ—ள். வள்ளுவர் வாய் மொழி மாண்பு—திருவள்ளுவ
வாயினின்றுந் தோன்றிய திருக்குறளினது மாட்சியைச் சொல்லி
ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி வேதப் பொருளாய்
விளங்கி—அது ஓதப்படுதற்கு எளிய சொற்களை யுடையதாகி
அறியப்படுதற்கு அரிய பொருள்களை யுடையதாகியும் வேத மெ
படுகின்ற பொருளாகியும் அவ் வேதத்தின் மிக விளங்கி, தி
அற்றோர் உள்ளுதொறு உள்ளுதொறு உள்ளம் உருக்கும்—குற்ற
றோர்கள் நினைக்குந் தோறும் நினைக்குந் தோறும் அவர்களுடை
மனத்தைக் கரைக்கும்.

ஓதற் கெளிதா யெனவே நவின்றோர்க் கினிமை நன் மெ
புணர்த்தல்களும், உணர்தற் கரிதாகி யெனவே ஆழ முடைமை
வேதப் பொருளா யெனவே விழுமியது பயத்தலும், பிறவுமா
அழகுகளின் அமைதி சொல்லப்பட்ட தாயிற்று. தீ தற்றோர் பெ
னாராய்ச்சிக் கேற்ற நுண்ணறி வுடையோர். உள்ளுதொ றுள்ளு
றுள்ள முருக்கு மெனவே, முன் காணப்பட்டதினும் பின் கா
படும் பொருள் சிறந்தும் விரிந்துந் தோன்றுத லுடைமை பெ
பட்டது. இதனது அற்புதமான குண முடைமைச் சிற
சொல்லியபடி. (உ

சிறப்புப் பாயிரம்.

எறிச்சலூர் மலாடனார்.

பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றாழாக—வாய
வறத்துப்பா னால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
றிறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

இ—ள். வள்ளுவனார் ஆய்ந்து நூலின் திறத்துப்பால் தேர்ந்து

திருவள்ளுவனார் அவ் வேதத்தின் கருத்துக்களை ஆராய்ந்து மாலே செய்யப்பட்ட நூலினது திறத்திற்குத் தக்க நன்மை டமையால் இவையே உரியவை யென்று தெரிந்து, பாயிரம் ன்கு—பாயிரம் நான் கதிகாரமும், இல்லறம் இருபான்—இல்லற ல் இருப ததிகாரமும், துறவறம் பன் மூன்று—துறவறவியல் ன்மூன் றதிகாரமும், ஊழ் ஒன்றாக—ஊழ் ஓ ரதிகாரமு முடை வாக, ஆய அறத்துப்பால் நால் வகையா உரைத்தார்—இவ் றாய அறத்துப்பாலைப் பாயிர முதலிய நால்வகை யுடைத்தாகக் றினார்.

முப்பாற் பொருள்களினும் முத்திக்குக் காரணமாதற் சிறப் டமையின், தூய துறவற மென்றார். துப்பு—நன்மை; அது ல்லா வருணாச்சிரமங்களுக்கும் பொதுவா யிருக்கை. அறப் பா லிய திகாரத் தொகை சொல்லியபடி. (உ௰௫)

போக்கியார்.

அரசிய லையைந் தமைச்சிய லீரைந்
துருவல் லரணிரண்டொன் றொண்கூ—ழிருவிய
றிண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை.

திருவள்ளுவர் திருக்குறள்.

இ—ள். அரசியல் ஐ யைந்து—அரசியல் இருபத்தைந் த கார முடைத்து; அமைச்சியல் ஈ ரைந்து—அமைச்சியல் பத்ததிக முடைத்து; அரண் இரண்டு—அரணியல் இரண்டதிகார முடைத் கூழ் ஒன்று—பொருளியல் ஓ ரதிகார முடைத்து; படை இருவி —படையியல் இரண்டதிகார முடைத்து; நட்புப் பதினேழ்— பியல் பதினே ழதிகார முடைத்து; குடி பதின் மூன்று—ஒழிபி பதின் மூன்றதிகார முடைத்து; எண் பொருள் இவை ஏழாம் எண்ணப்பட்ட பொருட் பாலுக்கு இவ் வியல்க ளேழாம்.

அரணுக்கு உருத்திட்பம் சிறத்தலின் உரு வல் லர ணென்று பொருளுடையார்க்கே ஒளி அமைவதாகலின் ஒண் பொருளெ றும், படைக்குக் கடும் போரிற் பின்கொடாத திண்மை உரித்த லின் திண்படை யென்றும் கூறினார். பிற் காலத்தார் அமை முதலிய ஐந்தனையும் அங்கவியல் என ஓ ரிய லாக்கியும் வழங்கு பொருட் பா லிய லதிகாரத் தொகை சொல்லியபடி. (உ௰

மோசி கீரனார்.

ஆண்பாலே ழாநிரண்டு பெண்பா லடுக்கன்பு
பூண்பா லிருபாலோ ராறுக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றுகக் கட்டுரைத்தார்
காமத்தின் வள்ளுவனார் கன்கு.

இ—ள். ஆண்பால் ஏழ்—ஆண்பாற் கூற்று ஏ ழதிகாரமு பெண்பால் ஆதிரண்டு—பெண்பாற் கூற்றுப் பன்னிரண் டதி மும், அடுத்து அன்பு பூண்பால் இருபால் ஒ ராறுக—ஒருவ யொருவர் அடுத்து அன்பைப் பூணுதற் பகுதி யுடைய ஆவிரு கூற்று ஆ றதிகாரமு மாக, மாண்பு ஆய காமத்தின் பக்கம் மூன்றுக காமத்தின் வள்ளுவனார் நன்கு கட்டுரைத்தார்—மாட்சிய

சிறப்புப் பாயிரம்.

துப் பாலின் இயல்கள் மூன்றுகப் பெயர் பெற்ற திருவள்ளுவர் கூறினர்.

இவையே பொருளிலக்கணத்துக் கமையச் சுனவியல் கற்பிய இரண்டாக்கப் பட்டன. காமத்துப் பா லிய லதிகாரத் கை சொல்லிய படி. (உரை)

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

ஐயாறு நாலு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனெ
யந்தா மரைமே லயன்.

இ—ள். அதிகாரம் நாலும் ஐயாறும் மூன்றுமா—அதிகாரம் மு முப்பத்து மூன்றுக, மெய்யாய வேதப் பொருள் பொய்யாது ப்க—வடமொழியி லிருந்த மெய்யாகிய வேதப் பொருள் ப்புரு வினங்கும்பொருட்டு, அத் தாமரைமேல் அயன்தான் ஞவனெத் தந்தான்—அழகிய தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் முகக் கடவுள்தான் திருவள்ளுவனெ உலகத்தார்க்குத் தமிழிற் து தந்தான்.

உலகு இங்கே மக்களை உணர்த்தி நின்றது. மெய்யாய வேதப்
ருள் பொய்யாது விளங்க வெனவே, இதற்குமுன் மெய்யாய
ருள் பொய்யாய் மறைந்தும், பொய்யாய பொருள் மெய்யாய்
ங்கியும் கிடந்தமை சொல்லப்பட்ட தாயிற்று. அதிகாரத் தொகை
டு நூற் பொரு ளியல்பு சொல்லிய படி. (உ௰அ)

மதுரைத் தமிழ் நாயகனார்.

எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பா
லில்லாத வெப்பொருளு மில்லையாற்—சொல்லாற்

33 5

திருவள்ளுவர் திருக்குறள்.

பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

இ—ள். எல்லாப் பொருளும் இதன்பால் உள—பலவ
நூல்களாலுஞ் சொல்லப்பட்ட எல்லாப் பொருளும் இந் நூலக
அடங்கி யிருக்கின்றன; இதன்பால் இல்லாத எப் பொருளும் இ
—இதனிடத்து இல்லாத யாதொரு பொருளும் எந் நூலகத்
இல்லை; சொல்லாற் பரந்த பாவால் பயன் என்—ஆதலால், வெ
லளவினாலே விரிந்த நூல்களாற் பயன் யாது? வள்ளுவனார் சு
பா வையத் துணை—திருவள்ளுவராலே தரப்பட்ட இந் நூ லொன்
மண்ணுலகத் தாருக்குத் துணையாத லமையும்.

எல்லாப் பொருள்களு மாவன, முதல் வழி சார்பென மூ வ
பட்ட அற நூல் பொரு ணூல் இன்ப நூல் வீட்டு நூல் என்ப வ
செம் பொருள் ஆக்கப் பொருள் குறிப்புப் பொரு ளென இம் மூ
யாற் கொள்ளக் கிடந்த காட்சிப் பொருள்களும் கருத்துப் பொ
களு மாம். தொழிலும் பண்பும் ஒரோ வழிப் பொரு ளெ
ஏற் புடைமையின், அவையும் இவற்றுள் அடங்கு மா றறிக. பின்
அதனை வலி யுறுத்தற்கு இதன்பா லில்லாத வெப் பொ
மில்லை யென்றார். சொல்லாற் பரந்த வெனவே, அவை வெ
ளாற் பரப்பின்மை பெறப்பட்டது. பரத்தல் பதி னா
நூறாயிர முதலிய கிரந்த அளவையால் விரிதல். சொல்
பரந்த நூல்களை ஆய்வோர் மலை யகழ்ந்து எலி பிடித்தல் போல
வருந்திச் சிறு பயன் கொள்ளுதலால், என் பய னென்றார். '
அசை. 'பா,' 'வையம்' ஆகுபெயர்கள். சின்னாட் பல் பி

சிற் றறிவுடையோர்க்கு விதி விலக்குக்கள் முற்றும் உள்ள
நெல்லிக் கனிபோலக் கண்டு தெளியுமாறு உணர்த்தித் தடுமா
தீர்த்தலின். வையத் துணை யென்றார். முற்றொருங் குணர
வார்க்கு இஃது இன்றியமையாச் சிறப்பிற் றென்றபடி. (உ

சிறப்புப் பாயிரம்.

பாரதம் பாடிய பெருந்தேவனார்.

எப்பொருளும் யாரு மியல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முப்பாற்றாப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

இ—ள். பாரதம் சீ ராம கதை மனுப் பண்டை மறை நேர்வன
ாரதம் பழைய சீ ராம கதையையும், மனு மிருதி பழைய வேதத்
யும் ஒப்பன வாகும்; எப் பொருளும் யாரும் இயல்பின் அறி
செப்பிய வள்ளுவர் செப்ப வரும் முப்பாற்கு நிகர் இல்லை—
வகைப்பட்ட பொருள்களையும் எவ்வகையோரும் அவற்றின்
மையோடு அறிய அவர்க்குச் சொல்லும் படிக்குத் திருவள்ளுவர்
ல்லலால் வந்த திருக்குறளுக்கு உவமானமாகத் தக்கது ஒன்றில்லை.

'மற்று' அசை. அறிதற் கரிய வேதாந்தப் பொருளு மென்
ந எப் பொருளு மென்றும், உயர் குலத்தாரே யன்றி ஏனையோரு
ன்றற்கு யாரு மென்றும், ஐயந் திரி பின்றி அறிய வென்றற்கு
ல்பி னறிவுற வென்றும், இதுவே சுருதி குரு விரண்டு மா மென்
துச் செப்பிய வென்றும் கூறினார். பண்டை யென்பது சீ ராம
தக்குங் கூட்டுக. கதா ரூபமா யிருந்து பாரத ராமாயண
னவும், விதி ரூபமா யிருந்து சுருதி மிருதி யெனவும் கூட்டிச்
ால்லப்படுதலால், உவமான உவமேயங்க ளாதல் அறிக. எப்
ாருளும் யாரு மியல்பி னறிவுறச் செப்புதல் வேதத்திற் கின்மை
ல், முன் முப்பாலின் மிக்க மொழி யென்ற அதனாற் பெறப்
ட வேதத்தி னொப்புமையை மறுத்தபடி. (௩௰)

உருத்திர சன்ம கண்ணர்.

மணற்கிளைக்க நீரூறு மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால்—பிணக்கிலா

வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறு மூறு மறிவு.

இ—ள். மணற் கிளைக்க நீர் ஊறும்—மணலைத் தோண்டுந் தோறும் நீர் பெருகும்; மைந்தர்கள் வாய் வைத்து உணத் தாய் முலை ஒண் பால் சுரக்கும்—புதல்வர்கள் வாய் வைத்து உண்ணுந் தோறும் தாயினது முலைக்கண் நல்ல பால் பெருகும்; பிணக்கு இலா வாய் மொழி வள்ளுவர் முப்பால் ஆய்தொறும் மதிப் புலவோர்க்கு அறிவு ஊறும்—அவை போல, பிணங்குதற்கு ஏது வில்லாத வாய்மைச் சொல்லை யுடைய திருவள்ளுவரது திருக்குறளை ஆராயுந்தோறும் அறிவுடைய புலவர்க்கு அறிவு வளரும்.

கற்பித மாகிய சாதி சமயங்களின் மானம் பற்றி உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும், சிறிதைப் பெரிதாகவும் பெரிதைச் சிறிதாகவும், தீயதை நல்லதாகவும் நல்லதைத் தீயதாகவும் புனைந்து பிறர் பிணங்கும்படி சொல்லப்பட்ட தல்லாமையால், பிணக்கிலா வாய் மொழி என்றார். மதிப் புலவோர்க் கறி ஊறு மெனவே அவர் அவ் வறிவைக் கொண்டு பிறர்க் கெல்லாம் விதி விலக்குக்களை கற்பித்தல் வேண்டு மென்ற தாயிற்று. இதனைச் சிலகாற் பயிறலின் அமையாது பலகாலும் பயிற்சி செயல் வேண்டு மென்ற படி. (௩௰௪)

பெருஞ் சீத்தனார்.

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினா
லோதிய வொண்பொரு ளெல்லா—முரைத்ததனாற்
றாதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

இ—ள். தாது அவிழ் தார் மாற—பொடியொடு விரிந்த பூ மாலையை யுடைய பாண்டிய ராசனே, ஏதம் இல் வள்ளுவர் இ

றன் வெண்பாவினால் ஓதிய ஒண் பொரு ளெல்லாம் உரைத்த
நால்—குற்றம் இல்லாத திருவள்ளுவர் இனிய குறள் வெண்பாக்க
ாலே நான்கு வேதங்களாலுஞ் சொல்லப்பட்ட ஒள்ளிய பொருள்
ளையெல்லாங் கூறினமையால், மே தக்கன தாமே தமைப் பயந்த
வதமே—மேம்பாட்டுக்குத் தக்கவை அக் குறள் வெண்பாக்
ளோ, முத னூலாய் நின்று அவற்றைப் பயந்த வேதங்களோ? நீ
ால்வா யாக.

தாம் தம்மை எனப் பட்டவை அவை அவற்றை என்னும்
ாருளைத் தந்து நின்றன. ஏகாரம் இரண்டும் வினா. பிற நூலா
ியர்க் கெல்லாம் அவ ரெதிரிக ளாலே மறுக்கப்பட்டு வருங் குற்றம்
ால்வது இவர்க்கு இல்லை யென்றற்கு ஏத மில் வள்ளுவ ரென்றும்,
ங் குறியவாய் நின்று கற்போர்க்கு வருத்தம் விளையாமை பற்றி
ன் குற ளென்றும், உணர்வுடையோராலே விரும்பப்பட்ட நற்
ண முடைமை பற்றி ஒண் பொரு ளென்றும் கூறினார். நூலாசிரி
க்கும், நூலுக்கும், நூலுதலிய பொருளுக்கும் தகுதி தோன்றச்
ால்லப்பட்ட விசேட குணங்களாலே இவ் வேதம் அவ் வேதத்
னுஞ் சிறப் புடைமை குறிப்பித்தபடி. (௩௰௨)

நரிவெருத் தலையார்.

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழி நூன்—மன்பதைகட்
குள்ள வரிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

இ—ள். இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந் நான்கும்
பதை கட்கு முன்பு அறியச் சொன்ன முது மொழி நூல் உள்ள
து என்று—இன்ப முதலிய இந் நாற் பொரு ளியல்புகளையும்
கட் பரப்புக்கு அக் காலத்தில் அறியும் வண்ணஞ் சொல்லப்

திருவள்ளுவர் திருக்குறள்.

ட்ட வட மொழி வேதமானது ஓதி யுணரப்படுதற் கரி தென்று
ள்ளுவர் அவை உலகம் கொள்ளக் குறள் மொழிந்தார்—தி
ள்ளுவர் அவற்றை உலகத்தார் எளிதி னுணரும்படி திருக்குறளை
றினார்.

முன் பறிய வெனவே, உற்சர்ப் பிணியாகலின், அக் கால தார்க்கு உணர்தற் கேற்ற ஆயுணீட்டியும் உணர்வு வலியும் இருந்த வன்பதா உம், அவசர்ப் பிணியாகலின் இக் காலத்தோர்க்கு அவை ல வென்பதா உம் பெறப்பட்டன. இவ் விரண்டும் " அவா வறு ல் " முதற் பாட் டையிற் காண்க. தேய வழக்கிற் படாதது ருந்திக் கற்போர்க்கு மாத்திரம் புலப்படுவதுமாய் எல்லா மொழி ட்கும் முற் பட்டுக் கடவுள் மொழியாய் நின்றலின், முது மொழி பன்றார். அறம் முதலிய நான்கும் பிரிவுபட்டுத் தோன் றுமைனை டைத் தாகலின், உன்ன வரி தாயிற்று. பழைய வேதம் உளதா ம் வே றிது சொல்லுதற்குக் காரணம் உணர்த்திய படி (உயிர

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார்.

புலவர் நிருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவனெனச் செப்ப—னிலவு
பிறங்கொளிமா லேக்கும் பெயர்மாலே மற்றுங்
கறங்கிருண்மா லேக்கும் பெயர்.

இ—ள். பூமேல் புலவர் நிருவள்ளுவ ரன்றிச் சிலவர் புல ரன்ச் செப்பல்—பூவுலகின்கண்ணே புலவர் நிருவள்ளுவ ரன்றி வேறு சிலரையும் புலவ ரென்று சொல்லுதல், மா லவு பிறங்கு ஒளி மாலேக்கும் பெயர் மற்றும் கறங்கு இருள் மாலே யும் பெயர் (செப்பல்)—மாலே யென்பது நிலவால் விளங்குகின்ற க்கிக்கும் பெயராக மற்றும் சூழ்கின்ற இருளை யுடைய அக்கிக்கு பெயராகச் சொல்லுதல் போலும்.

சிறப்புப் பாயிரம்.

செப்ப லென்றது பின்னும் கூட்டப்பட்டது. புலமையால் வேறு வகைப்பட்ட நூலுணர்ச்சிகளே யெல்லாம் ஒருக்கே ண்ட பேரறி வுடைமையாம். உயர் வொப்பிற்ற இவ்வாது புல ரையைக் குறித்து கோக்குங்கால் எனையோர் புலமை புலமையன்றாய் நிதலின், இவ்வாறு கூறினர். புலவ ரென்பது காயனர்க்கே ணப் பெயரா மென்றபடி. (உயிச)

மதுரையறுவை வாணிகர் இளவேட்டனார்.

இன்பமுந் துன்பமு மென்று மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ—வன்பொழியா
திருக்குறள்—அறப்பால்.

பொருள். இல் வாழ்வான் என்பான்—இல் வாழ்வான் என் சொல்லப்படுபவன், துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தா கும்—(இல் வாழ்க்கையைத்) துறந்தவர்க்கும் வறியவர்க்கும் (தற்ற இலராய்த் தம்பால் வந்து) இறந்தவர்க்கும், துணை—(உதவி புரியு துணை (யாவன்).

அகலம். துவ்வாதார் என்பது 'துவ்வு' என்னும் பகுதியா
பாகப் பிறந்த எதிர்மறை வினையாலணையும் பெயர். துவ்வு—ஐ
பொறி நுகர்ச்சி; அதற்கு உரிய பொருள்கள் இல்லாதாரைத் துவ்வ
தார் என்றார். இறந்தார்க்குச் செய்யும் உதவியாவது, அவர் உடலை
யீமி விடுதல் முதலியன.

கருத்து. மேற் கூறிய மூவரோடு இம் மூவர்க்கும் இல்வா
மான் துணை.

11

கூ. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றாங்
கைம்புலத்தா ரோம்ப றலை.

பொருள். தென் புலத்தார்—மெய்யறிவுடையார், தெய்வம்—
மான் தொழும்) தெய்வம், விருந்து—விருந்தினர், ஒக்கல்—உறவினர்
ான்—(இல் வாழ்வானுகிய) தான், ஐம்புலத்தார்—(இவ்) வைந்து
டத்தவரையும், ஓம்பல்—பேணுதல், தலை—(இல்லறங்களில்) தலை
ய அறம்.

அகலம். தென்—அழகிய. புலம்—அறிவு. அழகிய அறிவா
து, மெய்யறிவு. அதனால் 'தென் புலத்தார்' என்பதற்கு 'மெய்
றி வுடையார்' எனப் பொருள் உரைக்கப்பட்டது. விருந்து-புதுமை.
ிது ஈண்டுப் புதியராய் வந்த விருந்தினரைக் குறித்து நின்றது.
ன்று என்பது எண்ணிடைச் சொல். 'ஆங்கு' அசை. தலையாய
ுத்தைத் 'தலை' என்றார். தாமந்தர், நச்சர் பாடம் 'ஐம்புலத்தா

அறன்வலி யுறுத்தல்.

ரோம்பல்'. மற்றை மூவர் பாடம் 'ஐம்புலத்தா ரோம்பல்'. தெ
புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் (என்னும்) ஐம்பு
என்பது நேரே வழு. ஆசிரியர் இக் குறளின் முதலடியா
ஐம்புலத்தாரைக் கூறினரே யன்றி ஐம்புலத்தைக் கூறிற்றிலை
ஆகலான், அவர் பின்னர் ஐம்புலத்தாரை யோம்பல் என்று கூறுவ
யன்றி ஐம்புலத்தாற்றை யோம்பல் என்று கூறார். அன்றியும், 'ஆ
என்பதற்கு நெறி என்பது தானே பொருள்? 'ஐந்திடத்து நெ
என்பதற்குப் பொருள் 'ஐந்திடத்திற் சேர்க்கும் நெறி' அல்ல
ஐந்திடத்திற் செல்லும் நெறி' என்பது தானே? அப் பொரு

ண்டு எவ்வாற்றாலும் பொருத்த முடைய தன்று. இக் காரண
னால் 'ஐம்புலத்தா றோம்பல்' என்பது ஒருவன் படிக்க மற்றெ
வன் கேட்டு ஏடு பெயர்த் தெழுதியதால் கோக்த பிழை என்
கொள்க. பிற நூலாசிரியர்களும் 'ஐம்புலத்தா ரோம்பல்' என்
கூறியிருக்கிறார்கள். தென் புலத்தார் என்பதற்குப் பிதிரர் என்
உரைப்பாரும் உளர்.

கருத்து. இக் குறளிற் கூறிய ஐந்து இடத்தவரையும் பே
தல் இல்லறங்களில் தலையாய அறம்.

ச. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

பொருள். வாழ்க்கை பழி அஞ்சி பாத்து ஊண் உடைத்
யின்—இல் வாழ்க்கை மறத்தை விடுத்து (மேலே கூறிய பலர்க்
பகுத்து (கொடுத்து) உண்ணுதலை உடைத்தாயின், வழி எஞ்சல் எ
ஞான்றும் இல்—(தனது) நெறியில் குறைபாடுறுதல் என்றை
இல்லை.

அகலம். இல் வாழ்க்கை என்பது இல் வாழ்வார்மேல் நி
றது. இல் வாழ்க்கை நெறியில்—இல் லறம் புரிதலில். பெ

திருக்குறள்—அறப்பால்.

ன்மை, மீக்கனின்மை, முதலியவற்றால் இல்லறம் குறைபாடுற
ச் குறைபாடு பழி யஞ்சிப் பாத் தூணுடையார்க்கு இல்
ன்றவாறு. நாமக்நீர் பாடம் 'பாத்த லுடைத்தாயின்'. நரிசர் பாட
டைத்தாய வாழ்க்கை'.

கருத்து. பாவஞ் செய்யாது பலர்க்கும் பகுத்து கொடுத்
ண்ணும் இல் வாழ்க்கை எஞ்ஞான்றும் இனிது நடைபெறும்.

ஞ. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

பொருள். இல் வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்
ன்—இல் வாழ்க்கை அன்பும் அறமும் உடைத்தாயின், அது பண்
பனும்—அவ் வுடைமை (இல் வாழ்க்கையின்) பண்பும் பயனு மா

அகலம். ண்டும் இல் வாழ்க்கை என்றது இல் வாழ்வாை றித்து நின்றது. பண்பு—தன்மை. பயன்—ஊதியம். நூ டம் 'உடைத்தாய வில்வாழ்க்கை'; பயனுர் தரும்'.

கருந்து. அன்புடைமையும் அறனுடைமையும் முறையே ாழ்க்கையின் பண்பும் பயனும் ஆம்.

சு. அறத்காற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்காற்றி போஒப்பெறுவ தெவன்?

பொருள். அறத்து ஆற்றின் இல் வாழ்க்கை ஆற்றின்— ாழ்க்கை நெறியிலே இல் வாழ்க்கையை (ஒருவன்) நடாத்தி றத்து ஆற்றில் போய் பெறுவது எவன்—(அவன்) துறவு நெறி)சன்று (இல்வாழ்வான் பெறுவதினும் மிகுதியாகப்) பெறும் ே ாது? (ஒன்றும் இல்லை)

அறன் வலி யுறுத்தல்.

அகலம். "அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" என்றமை ால், அறம் என்பதற்கு இல் வாழ்க்கை என்று பொருள் உரைக்கப் ட்டது. ஒர அனபெடை இசை நிறைக்க வந்தது. நாமந்நர் ாடம் 'இல்வாழ்க்கை யாற்ற'.

கருந்து. இல்வாழ்க்கை நெறியிலே இல் வாழ்க்கையை நடா த்துகிற இல்வாழ்வானும் துறவு நெறியிலே துறவை நடாத்துகிற துறவியும் பெறும் பேறு ஒன்றே. 16.

எ. இயல்பிஞ னில்வாழ்க்கை வாழ்பவ னெல்பான் முயல்வாரு ளெல்லாந் தலை.

பொருள். இயல்பிஞன் இல் வாழ்க்கை வாழ்பவன் என்பான்— இல் வாழ்க்கைக்குரிய) இயல்போடு (கூடி) இல் வாழ்க்கையை ாழ்பவன் என்று சொல்லப்படுபவன், முயல்வாருள் எல்லாம் தலை— வீட்டுப் பேற்றை அடைய) முயல்பவரு ளெல்லாம் முதன்மை ானவன்.

அகலம். ஆன் என்னும் உருபு ஒடு என்னும் பொருளில் ந்தது. நாமந்நர் பாடம் 'என்ப', மற்றை நால்வர் பாடம் என்பான்'.

கருத்து. இயல்பினன் இல் வாழ்வான் வீட்டுப் பேற்றை டையது முயல்வாருள் முதன்மையானவன். 17.

அ. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
சோற்றி னேன்மை யுடைத்து.

பொருள். ஆற்றின் ஒழுகி அறன் இழுக்கா இல் வாழ்க்கை— னைய நிலையினரை அவரவர் நெறியின்கண்ணே நடாத்துவித்து ல்லறத்தின் தவறுத இல் வாழ்க்கை, சோற்றலின் சோன்மை டைத்து—தவ மிழைத்தலைப் போல மேம்பாடு உடையது.

திருக்குறள்—அறப்பால்.

அகலம். நிலையை ஆசிரமம் எனவும், நிலையினை ஆசிர எனவும் வடநூலார் கூறுவர். அவர் ஆசிரமங்களைப் பிரமச்சரிய பிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என நான்காகவும், அவ் சிரமிகளை முறையே பிரமச்சாரி, பிருகத்தன், வானப்பிரத்தன், சந் பாசி எனவும் கூறுவர். பிரமச்சாரி—மாணவன். பிருகத்தன்— இல் வாழ்வான். வானப்பிரத்தன்—மனையாளோடாயினும், தனித் யினும் வனத்திற் சென்று தவம் புரிவோன். சந்நியாசி—துற மாணவன் நிலையினை இல் வாழ்க்கையில் அடக்கியும், தவம் பு வோன் நிலையினைத் துறவில் அடக்கியும் நிலையினை இல் வாழ்க்கை துறவு என இரண்டாகவும், அந் நிலையினரை முறையே இ வாழ்வான், துறவி எனவும் தமிழ் நூலார் கூறுவர். நடாத் வித்தலாவது, அவருக்கு உண்டி முதலியன உதவி, அவர் த நெறியில் தளராது செல்லும்படி செய்தல். மணக்குடவர் பாட சோற்றலின்'. மற்றை உரையாசிரியர் நால்வர் பாடம் 'சோற்ற லின்'. 'சோற்றலின்' என்பது தொடை யின்பம் பயத்தலாலு இல் வாழ்க்கை என்பது போல ஒரு செயலைக் குறிக்கின்றமையு லும், 'சோற்றலின்' என்பதே ஆசிரியர் பாடம் எனக் கொள்ள பட்டது.

கருத்து. இல் வாழ்க்கை துறவினைப்போலவே மேம்பா டையது. 1

கூ. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

பொருள். அறன் எனப்பட்டது இல் வாழ்க்கையே—அ
ன்று சிறப்பித்து (தூல்களால்) சொல்லப்பட்டது இல்வாழ்க்கை
ஆதும் பிறன் பழிப்பது இல்லாயின் நன்று—துறவும் மற்றொருவ
பழிப்பதற்கு எதுவாகிய கூடா வொழுக்கம் இல்லையாயின் அறமா

இல் வாழ்க்கை.

அகலம். எனப் பட்டதே என்பதனின்று காரத்தைப் பி
த்து இல் வாழ்க்கை என்பதனோடு சேர்த்துப் பொருள் உரைக்க
பட்டது. அது பிரிநிலைக்கண் வந்தது. எண்ணுக் கூறப் படாத
சேய்மையின்கண் கூறப்படுதலானும், ஆண்டு "உலகம் பழி
த்த தொழித்து வீடன்" என்று கூறப்படுதலானும், அஃது என்ப
தற்குத் துறவு என்று பொருள் உரைக்கப்பட்டது. உலகம் பழித்
தது ஒழியாவிடின், துறவு அறம் எனப்படுதற் குரிய பெருமை
யுடைய தன்று என்றவாறு. "வீழ்நான் படாஅமை" என்னும்
தொடக்கத்துக் குறளில் அறத்தை நன்று எனக் கூறியிருத்தல்
காண்க.

கருந்து. இல் வாழ்க்கையே அறம்; கூடா வொழுக்கம்
இல்லையேல், துறவும் அறமாம்.

10.

ய. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

பொருள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்—பூவுலகத்
தில் (இல் வாழ்வான்) வாழவேண்டிய படி வாழ்பவன், வான் உறை
தெய்வத்துள் வைக்கப்படும்—வானுலகத்தில் வாழும் தேவருள்
ஒருவனாக) மதிக்கப்படுவான்.

அகலம். அவ்வாறு வாழ்பவன் இறந்த பின்னர் வானுலகத்
தேவனாய் வாழ்வன் என்று உரைப்பினும் அமையும், தொழுனைப்
பாணிய பெண்டிர் இறந்த பின்னர் வானுலகத்தில் பெருஞ் சிறப்புப்
பெறுவர் என்று ஆசிரியர் அடுத்த அதிகாரத்தில் கூறுகின்றமையால்.

கருந்து. இல் வாழ்க்கையை ஒழுக்காக நடாத்துகின்றவன்
தேவனாவான்.

20.

திருக்குறள்—அறப்பால்.

நடம் அதிகாரம்—வாழ்க்கைத் துணை நலம்.

அஃதாவது, இல் வாழ்க்கைத் துணையாகிய மனையாளது மாட்சி.

க. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டானை
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

பொருள். மனை தக்க மாண்பு உடையளாகி தன் கொண்டான் வள தக்காள்—இல் வாழ்க்கைக்குத் தக்க மாட்சிமை யுடையவளாகி தன்னைக் கொண்ட (கண)வனது வரும்படிக்குத் தக்கபடி வாழ்கின் வள், வாழ்க்கை துணை—இல் வாழ்க்கைக்குத் துணை (யாவள்).

அகலம். மனை, வளம் என்பன நான்காம் வேற்றுமை தொகைகள். மாட்சிமை—நற் குண நற் செய்கைகள். மனை என்ப ஆகுபெயர், மனை வாழ்க்கைக்கு ஆயினமையால். நாமநீர் பாட 'வாட்கை'.

கருந்து. இல்வாழ்க்கைக்குத் தக்க மாண்பும் கணவன் வ படிக்குத் தக்க வாழ்வும் உடையவள் வாழ்க்கைத் துணை.

உ. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

பொருள். மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின்—இல்வா கைக்குரிய நற் குண நற் செய்கைகள் மனையாளிடத்து இல்லையாய் வாழ்க்கை எனை மாட்சித்து ஆயினும் இல்—(அவ்) இல் வாழ்க் எவ்வளவு பெருமையை யுடையதாயினும் (அஃது) இன்றும்.

கருந்து. இல் வாழ்க்கைக்குத் தக்க மாண்பு இல்லாளி இல்லையேல், இல் வாழ்க்கை தனது பெருமையை இழந்து விடும்.

ங. இல்லதெ ணில்லவண் மாண்பரா லுள்ளதெ
ணில்லவண் மாணாக் கடை.

பொருள். இல்லவன் மாண்பானால் இல்லது என்—இல்லாள் ற் குண ற் செய்கைகளை உடையளானால் (அவள் கணவனுக்கு) இல்லாதது யாது? இல்லவன் மாணாக்கடை உள்ளது என்—இல் ாள் நீக் குணம் நீச் செயல் உற்றவிடத்து (அவள் கணவனுக்கு) ுள்ளது யாது?

அகலம். நருமர் பாடம் 'மாண்பாயின்'. மாண்பு என்னும் ுணத்தை இல்லாள் என்னும் குணியின்மேல் ஏற்றி உபசரித்தார்.

கருந்து. இல்லாள் ற் குணம் ற் செய்கை உடையளாயின், ணவன் எல்லாச் செல்வங்களையும் பெறுவன்; நீக் குணம் நீச் செய்கை உடையளாயின், கணவன் எல்லாச் செல்வங்களையும் ழப்பன். 23.

ச. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
நிண்மையுண் டாகப் பெறின்.

பொருள். கற்பு என்னும் நிண்மை உண்டாகப் பெறின்— ற்பு என்று சொல்லப்படும் உறுதிப்பாடு உண்டாகப் பெற்றால், பெண்ணின் பெறும் தக்க யா உள—பெண்ணைப்போல (ஒருவன்) பெறும் தகுதியான பேறுகள் யாவை யுள்ளன? (ஒன்றும் இல்லை

அகலம். பெறப்படுவது பேறு. நச்சர் பாடம் 'பெண் ிறப்புத் தெய்வப் பிறப்பாதும்'. மற்றை ஆல்வர் பாடம் 'பெரு க்க'. 'தக்க' என்னும் சொற்குத் 'தகுதியான பேறுகள்' என் து பொருள். 'பெருந்தக்க' என்பதற்குப் 'பெரிய தகுதியான பேறுகள்' என்பது பொருள். 'தகுதியான பேறுகள்' என்பதே பாதும். 'பெரிய தகுதியான பேறுகள்' என்பது மிகை ுன்றியும், 'தகுதி' என்னும் சொல் அத்தகைய அடை மொழியை ற்காது. 'பெறுமவற்றுள்' எனவும், 'மக்கட் பேறு' எனவும் ஆசிரிய ின்னார்க் கூறுதல் காண்க. இக் காரணங்களால், 'பெருந்தக்க

ன்பது ஒருவன் படித்து மற்றொருவன் கேட்டு எடு பெயர்த் தெழு யதால் நேர்ந்த பிழை என்று கொள்க.

கருந்து. கற்புடைய இல்லாளைப் பெறுதலே ஒருவன் பெறுந் குதியான பேறு. 24.

ரு. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

பொருள். தெய்வம் தொழான் கொழுகன் தொழுது எழுவாள் -(துயில் நீக்குங்கால்) கடவுளே வணங்காளாய்க் கணவனே வணங் ிக் கொண்டே எழுபவன், பெய் என மழை பெய்யும்—பெய் என்று சால்ல மழை பெய்யும்.

அகலம். துயில் நீக்குங்கால் கொழுகனைத் தொழுது கொண் டே எழுவான் எனவே, துயில் கொள்ளுக்காலும் துயிலுங்காலும் கொழுகனைத் தொழுது கொண்டே துயில்வான் என்பதும், தெய்வர் தொழுதல் மற்றைய காலத்திலே என்பதும் பெறப்பட்டன. தொழு ல்—மூச் சரணங்களால் வணங்குதல். மூக்சரணங்கள்—உளம், ா, உடம்பு. இவற்றை வட நூலார் முறையே மனம், வாக்கு, காயம் ன்பர்.

கருந்து கொழுகனை முதல் தெய்வமாகக் கொண்டவள் சொல்வன வெல்லாம் நிகழும். 25

சு. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலான் பெண்.

பொருள். தன் காத்து தன் கொண்டான் பேணி தகை சான்ற சொல் காத்து சோர்வு இல்லான்—தனது கற்பைக் காத்துத் தன்னைக் கொண்ட (கண) வனைப் பேணித் தகுதி நிறைந்த சொல்

வாழ்க்கைத் துணை நலம்.

லத் காத்து (எனைய இல்லறங்களில்) மறதி இல்லாதவள், பெண். இல் வாழ்க்கைக் குரிய) பெண்.

அகலம். 'தன்' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை ிலி ஆகு பெயராய்த் தனது கற்பை யுணர்த்தி நின்றது. தகு. றைந்த சொல்லாவது, தன் ஊரில் வாழ்வார் தன்னைக் கற்புடை ள் என்று சொல்லும் சொல். "காலாறு" என்னும் தொடக்க ச் செய்யுளில் "வாழுரூர் தற்புகழு மாண்கற்பி னில்லாள் ன்றூர் நாலடியார்.

கருத்து. தன் கணவனைப் பேணித் தன் கற்பைக் காத்து,
ன் கற்புடையாளென்று தன் ஊரார் சொல்லும்படியாக வாழ்
ளை இல்லாள்.

20

எ. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

பொருள். சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்—அரணா
க்கும் காப்பு யாது (பயனைச்) செய்யும்? மகளிர் நிறை காக்கு
ப்பே தலை—பெண்கள் (தமது) கற்பால் (தம்மைக்) காக்கு
ப்பே தலையாய காப்பு.

அகலம். தலையாய காப்பைத் தலை என்றார். தலையாய
ப்பு—சிறந்த காப்பு. நச்சர் பாடம் 'கற்பெவன்'; 'கற்பே தலை',
ண்டியு" என்னும் தொடக்கத்துச் செய்யுளில் "பெண்டி
க் காப்ப திலமென்று, கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே"
றார் வளையாபதியார். "நிறையான் மிகுகல்லா நேரிழை
ரச், சிறையா னகப்படுத்த லாகா" என்றார் பழமொழியார்.

கருத்து. இல்லாளை வீட்டினுள் வைத்துப் பூட்டி அவள்
பைக் காக்கலா மென்று நினைத்தல் மடமை. 27.

திருக்குறள்—அறப்பால்.

. பெற்றாற்பே ணிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

பொருள். பெற்றான் பேணின்—(தம்மை வாழ்க்கைத் துணை
ாகப்) பெற்றவனை (மேற் கூறியபடி) பேணின், பெண்டிர் புத்தே
ிர் வாழும் உலகு பெருஞ் சிறப்பு பெறுவர்—மகளிர் தேவ
ாழும் (வான்) உலகின்கண் (தேவர்களால்) பெரிய சீரினைப்
பறுவர்.

அகலம். பெண்டிர் என்பது உயர்வுப் பன்மைப் பெயர்
ந்திய உரையாசிரியர்கள் பாடம் 'பெற்றாற் பெறின்'. பெற்றாற்
பறின் என்பதற்குப் 'பெற்றானைப் பெறின்' என்பதே பொருள்
ப் பொருள் ஈண்டு ஒரு பொருத்தமும் இன்று. 'பெற்றாற் பெறின்

ன்பதற்குத் 'தம்மை எய்திய கணவனை வழிபடுதல் பெறுவர
ின்' எனப் பொருளுரைத்து, 'வழிபடுதல்' என்பது சொ
லெச்சம் எனக் கூறிப் போந்தார்கள் முன்னுரையாசிரியர்கள். எச்
ாகக் கொள்ளும் சொல் செய்யுளுக்கு இன்றியமையாத தாயும்
ன்றேயாயும் இருத்தல் வேண்டும். உதாரணமாகப் "பிறவிப் பெரு
டல்" என்னும் தொடக்கத்துக் குறளில் 'இறைவனடி சேர்ந்தா
ன்பது சொல் லெச்ச மாதல் காண்க. இக் குறளில் 'இறை
ரடி சேர்ந்தார்' என்பதைச் சொல் லெச்சமாகக் கொள்ளாமலு
ுது தவிர வேறு ஒரு சொற் றொடரையாவது, சொல்லையாவது
சொல்லெச்சமாகக் கொள்ளவும் முடியாது. 'பெற்றாற் பெறின்' எ
னும் பாடத்தைக் கொள்ளின், எச்சமாக ஒரு சொல்லைக் கொள்ளுத
ுன்றி யமையாதது தான். ஆனால், 'தெய்வமாக' அல்லது 'ஆனி
ாக' என்பது போன்ற வேறு ஒரு சொல்லை எச்சமாகக் கொள்
னும் அமையும். ஆகலான், 'வழிபடுதல்' என்பது சொல் லெச்ச
ன்று கூறுதல் பொருந்தாது. பழைய ஓலை ஏடுகளில் உயிர் மெ

வாழ்க்கைத்துணை நலம்.

எகரமும் உயிர்மெய் எகாரமும் உயிர்மெய் எகாரமாகவே எ
பட்டிருத்தலையும், ஐகாரம் கழிகன் இல்லாமல் நிகரம்போல எ
பட்டிருத்தலையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆகார
பெயர்த் தெழுதியோன் "பெற்றாற்பே ணிற்பெறுவர்" எ
லுள்ள பேகாரத்தைப் பெகரமாகவும், ஐகாரத்தை நிகரம
படித்தெழுதியதால் "பெற்றாற் பெறின்" என்ற பிழைப்
ஏற்பட்ட தெனக் கொள்க. 'பேகாரம்' பிரியாது புணர்தல்.

கருத்து. கணவனை மேற்கொள்ளிய வாறு பேணியவள்
ுலகத்தில் பெருஞ் சிறப்புப் பெறுவள்.

கூ. புகழ்புரிந்த வில்லிலோர்க்கு நில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

பொருள். புகழ் புரிந்த இல் இல்லோர்க்கு—(கற்புடை
என்னும்) புகழைச் செய்த இல்லாள் இல்லாத (கண) வர்க்கு,
வார்முன் ஏறுபோல் பீடு நடை இல்லை—பகைவர்முன் சிங்க
போல (நடக்கும்) பெருமித நடை இல்லை.

'அகலம். இல்லோர் என்பது செய்யுள் விகாரத்தால்
வொற்றுக் கெட்டு நின்றது. ஏறு—ஆண். முற்றிய உரை
பர்கள் பாடம் 'புகழ்புரிந் நில்'. 'புகழ்புரிந்த வில்' எ

போலப் 'புகழ்புரிந் தில்' என்பது தொடை யின்பம் பயக
பானும், அப் பாடத்தைக் கொள்ளுங்கால் அகரம் செய்யுள் வி
கால் தொக்கதாகக் கொள்ளவேண்டிய நிருத்தலானும், 'பு
ந்த வில்' என்பதே ஆசிரியர் பாட மெனவும், 'புகழ்புரிந்
ன்பது ஒருவன் படித்து மற்றொருவன் கேட்டு எடு பெயர்த் தெ
தால் கோர்ந்த பிழையெனவும் கொள்க.

கருத்து. புகழ் புரிந்த இல்லாள் இல்லாதார் பகைவர்
பெருமையோடு கடக்க மாணுவர்.

திருக்குறள்—அறப்பால்.

ம. முங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

பொருள். மனை மாட்சி மங்கலம்—மனையானது நற் குண
ற் செயல்கள் மங்கல மாளும்; நல் மக்கட் பேறு அதன் நன்கல
—நல்ல மக்களைப் பெறுதல் அம் மங்கல மாளின் நன் கல மாம்.

அகலம். மங்கல மாண் பெண்ணின் கழுத்திற்கு அழகு செய்
தைபோல நன் மக்கட் பேறு மனையாளுக்கு அழகு செய்யும் என்
றாறு. மங்கலம், மனை என்பன ஆகு பெயர்கள், அவை முறையே
ங்கல மாளுக்கும் மனையாளுக்கும் ஆயினமையால். நன் கலம்—தாலி
ங்கல மாண்—தாலிக் கொடி. 'என்ப', 'மற்று' அசைகள்
மனைக்கு விளக்க மடவார்; மடவார், தமக்குத் தகைசால் புதல்வர்
ன்றனர் நான்மணிக் கடிகையார். பேறு என்பது விருதி புண
தை கெட்டு முதனிலை திரிந்த தொழிற்பெயர். அஃதாவது
பெறு' என்னும் முதனிலையோடு 'தல்' என்னும் விருதி புணர்ச்
கெட்டுப் 'பெறு' என்னும் முதனிலை பேறு' எனத் திரிந்
நின்றது.

கருத்து. மனையானது நற்குண நற் செயல்கள் குடும்பத்திற்
அழகு; நல்ல மக்களைப் பெறுதல் மனையாளுக்கு அழகு. 3

4-ம் அதிகாரம்—மக்கட் பேறு.

அஃதாவது, மக்களைப் பெறுதல்.

க. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவுடைய
மக்கட்பே றல்ல பிற.

பொருள். பெறும் அவற்றுள் அறிவுடைய மக்கள் பே
அல்ல பிற—(மாக்கள்) பெறும் பேறுகளுள் அறிவுடைய மக்

மக்கட் பேறு.

பேறு அல்லாத பிறவற்றை, யாம் அறிவது இல்லை—யாம் (ஒரு
மதிப்பது இல்லை.

அகலம். பெறப்படுவதனைப் பேறு என்றார். முன்னிய
யாசிரியர்கள் பாடம் 'அறிவறிந்த'. 'அறிவறிந்த மக்கட் பே
என்பது 'கற்று அறிய வேண்டுவனவற்றை அறிந்த மக்க
பெறுதல்' எனப் பொருத்த மற்ற பொருளைத் தருதலாலும்,
டைய மக்கட் பேறு' என்பது 'இயற்கை அறிவை யுடைய
களைப் பெறுதல்' எனப் பொருத்த முள்ள பொருளைத் தரு
லும், 'அறிவுடைய' என்பதே ஆசிரியர் பாடம் எனக் கொ
'அறிவறிந்த என்றதனால், மக்கள் என்பது பெண் ஒழித்து
தது" என உரைப்பாரும் உளர். அப் பாடத்தைக் கொள்ளினும்
உரை பொருத்தாது, கல்வியறிவு இரு பாலார்க்கும் பொதுவாகல

கருத்து. மாக்கள் பெறும் பேறுகளுள் அறிவுடைய மக்
பேறே சிறந்தது.

உ. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

பொருள். பழி பிறங்கா பண்புடை மக்கள் பெறின்—பா
சாத நற்குண முடைய மக்களைப் பெற்றால், எழு பிறப்பும் தீய
ண்டா—(மேல்வரும்) எழு (வகைப்) பிறப்பின்கண்ணும் (இ
றுமைத்) தன்பங்கள் சேரா.

அகலம். எழு வகைப் பிறப்பாவன:—தாவரம், ஊர்வன,
ழ்வன, பறப்பன, (நாற் காலால்) கடப்பன, மானுடர், தேவ
ழ பிறப்பு என்பதற்கு வரும் பிறப்பின்கண் என்று உரைப்பது
மையும். மக்களது நற் குண நற் செய்கைகளால் பெற்றோரை
ன்பங்கள் சேரா என்பது ஒவ்வொருவரும் செய்த வினைகளி

பயன்கள் அவரவரையே (சேரும் என்னும் வட மொழி தென் மொ
நூல்களின் வழக்கினை மறுக்காதோ எனின், மறுக்காது. என்
பழி பிறங்காப் பண்புடை மக்களைப் பெறுதற்குப் பெற்றோர்
நல் வினைகளைப் புரிந்திருத்தல் வேண்டும். அந் நல் வினைகளி
பயன்கள் இரண்டு. ஒன்று பழி பிறங்காப் பண்புடை மக்களை
பெறுதல்; மற்றொன்று ஏழு பிறப்புந் தீயவை தீண்டாமை. ஒ
நியதன் உண்மை பிந்தியதன் உண்மையை அறிவிக்கும் அறிகு
அவ் விரண்டும் பெற்றோரது முன் வினைப் பயன்களே யாம். நரு
பாடம் 'மக்கட் பெறல்'.

கருத்து. பாவம் புரியாத மக்களைப் பெற்றோர் மேல் வரு
ஏழு பிறப்புக்களிலும் எவ்வகைத் துன்பமும் உறார். 3

கூ. தம்பொரு ளென்பவே தம்மக்க ளப்பொரு
ளுந்தம் வினையான் வரும்.

பொருள். தம் மக்கள் தம் பொருள்—தமது மக்கள் தம
பொருள்: அப் பொருள் தந்தம் வினையால் வரும்—அம் மக்களாகி
பொருள் தந்தம் வினைகளால் உண்டாம்.

அகலம். 'என்ப', 'ஏ' அசைகள். நச்சர் பாடம் 'என்பர்
அவர்ப்பேறு'. மற்றை நால்வர் பாடம் 'என்ப'; 'அ
பொருள்'. 'அவர்பொருள் தந்தம் வினையான் வரும்' என்ப
பொருத்தமான பொருள் ஒன்றையும் தாராமையான் 'அப் பொருள்
என்பதே ஆசிரியர் பாடம் எனக் கொள்க. அப்பொருள் என்ப
தான்காஞ் சீர் ஆயக்கால், மூன்றும் சீர் 'தம்மக்கள்' எனவும்
இரண்டாஞ் சீர் 'என்பவே' எனவும் இருத்தல் வேண்டும். அ
பாழுது மூன்றாஞ் சீர் மோனை யின்பம் பயத்தலையும் நோக்குக.

கருத்து. மக்கள் உளராதலும் இலராதலும், தல்ல மக்க

மக்கட் பேறு.

உளராதலும் நிய மக்கள் உளராதலும் அவரவர் வினைகளின் பய
நலேயாம். 3

ச. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

பொருள். தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்—தமது மக்க
றிய கைகளால் குழாவிய கூழ், அமிழ்திலும் ஆற்ற இனிது—அமி
லும் மிக இனிது.

அகலம். சிறு கை என்றமையால் குழந்தை எனவும், தவ
ல் முதலியவற்றுல் அவர் கை மண், தசை, முதலியன படிந்திருக்
மெனவும் கொள்க. அக் கூழ் அமிழ்திலும் இனிதாதல் தம்முடை
சொந்த மக்களது சிறுகை அளாவிய போழ்தே என்பதை உணர்த்
வேண்டித் 'தம்மக்கள்' என்றார். கை என்பது சாதி ஒருமை
பெயர். நாமநீர் பாடம் 'அமுதிலும்'. ஓகாரம் தேற்றம்.

கருத்து. தம் மக்கள் தம்முடன் உண்ணுதல் தமக்கு இன்ப
யக்கும். 34

இ. மக்கள்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

பொருள். மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்—மக்களை
டலைத் தொடுதல் (பெற்றோரது) உடம்பிற்கு இன்பம் (பயக்கும்
அவர் சொல் கேட்டல் செவிக்கு இன்பம்—அம் மக்களது சொல்லை
கேட்டல் (பெற்றோரது) செவிக்கு இன்பம் (பயக்கும்).

அகலம். 'மற்று' அசை. நாமநீர் பாடம் 'மற்றவர்தம்'

கருத்து. தம் மக்களது மெய்யைத் தீண்டலும் சொல்லை
கேட்டலும் தமக்கு இன்பம் பயக்கும். 35

திருக்குறள்—அறப்பால்.

சு. குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

பொருள். தம் மக்கள் மழலை சொல் கேளாதவரே—தம
க்களுடைய மழலைச் சொல்லைக் கேளாதவரே, குழல் இனிது, யா
னிது என்ப—குழலிசை இனிது யாழிசை இனிது என்
சொல்வர்.

அகலம். குழல், யாழ் என்பன ஆகுபெயர்கள், அவற்றி னைசைகளுக்கு ஆயினமையால். தருமர், தாமந்தர் பாடம் 'என் ம்'. மற்றை மூவர் பாடம் 'என்பதம்'. ஏகாரம் கெட்டது.

கருத்து. தம் மக்கள் மழலைச் சொல் குழலினும் யாழினு னிது. 3

எ. தக்தை மகற்காற்று கன்றி யவையத்து
முக்தி யிருப்பச் செயல்.

பொருள். தக்தை மகற்கு ஆற்றும் கன்றி—தக்தை மகனு ச் செய்யும் உதவி, அவையத்து முக்தி இருப்ப செயல்—(சான்றே வையின்கண் முன்னே இருக்கும்படியாகச் செய்தல்.

அகலம். முன்னே இருக்கும்படியாகச் செய்தலாவது, முன்னே நத்தற்குரிய கல்வி, ஒழுக்கம், முதலியவற்றை அளித்தல். முன்னே தன்மையான இடத்தில். 'கன்றி' என்ற சொல்லே வழங்கினமை ல், அவ்வாறு கல்வி முதலியவற்றைத் தக்தை அளித்தமைன் செய்க்கன்றியாகக் கருதல் வேண்டும் என்பது பெற்றும்.

கருத்து. மக்களுக்குக் கல்வியும் ஒழுக்கமும் கற்பித்தல் டெ ரர் கடமை. 3

அ. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.

மக்கட் பேறு.

பொருள். தம்மின் தம் மக்கள் அறிவுடைமை—தம்மினு மது மக்கள் அறிவுடையரா யிருத்தல், மா நிலத்து மன் உயிர்க் ல்லாம் இனிது—பெரிய நிலவுலகின்கண் நில பேறுடைய மனி யிர்களுக்கெல்லாம் இன்பம் பயக்கும்.

அகலம். உயிரின் அழியாத் தன்மையைக் குறிக்க வேண்

ன்னுயிர் என்றார். தம் மக்கள் என்றமையால், உயிர் என்பதற்
னித உயிர் என்று பொருள் உரைக்கப்பட்டது. இன்பம் பயப்
னே இனிது என்றார். இன்பம் உறுவது உயிரே யாகலின், உயிர்
கல்லாம் என்றார். தாமந்தர் பாடம் 'தன்னிற்றன் மக்கள்
ம் மக்கள் அறிவுடைமை தமக்குப் பயக்கும் இன்பத்தினும் மாநிலத்
ன்னுயிர்க் கெல்லாம் அதிக இன்பம் பயக்கும் என்று உரைப்பாரு
னர். உலக அனுபவத்திற்கு மாறுபடுகின்றமையால், அவ்வள
பாலியுரை யென்று தள்ளுக.

கருத்து. தம்மினும் தம் மக்கள் அறிவுடையரா யிருத்த
பற்றோர்க்கு இன்பம் பயக்கும். 3

'சு. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

பொருள். தன் மகனை சான்றோன் என கேட்ட தாய்—தன
கனை (க்கல்வி அறிவு ஒழுக்கங்களால்) நிறைந்தோன் என (ப்பிற
சால்ல)க் கேட்ட தாய், ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்—
யவனைப்) பெற்ற காலையில் அடைந்த களிப்பினும் பெரி
னிப்பன்.

அகலம். 'இன்' என்றமையால், தன் மகனைச் சான்றோனை
ன் கண்டபொழுது உளதாம் உவப்புத் தான் அவனை ஈன்றபொழு
டைந்த, உவப்பினும் பெரிதென்பதும், பெரிது என்றமையா

அதனினும் தன் மகனைச் 'சான்றோன் எனப் பிறர் கூறக் கே
பொழுது உளதாம் உவப்புப் பெரிதென்பதும் பெறப் பட்ட
உவகை—உள்ளக் களிப்பு. "பெண் ணியல்பால் தாளுக அ
மையின் கேட்ட தா யெனக் கூறினர்" என்று உரைப்பாரும் உ
பெண்ணின் இயல்பு தாளுக அறியாமை என்பது அறிவிலார்
றென அவ் வுரையை மறுக்க.

கருத்து. தன் மகன் கல்வியும், அறிவும், ஒழுக்கமும் நிறை
வன் என்று பிறர் பேசக் கேட்ட தாய் பேருவகை எய்துவன்.

ய. மகன்றக்தைக் காற்று முதவி யிவன்றக்தை
யென்னேற்றான் கொல்லெனுஞ் சொல்.

பொருள். மகன் தக்தைக்கு ஆற்றும் உதவி—மகன் தக்தை
குச் செய்யும் உதவி, இவன் தக்தை என் சோற்றான் என்னும் சொ
(ஆக்குதல்)—'(இவனைப் பெறுவதற்கு) இவன் தக்தை யாது தவ
புரிக்தான்' என்று (பிறர்) சொல்லும் சொல்லை உண்டாக்குதல்.

அகலம். என் என்பது என் சோன்பு எனப் பொருள் படு
கின்றது. சோன்பு—தவம். ஆக்குதல் என்பது சொல்லெச்ச
'கொல்' 'அசை'. 'சொல்' இரண்டாம் வேற்றுமைத் தொக
'இவன் தக்தை என்னேற்றான்', என்பது பிறாது கூற்று. உ
என்றமையால், அச் சொல்லைப் பிறர் சொல்லுமாறு மகன் கல்
அறிவு, ஒழுக்கங்களோடு கடத்தலாகிய உதவியைத் தக்தை வேண்
டிற்கின்று சொன்பதும், அதனால் அவ் உதவியைத் தக்தைக்கு மக
கவறாது செய்யக் கடன் பட்டுள்ளான் என்பதும் பெறப்பட்ட
என்னும் என்பது வகர வொற்றுக் கெட்டு நின்றது.

கருத்து. கல்வி, அறிவு, ஒழுக்கம் உடையராய்ருத்தல் மக்
டமை.

4

அன்புடைமை.

ரு-ம் அதி:—அன்புடைமை.

அஃதாவது, அன்பை உடையராய் ருத்தல்.

க. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா முார்வலர்ப்
புன்கணீர் பூசல் தரும்.

பொருள். அடைக்கும் தாழ் அன்பிற்கும் உண்டோ—(அகத்தி
ன்று வெளிப்படாமல்) அடைத்துவைக்கும் (வலிய) கதவு அன்
ற்கும் உண்டோ? ஆர்வலர் புன்கண் ணீர் பூசல் தரும்—அன்பு
ய்யப்பட்டாரது துன்பம் (அக் கதவை) பிளக்கும் தாக்குதலை
ண்டாக்கும்.

அகலம். அன்பு செய்யப்பட்டாரது துன்பம் அன்புடை
ர் அகத்தினின்று வெளிப்படாமல் அன்பை அடைத்தலைத்

நக்கும் கதவினை உடைத்து அன்பை வெளிப்படுத்திவிடும் என்ற
று. தாழ் என்பது ஆகுபெயர், அதனை யுடைய கதவிற்கு ஆயி
மையால். ஈர் என்பது வினைத்தொகை. ஈர்வம்—அன்பு செய்யப்
ர் தன்மை. பூசல்—பொருதல்—தாக்குதல். ஈர்வம் என்னும்
ன்புப்பெயர் ஈறும் ஈற்றயலும் கெட்டு, வலர் என்பதனோடு புணர்
ா ஈர்வலர் என் றாயிற்று. வலர்—வல்லவர். 'ஈர்வலர் புன்கணீர்
ல் தரும்' என்பதற்குத் "தம்மால் அன்பு செய்யப்பட்டவரது
ன்பல் கண்டுழி" என்ற சொற்களை வருவித்து, "அன்புடையார்
ண் பொழிகின்ற) புல்லிய கண்ணீரே (உள் நின்ற அன்பினை எல்
ரும் அறியத்) தாற்றும்" என்று உரைப்பாரும் உளர். அவர்
ர்வலர்' என்பதற்கு 'அன்பு செய்யப்பட்டார்' என்பதே பொருள்
ர்பதை அறியார். அன்றியும், 'துன்பம்' என்னும் பொருள்
நம் 'புன்கண்' என்ற சொல்லைப் புன், கண் எனப் பிரித்தும்,
டைக்கும் தாழ் உண்டோ? என்ற வினாவிற்கு விடையில்லாதும்
ாருள் உரைத்து இடர்ப்பட்டனர்.

திருக்குறள்—அறப்பால்.

கருத்து. அன்பு செய்யப்பட்டார் துன்ப முறுதலைக் காணு
பொருர் அன்புடையார். 41.

உ. ' அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடைய
ரென்பு முரியர் பிறர்க்கு.

பொருள். அன்பு இல்லார் எல்லாம் தமக்கே உரியர்—அன்பு
இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரியர்; அன்பு உடை
யார் என்பும் பிறர்க்கே உரியர்—அன்பினை உடையவர் (தம்) உடம்
பையும் பிறர்க்கே உரியர்.

அகலம். இல்லார் என்பதன் ஈகார வொற்றும், ஈகார மிரண்
டும் செய்யுள் விகாரத்தால் தொக்கன. என்பு என்பது ஆகு பெயர்,
அதனை உடைய உடம்பிற்கு ஆயினமையால். பிறர்க்கே—பிறர்க்
காகவே. உரியர்—உடையர். நச்சர் பாடம் 'உரிய பிறர்க்கு'.

கருத்து. அன்புடையார் தமது உடைமைகளை யெல்லாம்
அன்புற்ற பிறர்க்கு வழங்குவர். 42.

கூ. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

பொருள். உயிர்க்கு ஆர் என்போடு இயைந்த தொடர்பு—பிர்க்கு அருமையான (மக்கள்) உடம்போடு கூடிய சேர்க்கை, அன் ாடு இயைந்த வழக்கு என்ப (ஆன்றோர்)—(முற் பிறப்பில்) அன் ன் பொருந்திய பயன் என்பர் ஆன்றோர்.

அகலம். 'வழக்கு என்பதும் 'அன்பு' என்பதும் ஆகு யர்கள். 'ஆர்' என்பதனை 'உயிர்' என்பதினின்று பிரித்து 'ன்பு' என்பதனுடன் சேர்த்துப் பொருள் உரைக்கப்பட்டது. நமையான உடம்பு—மக்கள் உடம்பு. 'ஆன்றோர்' என்பது சொல் ச்சம். 'இயைந்த' என்பதற்குப் 'பொருந்துவதற்கு வந்த'

அன்புடைமை.

ன்று உரைப்பார் சிலர். அச் சொற்கு அப் பொருள் இல்லை யென்று அவ் வுரையை மறுக்க. முற் பிறப்பில் கன்று முதலியவை மீது அன்பு செலுத்திய பசு முதலியன இப் பிறப்பில் மக்களாய்ப் பிற தன்னன என்று அறிக.

கந்து. அன்பு செய்ததின் பயனே மக்கட் பிறப்பு. 43

ச. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாத் துணை.

பொருள். அன்பு ஆர்வம் உடைமை ஈனும்—அன்பு (பிறரால்) அன்பு செய்யப்படுந் தன்மை உடையனதலை ஈல்கும்; அது நண்ட என்னும் நாடா(த) துணை ஈனும்—அவ் வுடைமை கட்பு என்று சொல்லப்படும் தேடுதற்கு அரிய துணையினை ஈல்கும்.

அகலம். பிறரால் அன்பு செய்யப்படுதலே ஆர்வம் என்பதற்கு இக் குறன் ஒரு சான்று. முந்திய உரையாசிரியர்கள் பாடம் 'நாடாச் சிறப்பு'. கட்பினைத் துணை யென்றே ஆசிரியர் பிறகண்டும் கூறு ன்றமையாலும், சிறப்பு என்பது ஈண்டுப் பொருத்த மற்ற சொல் ாகலாலும், 'துணை' என்பதே ஆசிரியர் பாடம் என்று கொள்ளப் ட்டது. நாடாத—தேட முடியாத—தேடுதற்கு அரிய.

இ. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
இன்புற்ரு செய்துஞ் சிறப்பு.

பொருள். வையகத்து இன்புற்றூர் எய்தும் சிறப்பு—உலகத்தில் இன்பத்தை அடைத்தவர் பெறும் வீடு, அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப (ஆன்ரோர்)—அன்பைப் பொருந்தி நின்ற பயன் என்று சொல்வர் ஆன்ரோர்.

திருக்குறள்—அறப்பால்.

அகலம். இன்புற்றூர் என்றமையால், அவர் அறமும் பொருளும் முன்னரே பெற்றமை தெற்றென விளக்கும். வழக்கு என்பது ஒருபெயர், அதன் பயனுக்கு ஆயினமையால். நருமர் பாடம் 'அன்புற் றமைக்த'; 'ஆருயிர்க் கின்புற்றூர்'. நச்சர் பாடம் ''அன்புற்ரு செய்தும் பிறப்பு'.

கருந்து. அன்புடைமை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் அளிக்கும்.

ஈ. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

பொருள். அறியார் அன்பு அறத்திற்கே சார்பு என்ப—(அதன் தன்மையை) அறியாதார் அன்பு அறத்தைச் செய்தற்கே அது என்று சொல்லுவர்; அஃதே மறத்திற்கும் துணை—அன்பே மறத்தைச் செய்தற்கும் துணை.

அகலம். ஓர் உயிர் அல்லது ஒரு பொருள் மீது கொண்ட அன்பே பிறி தோ ருயிர்க்குத் தீங்கிழைத்தற்குக் காரண மாதல் அன்பே மறத்திற்கும் துணை என்ரூர். நருமர் பாடம் 'சால் பெ

கருந்து. மாந்தர் செயல்கட் கெல்லாம் அன்பே காரணம்

எ. என்பி லதனி வெயில்போலக் காயுமே
அன்பி லதனி யறம்.

பொருள். என்பு இல் அதனை வெயில் போல அன்பு இல் அ
அறம் காயும்—எலும்பு இல்லாத பிராணியை வெயில் (காய்தல்)(
அன்பு இல்லாத உயிரை அறக்கடவுள் வருத்தும்.

அகலம். இல்லதனை என்னும் இரண்டும் செய்யுள் வி
தால் எகர வொற்றுக் கெட்டு நின்றன. எகாரம் அசை.

கருந்து. அன்பு இல்லாதார் துன்பம்உறுவர்.

அ. அன்பகத் நில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

பொருள். அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை—ந
உள்ளத்தின்கண் இல்லாத உயிர் (செழித்து) வாழுதல், வன்பால்
வற்றல் மரம் தளிர்த்து அற்று—பாலை நிலத்தின்கண் வற்ற
மரம் தளிர்த்தாற் போலும்.

அகலம். வற்றல் மரம் பாலை நிலத்தின்கண் தளிர்க்க
போல, அன்பில்லாத மாந்தர் செல்வம் முதலியன பெற்றுச் செழி
வாழ்வர் என்ற வாறு. வன்பால்—பாலை நிலம். வற்ற லான—வ
றலை யடைந்த. தளிர்த்தற்று என்பது வினையெச்சத் தொகை.
தளிர்த்தால் அற்று என விரியும். மணக்குடவர், நாமக்கல்
பாடம் 'வன்பார்க்கண்'.

கருந்து. அன்பு இல்லாதார் செழிப்புற்று வாழார்.

கூ. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

பொருள். யாக்கை அக உறுப்பு அன்பு இல்லவர்க்
டம்பின் உள்ளுறுப்பாகிய அன்பு இல்லாதவர்க்கு, புற உ
ல்லாம் எவன் செய்யும்—(உடம்பின்) வெளி யுறுப்பு(க்களாகிய
காது, கை, கால், முதலியன) எல்லாம் யாது பயனைச் செய்யும்?
யனையும் செய்யா.)

அகலம்! புற வுறுப்புக்களாகிய கண், கை, காது, கால், மு
வை இருந்தும் அக வுறுப்பாகிய அன்பு இல்லாதவழி அறம்
காது என்ற வாறு. 'அகம்', 'புறம்' அத்துச் சாரியை பெ
ன்றன.

கருந்து. அன்பு இல்லாதார் அறம் புரியார்.

ம. அன்பின் வழிய துயிர்நிலை யஃநில
தென்புதோல் போர்த்த வுடம்பு.

பொருள். அன்பின் வழியது உயிர்நிலை—அன்பைப்பற்றி
கும் உடம்பு உயிர்நிலை; அஃது இல்லது என்பு தோல் போ
உடம்பு—அன்பு இல்லாதது எலும்புகளைத் தோல் போர்த்த
நில்லாத) உடம்பு.

அகலம். நாமந்நீர் பாடம் 'அன்பின் வழிய னுயிரின
திலான்'. நநீசர் பாடம் 'அஃநிலார்'. மற்றை மூவர் ப
'அஃநிலார்க்கு'. அன்புன்னது இன்னதெனக் கூறியவர் அன்பி
தது இன்னதெனக் கூறுதலே இயற்கையும் முறையு மாகலா;
அஃநிலார்க் கென்பு தோல் போர்த்த வுடம்பு' என்பதன் பி
னினும் 'அஃநில தென்பு தோல் போர்த்த வுடம்பு' என்பது
பொருத்தமான பொருளைத் தருதலானும், 'அஃநிலது' என்
ஆசிரியர் பாட மெனவும், 'அஃநிலார்க்கு' என்பது பிழை
பாட மெனவும் கொள்க.

கருந்து. அன்பு இல்லாதார் பிணத்தை ஒப்பர்.

சும்-அதி :— விருந்தோம்பல்.

அஃதாவது, விருந்தினரைப் பேணுதல். விருந்
புதுமை. விருந்தினர்—புதியராய் வந்தோர்.

க. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தெ
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள். இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம்—(ஒரு
இல்லின்கண் தங்கி (பொருளைக்) காத்து வாழ்த லெல்லாம், வி

ம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு—விருந்தினரைப் பேண
யவருக்கு) உதவி செய்தற் பொருட்டு.

அகலம். எல்லாம் என்பது ஈண்டு ஏஞ்சாப் பொருட்டாயதோ
ரிச்சொல். பொருள்+து=பொருட்டு. பொருட்டு—பொருளை
டையது. 'விருந்து' ஆகுபெயர், அதனை உடையார்க்கு ஆயினமையால்.

கருத்து. இல்லின்கண் வாழ்வது விருந்தினரைப் பேணு
ற்கே.

51.

உ. விருந்து புறத்தாத்தான் உண்ணுங்கால் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

பொருள். சாவா மருந்து எனினும்—சாவாமைக்குக் காரண
மிய அமிழ்தம் என்னினும், விருந்து புறத்து ஆக தான் (அதை)
ண்டல்—விருந்தினர் புறத்திருக்கத் தான் அதை உண்டல்,
ண்டல் பாற்று அன்று—விரும்பற் பான்மைத்து அன்று.

அகலம். சாவாமைக்குக் காரணமாகிய மருந்தினைச் சாவா
ர்.தென்றார். அதை என்பது அவாய்நிலையான் வந்தது. பால்
து=பாற்று. பான்மைத்து—தன்மைத்து. நச்சர் பாடம் 'புறத்த
ப்'. மற்றை நால்வர் பாடம் புறத்ததா'. மணக்குடவர் பாடம்
வண்டும்பாற் றன்று'. தாமத்தர் பாடம் 'தானுண்ணல்'.
த்ததா' என்னும் பாடத்தைக் கொள்ளுங்கால், புறத்ததாக என்
ற செய்யுள் விகாரத்தால் ஈறு கெட்டு நின்ற தெனக் கொள்ள
ண்டிய நிருத்தலாலும், 'புறத்தது' என்னும் வினையாலணையும்
யர் ஈண்டு வேண்டாததும் பொருத்தமற்றது மானபடியாலும்,
ருந்து புறத்திருக்க' என்னும் கோரிய பொருளைத் தரும்
த்தாக' என்பதே ஆசிரியர் பாடமெனவும், 'புறத்ததா' என்பது
பெயர்த் தெழுதியோனுல் கோர்ந்த பிழை எனவும் கொள்க.

[illegible]

கருத்து. விருந்தினரை வீட்டின் வெளியே வைத்துவிட்
ரம் வீட்டினுள் உண்டல் விரும்பத் தக்க தன்று.

ஊ. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

பொருள். வைகலும் வரு விருந்து ஓம்புவான் வாழ்க்கை—ந

தாறும் (தன்பால்) வரும் விருந்தினரைப் பேணுவானது [illegible]
ழ்க்கை, பருவந்து பாழ்படுதல் இன்று—வறுமையுற்று அழிவ
ல் இல்லை.

அகலம். 'வரு' என்பது வினைத்தொகை. பேணுதல் பசரித்தல். பருவரல்—துன்புறல். அஃது ஈண்டு ஆகுபெ தற்கு ஏதுவாகிய வறுமைக்கு ஆயினமையால். அது தைவ, ன்பது போல ஒரு சொல் நீர்மைத்து.

கருந்து. விருந்தினரைப் பேணுவான் வறுமை யுறு ல்லை. 5

ச. அகமலர்ந்து செய்யா ளுறையு முகமலர்ந்து
கல்விருந் தோம்புவா னில்.

பொருள். கல் விருந்து முகம் மலர்ந்து ஓம்புவான் இல்—கல் ருந்தினரை (த்தன்) முகம் மலிழ்ந்து பேணுவானது இல்லி னனே, செய்யான் அகம் மலர்ந்து உறையும்—திருமகள் உள்ள ழ்ந்து வாழ்வன்.

அகலம். மேற் குறளில் விருந்தோம்புவானது இல்வாழ்க்கை மையுறல் இல்லை யென்றதற்கு ஈண்டுக் காரணம் கூறிய வாறு மரீ பாடம் 'அகமலர்ந்து'; 'முகமலர்ந்து'. மற்றை நால்வ டம் 'அகனமர்ந்து'; 'முகனமர்ந்து'. அகனமர்ந்து, முகனமர்ந் பன முறையே அகம் பொருந்தி, முகம் பொருந்தி என்னு

விருந்தோம்பல்.

பொருள் தருகின்றன. அக மலர்ந்து, முக மலர்ந்து என்பன முறையே அக மிழ்ந்து, முக மிழ்ந்து என்னும் பொருள் தருகின்றன. பிற்றை பொருள்கள் மிகப் பொருத்தமும் தெளிவு முடையனவாகலான் அப் பொருள்களைத் தரும் நருமர் பாடங்களே ஆசிரியர் பாடங்கள் எனக் கொள்ளப்பட்டன.

கருந்து. நல்ல விருந்தினரைப் பேணுவான் இல்லின்கண் திருமகள் உறைவள். 54

றை. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

பொருள். விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம்—(விரு
தினருக்கு உணவு அளித்து) விருந்தினரைப் பேணி எஞ்சியதை
உண்பானது நிலத்தின்கண், வித்து இடலும் வேண்டுமோ—விதை
விதைத்தலும் வேண்டுமோ? (வேண்டா.)

அகலம். அவர் நிலத்தில் வித்து இடாமலே இறைவன் விளை
பொருள்களை அருள்வன் என்றவாறு. வித்திடல் முதலியன செய்ய
மலே செல் வரப் பெற்றமையை ஏயர்கோன் கலிக்காம நாயனா
புராணத்திலும் நக்கனார் சரித்திரக் கீர்த்தனையிலும் காண்க. "விச்
தன்றியே விளைவு செய்குவாய்" என்ற திருவாசகத்தையும் நோக்குக
வித்தும் என்பதன் உம்மையைப் பிரித்து இடல் என்பதனோடு சேர்
தும், கொல்லோ என்பதின் ஓகாரத்தைப் பிரித்து வேண்டும் எ
பதனோடு சேர்த்தும் பொருள்கள் உரைக்கப்பட்டன. எஞ்சியது—
மீதமானது. "

கருத்து. விருந்தினரை ஓம்புவானது நிலங்களைத் தேவ
விளைப்பர். " "

55

சு. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

திருக்குறள்—அறத்துப்பால்.

பொருள். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
ன்பால் நின்று) செல்லும் விருந்தினரைப் பேணி (த்தன்பால்)
, விருந்தினரை (எதிர்) நோக்கி இருப்பவன், வானத்து அவர்
ல் விருந்து—வானத்தின்கண் வாழும் தேவருக்கு நல்ல விருந்

ன் (ஆவன்).

அகலம். செல், வரு என்பன வினைத்தொகைகள். அவை கூறிய பொருளை வாதலைத் "தருசொல் வருசொல் ரு வினையுந், தன்மை முன்னிலை யாவி னிடத்த", "ஏனை யிரண்டு ன யிடத்த" என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களால் அறிக. சூத்திரங்களோ அறியாதார் 'செல்லிருந் தோம்பி வருவ்ருத் த்திருப்பான்' என்பதற்குத் 'தன்கட் சென்ற விருந்தைப் னிப் பின் செல்லக் கடவ விருந்தைப் பார்த்துத் தான் அத ஓ உண்ண இருப்பான்' என்று உரைப்பார்.

கருத்து. விருந் தோம்புவான் தேவர்களால் சிறப்புச் செய்யப் 56.
புவான்.

எ. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

பொருள். வேள்வி பயன் இனை துணைத்து என்பது ஒன்று லை—(விருந்தோம்பலாகிய) உதவியின் பயன் இவ் வளவினது று (சுட்டிச்) சொல்வதற்கு ஓர் அளவு இல்லை; விருந்தின் னையே துணை—(அதற்கு) விருந்தினரது (பெருமையின்) அளவே வு.

அகலம். துணையே என்பதன் ஏகாரம் செய்யுள் விகாரத் ல் தொக்கது.

கருத்து. விருந்தோம்பலின் பயன் விருந்தினரின் நற் குண செய்கைகளுக்குத் தக்க அளவு பெருமை யுடையது. 57.

விருந்தோம்பல்.

அ. பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

பொருள். விருந்து ஓம்பி வேள்வி தலைப் படாதார்—விரு தினரைப் பேணி (விருந்தோம்பலாகிய மாறுட) யாகத்தின் பயனை அடையாதவர், பரிந்து ஓம்பி பற்று அற்றோம் என்பர்—(பிற்காலத்தே 'வருந்திக் காத்துப் பொருளோ டிழந்தேம்' என்று இரங்குவர்.

அகலம். "பரிந்தோம்பிப் பற்றற்றேம்' என்பது விரு தோம்பாது செல்வத்தைக் காத்து வைத்துப் பின் இழந்தாரது கூற்று. பற்று, வேள்வி என்பன ஆருபெயர்கள், அவை முறையே பற்றுதற் கேதுவாகிய செல்வத்திற்கும், வேள்வியின் பயனுக்கு

ழியினமையால். மணக்குடவர் பாடம் 'பற்றற்றேரும்',

கருந்து. விருந்தினரை ஓம்பாதார் தமது செல்வத்தை இ
ந்து வருந்துவர். 5

கூ. உடைமையு ளுன்மை விருந்தோம்ப லோம்பா

மடமை மடவார்க ணுண்டு.

பொருள். உடைமையுள் உண்மை விருந்து ஓம்பல்—உடை
மையுள் உண்மையான உடைமை விருந்தினரைப் பேணுதல்; ஓ
பா(த) மடமை மடவார்கண் உண்டு—(விருந்தினரைப்) பேணு
மடமை அறிவில்லாரிடத்து உண்டு.

அகலம். உண்மையான உடைமையை உண்மை என்றார். பு
திய உரையாசிரியர்கள் பாடம் 'உடைமையு ளின்மை'. 'ஒளியு
இருள்' என்பது எவ்வளவு மூரண்பாடோ, அவ்வளவு மூர
பாடே 'உடைமையுள் இன்மை' என்பது. உடைமை என்ப
செல்வத்தையும் அறிவையும் அடக்கி நிற்கும் ஆற்றல் உடைய
விருந்தோம்ப லோம்பா மடமை என்பதை ஒரே தொடராகக் கொ

திருக்குறள்—அறப்பால்.

நான்கால், 'ஓம்பல்' என்னும் சொல் மிகை யாகின்றது. எனெனில்
யாசிரியரது கருத்தை விளக்குவதற்கு 'விருந்தோம்பா மடமை
ன்பதே போதியது. அன்றியும், 'உடைமையு ளின்மை' என்பது
யாசிரியர் பாட மெனக் கொள்ளின், 'உண்டு' என்னும் பயனிலை
சொற்கு 'அது' என்னும் சொல்லைத் தோன்ற எழுவாயாக வருவி
நக் கொள்ள வேண்டிய தாகவும் இருக்கிறது. இக் காரணங்களா
உடைமையு ளின்மை' என்பது எடு பெயர்த்தெழுதியோன் ளுகர
தை ளிகரமாகவும், ணகர வொற்றை னகரவொற்றாகவும் படித்தெழு
தால் நேர்ந்த பிழை எனக் கொள்க. பின்னர் "இன்மையு ளின்ன
விருந்தொரால்" என்று ஆசிரியர் கூறியிருத்தலையும் காண்க.

கருந்து. விருந்தினரை ஓம்பாதார் அறி வில்லார். 5

ஏ. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து.

பொருள். மோப்ப அனிச்சம் குழையும்—(தொட்டு) மு அனிச்சப் பூ வாடும்; முகம் திரித்து நோக்க விருந்து குழையும்—(இ வாழ்வான்) முகம் வேறு பட்டு நோக்க விருந்தினன் வாடுவன்.

அகலம். 'அனிச்சம்' ஆகுபெயர், அதன் மலருக்கு ஆய் மையால். முகம் வேறு படுதலாவது, முகம் கடுத்தல்.

"ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் தண்மை பேசி
யுப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமிர்த மாகு
மூப்பழ மொடுபாலன்ன முகக்கடுத் திடுவா ராயின்
சப்பிய பசியும்போகிக் கடும்பசி யாகுந் தானே.—

விவேகசிந்தாமணி.

கருத்து. மலர்ந்த முகத்தோடு விருந்தினரை உபசரி வேண்டும்.

இனியவை கூறல்.

எ-ம்—அதி:—இனியவை கூறல்.

அஃதாவது, இன்பம் பயக்கும் சொற்களைச் சொல்லுதல்.

க. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

பொருள். இன்சொல் ஈரம் அளை படிறு இல ஆம்—இனிய சொற்கள் அன்போடு கலந்து குற்றம் இல்லாதன வாம்; செம்பொருள் கண்டார் வாய் சொல்—(அன்றியும்,) மெய்ப்பொருள் உணர்ந்தா வாயினின்று வரும் சொற்க ளாம்.

அகலம். இன் சொல் என்பது 'இலவாம்', 'வாய்ச் சொல் என்னும் இரண்டு பயனிலைகளைக் கொண்டு நின்றது. நருமர் பாடல் 'இன்சொலா லீரம்'; காண்பார்வாய்ச் சொல்'. மற்றை நால்வர் பாடல் 'இன் சொலா லீரம்'. இரு அனபெடை இசை நிறைக்க வந்தது. ல் என்பது அசை. "மாசற்ற செஞ்சடையார் வன்சொ லினிது" என்னெறி.

கருத்து. அன்போடு கலந்து குற்றமற்றதும், மெய்ப் பொ நயந்தார் வாயினின்று வருவதும் இனிய சொல்லாம்.

உ. அகமலர்ந் தீதலி னன்றே முகமலர்ந்
இன்சொல ஞகப் பெறின்.

பொருள். முகம் மலர்ந்து இன் சொல்லன் ஆக பெறின்—
முகம் மலர்ந்து இனிய சொல்லே யுடையன் ஆகப் பெற்றால், அக
லர்ந்து ஈதலின் கன்று—(அஃது) உள்ளம் உவந்து ஈதலைப்போ
ஓர்) அறமாம்.

அகலம். சொல்லன் என்பது செய்யுள் விகாரத்தால் ல
வொற்றுக் கெட்டு நின்றது. முந்திய உரையாசிரியர்கள் பாட
அகனமர்ந்து', 'முகனமர்ந்து'. அப் பாடங்களைக் கொள்ளா

திருக்குறள்—அறப்பால்.

ஞரிய காரணங்களால் "அகமலர்ந்து செய்யான்" என்னும்
டக்கத்துக் குறளின் அகலத்திற் காண்க. 'முகாரம்' அசை.

கருத்து. இன்சொல் கூறல் ஈகையைப்போல ஓர் அறமாம்.62

உ. முகத்தான் மலர்ந்தினிது நோக்கி யகத்தானு
மின்சொ லினதே யறம்.

பொருள். முகம் மலர்ந்து இனிது நோக்கி அகம் ஆம் இ
ரல்லினது அறம்—முகம் மகிழ்ந்து இனிமையாகப் பார்த்
த்தின்கண் (உவகையால்) உண்டாகும் இனிய சொல்லையுடை
பல் அறம்.

அகலம். அகத்து இரண்டும் ஆனும் சாரியைகள். 'ஆல்' அசை
து' என்னும் சுட்டுப் பெயர் அறத்திற்கு முதலாகிய செயலை
டி நின்றது. முகாரம் அசை. இன் சொல்வின் என்பது செய்யு
ாரத்தால் ல கர வொற்றுக் கெட்டு நின்றது. முந்திய உரைய
யர்கள் பாடம் 'முகத்தா னமர்ந்து'. மணக்குடவர், பரி
ுகர் பாடம் 'இன்சொ வினதே'. தாமத்தர் பாடம் 'இன்சொ
தே'. தருமர், நச்சர் பாடம் இன்சொலி னஃதே'.

கருந்து. மலர்ந்த முகத்தோடும் இனிய சொல்லோடும் உவ
த்தோடும் செய்யப்படும் வினைகள் அறமாம்.

ச. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

பொருள். யார் மாட்டும் இன்பு உறும் இன் சொல் அவர்க்கு
ரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இனிய சொல்லே யுடையார்க்
ன்பு உறும் துவ்வாமை இல் ஆகும்—துன்பத்தை மிகுவிக்

றமை இல்லை யாகும்.

அகலம். உரை அளபெடைகள் இன்னிசைச்சுண் வந்தன.

இனியவை கூறல்.

கருந்து. இன்சொல் உடையார் வறுமை யுறுதல் இல்லை. 04.

ரு. பணிவுடைய னின்சொல னுத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

பொருள். பணிவு உடையன் இன் சொல்லன் ஆதல் ஒருவற்கு ணி—பணிதல் உடையனும் இனிய சொல் உடையனும் ஆதல் ருவனுக்கு ஆபரணம்; பிற அல்ல—(செல்வம் முதலிய) மற்றையன பரணங்கள் அல்ல.

அகலம். 'மற்று' அசை. என் னும்மையும், லகர வொற்றும் செய்யுள் விகாரத்தால் தொக்கன. நருமர் பாடம் 'அணி நல்ல'

கருந்து. இன்சொல் லுடைமையும் பணி வுடைமையும் ஒருவற்கு நல்ல அணிக ளாம். 05

சு. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி னினிய சொலின்.

பொருள். நல்லவை நாடி இனிய சொல்லின்—நல்ல பொருள்களை ஆராய்ந்து இனிய சொற்களால் சொல்லின், அல்லவை தேயும் அறமும் பெருகும்—மறங்கள் குறைய அறங்கள் வளரும்.

அகலம். இனிய என்பது மூன்றும் வேற்றுமைத்தொகை. சொல்லின் என்பது செய்யுள் விகாரத்தால், லகர வொற்றுக் கெட்டு நின்றது. தாமந்தர் பாடம் 'அறம் வளரும்'. நச்சர் பாடம் 'அல்லவை தேயும்'.

கருந்து. நல்ல பொருள்களை இனிய சொற்களாற் சொல்லின் பாவம் குறைந்து புண்ணியம் வளரும்.

எ. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

பொருள். பயன் ஈன்று பண்பின் தலைப் பிரியா (த) சொல்
(கருதிய) பயனே அளித்து இனிமையை விட்டு நீங்காத சொற்க
நயன் ஈன்று நன்று பயக்கும்—இன்பத்தை அளித்து அறத்
ஈல்கும்.

அகலம். தலைப்பிரிதல்—விட்டு நீங்குதல். 'பண்பின்' ே
றுமை மயக்கம். அஃது ஈண்டு இனிமைப் பொருளில்வந்தது. மூ
உரையாசிரியர்கள் பாடம் 'நன்றி'. நருமர் பாடம் 'தலைப் பிரி
நாமக்கர் பாடம் 'நன்மை பயக்கும் பயனீத்து'. நன்றி என்ப
பெரும்பாலும் செய்க்கன்றி என்னும் பொருளிலே வருதலாலு
அப் பொருள் ஈண்டுப் பொருத்தமற்ற தாகலாலும், நன்றி என்ப
ஏடு பெயர்த் தெழுதியோனால் சேர்த்த பிழை எனக் கொள்க.

கருத்து. இன்சொல் இன்பத்தையும் அறத்தையும் விளைக்கு

அ. சிறுமையி னீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

பொருள். சிறுமையின் நீங்கிய இன் சொல்—பெருமித
னின்று நீங்கிய இனிய சொல், இம்மையும் மறுமையும் இன்
தரும்—இப் பிறப்பிலும் மறு பிறப்பிலும் இன்பத்தை ஈல்கும்.

அகலம். "சிறுமை பெருமித மூர்ந்து விடல்".—நிருக்குற
பெருமிதம்—செருக்கு. மூன்றிய உரையாசிரியர்கள் பாடம் 'சிறு
யுள்'.'இன்' உருபு ஐந்தாம் வேற்றுமையின் நீக்கப் பொருளே உண
தலின், சிறுமையின் என்பதே ஆசிரியர் பாடம் எனக் கொள்க.

கருத்து. செருக்கு இல்லாத இனிய சொல் இம்மை யின்ப
மறுமை யின்பமும் தரும்.

கூ. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொ
வன்சொல் வழங்கு வது.

பொருள். இன் சொல் இனிது ஈன்றல் காண்பான்—(பிறர் ன்னை நோக்கிச் சொல்லும்)இனிய சொல் (தனக்கு) இன்பம் அளித் லை அறிபவன், வன் சொல் வழங்குவது எவன்—(பிறர்பால்) கடிய ர்ல்லைச் சொல்லுதல் யாது காரணம்?

அகலம். 'கொல்', 'ஓ' அசைகள். சொல் வழங்குவது ன்றமையால், வழங்குவது என்பதற்குச் சொல்லுதல் என்று ாருள் உரைக்கப்பட்டது.

கருத்து. பிறனுடைய இன் சொல் தனக்கு இன்பம் தருதலை பவன் பிறனிடத்து வன் சொல் வழங்குவதற்குக் காரணம் மையே. 69.

ஐ. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

பொருள். இனிய உளவாக இன்னாத கூறல்—இன்பம் தரும் ாற்கள் உள்ளனவாகத் துன்பம் தரும் சொற்களைச் சொல்லுதல், ி இருப்ப காய் கவர்ந்து அற்று—கனிகள் இருக்கக் காய்களைப் த்தாற் போலும்.

அகலம். கவர்ந்தற்று என்பது வினையெச்சத் தொகை. அது ர்ந்தா லற்று என விரியும். தருமர் பாடம் 'சனியிருக்க'.

கருத்து. இனிய சொற்கள் இருக்க அவற்றை விட்டு இன்னாத ாற்களைக் கூறல் மடமை. 70.

ஆ-ம் அதி :— செய்ந்நன்றி யறிதல்.

ஃதாவது, (தமக்குப் பிறர்) செய்த நன்றியை உணர்தல்.

க. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

பொருள். செய்யாமல் செய்த உதவிக்கு—(பிறர்க்குத் தாம்

உதவியும்) செய்யாமலிருக்க (த் தமக்குப் பிறர்) செய்த உதவிக்கு, யகமும் வானகமும் ஆற்றல் அரிது—பூவுலகமும் வானுலகமும் மாதல் இன்று.

கருத்து. தமது உதவியை முன் பெருதார் தமக்குச் செய்த வி ஒப் பற்றது. 71.

உ. காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

பொருள். காலத்தினுல் செய்த நன்றி—(ஒருவன் இடருற்ற) லத்தில் (பிறன்) செய்த உதவி, சிறிது எனினும் ஞாலத்தின் மாண ரிது—(செயலால்) சிறியது என்றாலும் (பயனுல்) உலகத்தினும் ப் பெரியது.

அகலம். காலத்தினுல் என்பது வேற்றுமை மயக்கம், மூன் ம் வேற்றுமை யுருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தமை ல். என்னினும் என்பது எனா வொற்றுக் கெட்டு நின்றது.

கருத்து. சமயத்திற் செய்த உதவியும் ஒப் பற்றது. 72.

ங. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

பொருள். பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்—(தாம் ய்யும் உதவிக்கு யாது) பயன் (தமக்கு வரும் என்று) ஆராயாதவ ப் (ப்பிறர் தனக்குச்) செய்த உதவியின் நன்மையைச் சீர் தூக்கிப் ர்ப்பின், நன்மை கடலின் பெரிது—அந் நன்மை கடலினும் பெரிது.

அகலம். நாமநீர்ப் பாடம் 'பயன் தூக்கா செய்த'.

கருத்து. கைம்மாறு கருதாது செய்த உதவியும் ஒப்பற்றது. 73.

செய்ந்நன்றி யறிதல்.

ச. நினைத்தனை நன்றி செயினும் பனைத்தனையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

பொருள். நினை தனை நன்றி செய்யினும்—(தமக்குப் பிறர்) ய அளவு உதவி செய்யினும், பயன் தெரிவார் பனை தனையா(க) ான்வர்—(உதவியின்) பயனை அறிபவர் (அதனைப்) பெரிய அளவின 'க் கருதுவர்.

அகலம். 'தினைத்துணை, பனைத்துணை' என்பன மிகமிகச் சிறிய னவையும் மிகமிகப் பெரிய அளவையும் குறிப்பதற்காகத் தமிழ் லார் வழக்கும் சொற்கள். செய்யின் என்பதும், துணையாக ர்பதும் செய்யுள் விகாரத்தால் முறையே யாச வொற்றும், கர ம் கெட்டு நின்றன. "தினையனைத்தே யாயினுஞ் செய்தான் றண் ற், பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்" என்றார் நாலடியார்.

கருத்து. செய்த உதவி அளவால் சிறிய தாயினும் பயனால் ரிய தாம்.

74.

ரு. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

பொருள். உதவி உதவி வரைத்து அன்று—உதவியின் பயன் ய்யப்பட்ட) உதவியின் அளவினது அன்று; உதவி செய்யப் டார் சால்பின் வரைத்து—அவ் வுதவி செய்யப் பட்டாரது பெரு யின் அளவிற்று.

அகலம். செய்யப்பட்டார் என்பது செய்யுள் விகாரத்தால் வொற்றுக் கெட்டு நின்றது. பெருமையாவது கல்வி, அறிவு, க்கங்களின் மேம்பாடு. இரண்டாம் 'உதவி' ஆகுபெயர், யின் பயனுக்கு ஆயினமையால். 'உறக்குந் துணையதோ ராலம் தீண்டி, பிறப்பு நிழற்பயந் தாஅல்—சிறப்பயனுந், தான்

சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போற்ற விடும்."—நாலடியார்.

கருத்து. உதவியின் பயன் உதவி பெற்றாரது பெருமையின் அளவின தாம்.

75

அ. மறவற்க மாசறுத்தார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

பொருள். மாசு அறுத்தார் கேண்மை மறவற்க—(தன்ப
லிருந்த) குற்றத்தை ஒழித்தவரது நட்பினை (ஒருவன் எஞ்ஞான்றும்
மறவா திருக்கக் கடவன்; துன்பத்துன் துப்பு ஆயார் கட்பு துறவற்க—
(தான்) துன்பமுற்ற காலத்தில் (தனக்குத்) துணையாயினாரது நட்பினை
(ஒருவன் எஞ்ஞான்றும்) விடாதிருக்கக் கடவன்.

அகலம். முன்னிய உரையாசிரியர்கள் பாடம் 'மாசற்றூர்
கேண்மை'. மாசற்றூர் கேண்மைக்கும் செய்ந்நன்றி யறிதலுக்கும்
யாதானோர் இயையும் இன்மையால், அப் பாடம் பிழைபட்ட பாடம்
என்றும், மாசறுத்தலே செய்ந்நன்றி யெல்லாவற்றுள்ளும் சிறந்
தாகலான், 'மாசறுத்தார்' என்பதே ஆசிரியர் பாடமென்றும்
கொள்க. அன்றியும், மாசற்றூர் கேண்மையைக் கொள்ளல் வேண்
டுமென்பதை "மருவுக மாசற்றூர் கேண்மை" என்று ஆசிரியர்
பின்னர்க் கூறுதலால், அதனை ஈண்டுக் கூறார்.

கருத்து. தமது குற்றங்களை நீக்கிய ஆசிரியர் கட்பையும்
தமது துன்ப காலத்தில் உதவியோர் கட்பையும் விடற்க. 76

எ. எழுமவ் வெழுபிறப்பு முள்ளுவர் தங்கள்
விழுமந் துடைத்தவர் நட்பு.

பொருள். தங்கள் விழுமம் துடைத்தவர் நட்பு—தம்முடை
துன்பத்தை நீக்கியவரது நட்பினை, எழும் அ எழு பிறப்பும் (அ

செய்ந்நன்றி யறிதல்.

புடையோர்) உள்ளுவர்—(மேல்) உண்டாகும் எழு பிறப்பின்கண்
ணும் அறிவுடையோர் நினைப்பர்.

அகலம். நாமந்தர் பாடம் 'எழுமவ் வெழுபிறப்பும்'; 'நங்கண்'.
மற்றை சால்வர் பாடம் 'எழுமை யெழுபிறப்பும்'; 'தங்
கண்'. கண் என்னும் எழாம் வேற்றுமை யுருபு ஈண்டுப் பொருத்த
மற்ற தாகலான், தங்கள் என்பதன் ஈகார வொற்றை ஙகர வொற்
றாக எடு பெயர்த் தெழுதியோன் படித் தெழுதியதால் தங்கண் என்
றும் பிழைப் பாடம் ஏற்பட்ட தெனக் கொள்க. முன்னிய பிறப்புக்
களில் நடந்தவற்றையும் ஒருவன் அறியக் கூடு மென்பது இக் குற
ளால் விளக்குகின்றது. எழு வகைப் பிறப்புக்கள் முன்னர்க் கூறப்
பட்டுள்ளன.

கருத்து. தனது துன்பத்தை நீக்கியவர் நட்பை ஒரு காலத்
தும் மறக்க லாகாது. 77.

அ. நன்று மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

பொருள். நன்று மறப்பது நன்று அன்று—(ஒருவர் செய்த) ன்மையை மறத்தல் அறம் அன்று; நன்று அல்லது அன்றே மறப்பது ன்று—(ஒருவர் செய்த) தீமையை அப்பொழுதே மறத்தல் அறம்.

அகலம். அன்று என்பது ஆகுபெயர், அப் பொழுதிற்கு யினமையால், முந்திய உரையாசிரியர்கள் பாடம் 'நன்றி மறப் து'. நான்காம் சீரில் நன்றல்லது எனக் கூறி யிருத்தலான், தற் சீரில் நன்று என்றே ஆசிரியர் கூறியிருப்பர்.

கருத்து. தனக்கு ஒருவர் செய்த நன்மையை மறப்பது மற ம்; தீமையை மறப்பது அறமாம். 78.

கூ. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

163

திருக்குறள்—அறப்பால்.

பொருள். கொன்று அன்ன இன்னா செய்யினும்—(தமக் ஒருவர்) கொன்றாற் போன்ற துன்பங்களைச் செய்யினும், அ செய்த நன்று ஒன்று உள்ள (அவை) கெடும்—(தமக்கு) அவர் செ நன்மை யொன்றை நினைக்க அவை கெடும்.

அகலம். கொன்றன்ன என்பது வினையெச்சத் தொ அது கொன்றால் அன்ன என லிரியும். அவை என்பது அவ நிலையான் வந்து, இன்னாத வற்றைச் சுட்டி நின்றது. செய்யினு என்பது செய்யுள் விகாரத்தால் யகர வொற்றுக் கெட்டு நி றது. "ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த, பிழைநூறு சான்றோர் பொறுப்பர்" என்றார் நாலடியார். தருமர், தாமத் பாடம் 'அவர்செய்த தொன்றுநன் றுள்ளப் படும்'.

கருத்து. தனக்கு நன்மை செய்தவர் பின்னர்த் தீமை செய்யி அதனை மறந்திடுக.

௰. எந்நன்று கொன்றாற்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

பொருள். எ நன்று கொன்றாற்கும் உய்வு உண்டாம்—

தகைய (சிறந்த) அறத்தைச் செடுத்தவனுக்கும் உய்வாயில் உண்ட
செய் கன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை—(தனக்குப் பிறர்) செ
கன்றியை மறந்த மனிதனுக்கு உய்வாயில் இல்லை.

அகலம். உய்வாயில்—கழுவாய். உய்வாயில் என்பதனை
தூலார் பிராயச்சித்தம் என்பர். மூன்றிய உரையாசிரியர்கள் பா
எக்கன்றி'. கன்று என்னும் பாடத்தைக் கொண்டதற் குரிய கா
த்தை "கயவின்று" என்னும் தொடக்கத்துக் குறளின் அகலத்
காண்க.

கருந்து. செய்ந் கன்றியை மறந்தோன் அப் பாவப் பய
அனுபவித்தே தீர வேண்டும்.

நடுவு நிலைமை.

கூம் அதி :—நடுவு நிலைமை.

அது 'நடுவு', 'நிலைமை' என்னும் இரண்டு சொற்களால்
நாடர். 'நடுவு' என்பது 'நடு' எனவும், 'நிலைமை' என்ப
'லை' எனவும் வழங்கும். நடுவு நிலைமை என்பது நடுவாக நிற்
னப் பொருள்படும். அஃதாவது, உற்றார், நண்பர், கொதுமல
னைவர் என்னும் நான்கு நிறத்தினர்களுக்கும் நடுவாக நின்
வர்களில் எந்நிறத்தார் பக்கமும் கோடாமல், அவ்வந்நிறத்தா
ச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தொழுகுதல். ஆகிரி
ற்றார்க்குச் செய்யவேண்டிய கடமைகளை "வாழ்க்கைத் துணை
யும்", "மக்கட்பேறு", "அன்புடைமை" என்னும் மூன்று அ
ரங்களாலும், கொதுமலர்க்குச் செய்யவேண்டிய கடமைகளை
பிருந்தோம்பல்", "இனியவை கூறல்", "செய்ந்நன்றி யறிதல்
ன்னும் மூன்று அதிகாரங்களாலும் கூறினர். நண்பருக்குச் செ
யண்டிய கடமைகளைப் பொருட்பாலின்கண் "நட்பு", "நட்
ய்தல்", "பழைமை" என்னும் மூன்று அதிகாரங்களாலும், ப
ர்க்குச் செய்யவேண்டிய கடமைகளைப் "பகை மாட்சி", "பகை
றச் தெரிதல்", "உட் பகை" என்னும் மூன்று அதிகாரங்க
ளும் கூறுவர். இந் நான்கு நிறத்தினர்களுக்கும் பொதுவா
ய்ய வேண்டிய கடமைகளை "நடுவு நிலைமை", "அட
டைமை", ஒழுக்க முடைமை" என்னும் மூன்று அதிகார
ாலும் கூறுகின்றனர்.

க. தகுதி யெனவொன்று நன்றே பகுதியார்
பாற்பட் டொழுகப் பெறின்.

பொருள். தகுதி என ஒன்று நன்றே—கடவு நிலைமை என் னல்லப்பட்ட (ஒழுக்கம்) ஒன்று அறனே யாம்; பகுதியார்ப

திருக்குறள்—அறப்பால்.

பட்டு ஒழுக பெறின்—(மேற்கூறிய நான்கு) திறத்தினர்கண், பொருந்தி ஒழுகப் பெற்றால்.

அகலம். அவ்வப் பகுதியினர்களுக்குச் செய்யவேண்டிய மைகளைச் செய்த வழி கடவு நிலைமை அறமாம் என்ற வ தகுதியானது பகுதியின்பாற் பட்டொழுகப் பெறின் அறமாம்" றமையால், "தகுதி என ஒன்று' என்பதற்கு 'கடவு நிலைமை எ சொல்லப்பட்ட ஒழுக்கம் ஒன்று' என்று பொருள் உரைக்கப்பட்ட தொதுமலர்—அயலார். நான்கு பகுதியார் இன்னின்னர் எ மேற் கூறப்பட்டுள்ளனர். அப் பகுதியார்களுக்குச் செய்யவேண் டமைகளை அவர்களைப்பற்றிக் கூறும் அதிகாரங்களில் க கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. முந்திய உரையா பர்கள் பாடம் 'பகுதியாற்'. 'பகுதி' என்பதற்கு ஈண்டுப் பொ த்தமான பொருள் காணுதல் அரிதாகலானும், வேண்டுவ 'ஆர்' விகுதியை விடுத்து, வேண்டாததாய 'ஆல்' உருபை அல் துணையை ஆசிரியர் சேர்க்க மாட்டா ராகலானும் 'பகுதியாற்' பது ஏடு பெயர்த் தெழுதியோனுல் சேர்ந்த பிழை யெனக் கொள்க

கருத்து. பிறர்க்குச் செய்யவேண்டிய கடமைகளை கடவு ன்று செய்யின், அக் கடவு நிலைமை ஓர் அறமாம்.

உ. செப்ப முடையவ னக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமப் புடைத்து.

பொருள். செப்பம் உடையவன் ஆக்கம்—கடவு நிலை யைப் பொருந்தியவனது செல்வம், சிதைவு இன்றி எச்சத்திற் மாப்பு உடைத்து—அழிவு இல்லாமல் (அவனுக்கேயின்றி அ க்கட்கும் காப்பாதலை யுடைத்து.

அகலம். எச்சத்திற்கும் என்பதன் உம்மை செய்யுள் வி னால் தொக்கது. செப்பம்—சோர்மை—கடவு நிலைமை.

கருந்து. நடுவு நிலைமை யுடையவன் செல்வம் அழியாது. 82

கூ. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

பொருள். நன்றே தரினும்—நன்மையையே தரினும், நடு
விகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழிய விடல்—நடுவு நிலை
வறி வருஞ் செல்வத்தை அப்பொழுதே நீக்க விடுக.

அகலம். தரினும் என்பதன் உம்மை தாராமையை உணர்த்தி
ன்றது. ஏகாரம் இரண்டும் பிரிநிலைக்கண் வந்தன.

கருந்து. நடுவு நிலைமை தவறி வருஞ் செல்வத்தைக் கொ
ற்க. 83

ச. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

பொருள். தக்கார் தகவு இலர் என்பது—(ஒருவர்) தகுதி
டையார் (அல்லது) தகுதி இல்லார் என்பது, அவரவர் எச்சத்தா
ணப்படும்—அவரவருடைய புகழால் அல்லது இகழால் அறியப்
ம்.

அகலம். ஒருவன் இறந்த பின் எஞ்சி நிற்பது எச்சம். ஆ
வ, எச்சம் என்பதற்கு புகழ் அல்லது இகழ் எனப் பொருள் உரை
ப்பட்டது. தகுதியுடையார் அல்லது தகுதி இல்லா ரென்பத
றையே அவரவருடைய நல்ல மக்களாலும் தீய மக்களாலு
றியப்படும் என்று உரைப்பாரும் உளர்.

கருந்து. ஒருவர் தகுதியுடையார் என்பதை அவரது புகழ
ம், தகுதியில்லாதார் என்பதை அவரது இகழாலும் அறிக. 84

ஙு. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாண்மை சான்றோர்க் கணி.

பொருள். கேடும் பெருக்கமும் இல்(ல) அல்ல—வறுமை செல்வமும் இல்லாதன அல்ல; நெஞ்சத்து கோடாமை சான்றோர் அணி—மனத்தின்கண் (கடிவு நிலைமையை விட்டுச்) சாயாமை (கல் அறிவு, ஒழுக்கங்களால்) நிறைந்தவர்க்கு அழகு.

அகலம். 'இல்ல அல்ல' என்பது செய்யுள் விகாரத்த அகரம் கெட்டு நின்றது. நச்சர் பாடம் 'சான்றோர்க் கறிவு'.

கருத்து. வறுமையும் வளமையும் மாறிமாறி ஏரும் இயல்பு யன வாதலால், அவைபற்றி கடிவு நிலைமை தவறுத லாகாது.

கூ. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
கடுவொரீஇ யல்ல செயின்.

பொருள். தன் நெஞ்சம் கடிவு ஒருவி அல்ல செய்யின்— உன்னம் கடிவு நிலைமையின் நீக்கி மறக்கலைச் செய்யக் கருதின், ய கெடுவல் என்பது அறிக—யான் கெடுவேன் என்பதனை அற கடவன்.

அகலம். இகர அளபெடை இன்னிசைக்கண் வர செய்யின் என்பது யகர வொற்றுக் கெட்டு நின்றது. மறங் "அல்லவை" என்று பிறரும் ஆசிரியர் கூறியிருத்தலான், 'அ என்பதற்கு மறங்கள் என்று பொருள் உரைக்கப் பட்டது. ந பாடம் 'அறிதல்தன் னெஞ்சம்.'

கருத்து. கடிவு நிலைமையினின்று தவற நினைத்தல் கேட்டி அறிகுறி யாம்.

ஙு. கெடுவாக வையா துலக கடுவாக
வன்றிக்கட் டங்கியான் சூழ்வு.

பொருள். கடிவு ஆக வன்றிக்கண் தங்கியான் சூழ்வு—ம நிலைமையைக் கைக்கொண்டு அறம் புரிதலின்கண்ணே (நிலை

நடுவு நிலைமை.

றவனது வறுமையை, உலகம் கெடுவாக வையாது—உலகத்தார் மையாகக் கருதார்.

அகலம். 'கெடு' முதனிலைத் தொழிற்பெயர்.

கருத்து. அவனுடைய தாழ்வு விரைவில் நீங்கிவிடு மாதலால், னைக் கேடாக உலகத்தார் கருதார். 87.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

பொருள். சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்து

தன்னைச்)சம நிலைப்படுத்தி (நின்று தன்கண் வைத்த பொருளைச்) ாக நிறுக்கும் நிறைகோல் போல நின்று, ஒரு பால் கோடாமை ன்றோர்க்கு அணி—ஒரு பக்கத்துச் சாயாதிருத்தல் சால்புடை ார்க்கு அழகு.

அகலம். அந் நிறைகோலை வெள்ளிக்கோல் என்பர். ஒரு ம் சாயாதிருத்தல்—ஒருவன் பொருளை வவ்வாதிருத்தல். தாமத்தர் ம் 'சமஞ் செய்து'. 'ஒருபாற் கோடாமை' என்பதற்கு நீதி ங்குங்கால் 'பகை, நொதுமல், நட்பு என்னும் முத்திறத்தார்க்கும் பக் கூறுதல்' என்று உரைப்பாரும் உளர்.

கருத்து. பிறர் பொருளைக் கவராமை ஒழுக்க முடையார்க்கு ாகு. 88.

கூ. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

பொருள். ஒரு தலையா(க) உட்கோட்டம் இன்மை பெறின்— பக்கமாக மனக் கோட்டம் இல்லா திருத்தலைப் பெறுமாயின், ால் கோட்டம் இல்லது செப்பம்—சொற் கோட்டம் இல்லாத ழக்கம் நடுவு நிலைமை.

திருக்குறள்—அறப்பால்.

அகலம். கோட்டம்—கோணல். மனக் கோட்டமின்மை மனத்தின் நேர்மை. உட் கோட்டம் உடையவரும் சொற் கோட் மின்றிப் பேசுதல் கூடுமாகலின், உட்கோட்ட மின்மை பெறி என்றார்.

கருத்து. நினைப்பும் சொல்லும் ஒத்து நேர்மையாக ஒழுகு வேண்டும்.

௰. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகமாம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

பொருள். பிறவும் தம போல் பேணி செய்யின்—பி பொருள்களையும் தம் பொருள்கள் போலப் பேணி (வாணிகம்) செ யின், வாணிகம் செய்வார்க்கு வாணிகம் ஆம்—வாணிகத் தொ செய்வார்க்கு வாணிகம் வளரும்.

அகலம். செய்யின் என்பது யகர வொற்றுக் கெட்டு நின்ற வாணிகம் செய்வார்க்குப் பிறர் பொருளைக் கவர்தற் குரிய இடம் பல உண்டா மாகலான், அவரைப் பற்றி ஈண்டுக் கூறினர். மூன் உரையாசிரியர்கள் மூன்றும் சோக 'வாணிகம்' என்பதைக் கெ டார்கள். 'வாணிகமாம்' என்பது தெளிவும் தொடையின்ப பயக்கின்றமையால், அதுவே ஆசிரியர் பாடம் எனக் கொ நச்சர் பாடம் 'தமபோற் செயல்'.

கருத்து. வாணிகஞ் செய்வார் தம் பொருளுக்கு என்ன விரும்புவரோ, அவற்றைப் பிறர் பொருளுக்குக் கொடுத வேண்டும்.

ஐம் அதி :—அடக்க முடைமை.

அஃதாவது, தான் அடங்கி யொழுகுதலும், தன்னை அ யொழுகுதலு மாம். தன்னை அடக்குதல்—தன் பொறிகள் முத வற்றை அடக்குதல்.

அடக்க முடைமை.

க. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாளிரு ளுய்த்து விடும்.

பொருள். அடக்கம் அமரருள் உய்க்கும்—அடக்கம் (தன்னை யடையாரைத்) தேவருட் சேர்க்கும்; அடங்காமை ஆர் இருள் உய்த்து விடும்—அடங்காமை (தன்னை யுடையாரை) நிறைந்த இருளையுடைய நரகத்தின்கண் செலுத்தி விடும்.

கருத்து. அடக்கம் சுவர்க்கத்தை தரும்; அடங்காமை நர கத்தை தரும். 91.

உ காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு.

பொருள். அடக்கத்தை பொருளா(க) காக்க—(மக்கள்) அடக் கத்தை(க் காக்க வேண்டிய ஒரு) பொருளாகக் காக்கக் கடவர்; உயிர் கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை—(மக்கள்) உயிர்க்கு அதனினும் மற்பட்ட தன்மை இல்லை.

அகலம். ஆக்கம்—செல்வம். அதனைத் தரும் தன்மையை ஆக் ம் என்றார். 'மக்கள்' என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது.

கருத்து. ஒருவன் அடக்கத்தை விடாது காக்கக் கடவன். 92.

நூ. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

பொருள். அறிவு அறிந்து ஆற்றின் அடக்க பெறின்—(ஒரு
ன் தன் உள்ளத்தின்கண் உள்ளதாகிய) அறிவை (ஆராய்ந்து)
றிந்து (அடக்கும்) செறியில் (உளம், நா, உடல்) அடங்கப் பெறின்
செறிவு அறிந்து சீர்மை பயக்கும்—(அவ்வறிவு அவ்) அடக்கத்தினை
றிந்து அவ்வுக்குச் சிறப்பினை கல்கும்.

அகலம். சிறப்பு—வீடு. "ஓர்த்துள்ளம்" என்னும் தொடர்

திருக்குறள்—அறப்பால்.

கத்துக் குறளை நோக்குக. உளம், நா, உடல் அடங்குவதற்கு
ளத்தின்கண் உள்ளதாகிய அறிவை அறிதல் இன்றி யமையாத
லான், அறிவு அறிந்து என்றார். அவ் வறிவே மெய்ப்பொரு
லால், அது செறிவறிந்து சீர்மை பயக்கும் என்றார்.

கருந்து. அடக்க முடையார் வீடு பெறுவர்.

நூ. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

பொருள். நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்—(த
இல்வாழ்க்கை) நிலையினின்று வேறுபடாது (உளம், நா, உ
அடங்கியவனது தோற்றம், மலையினும் மாண பெரிது—மலையி
மிகப் பெரியது.

அகலம். தோற்றம்—வினக்கம். தாமத்தர் பாடம் 'நிலை
பிரியா'. இல்வாழ்க்கை நிலையினின்று வேறுபடாது அடங்கு
வது, இல்வாழ்க்கையின்கண் அடக்கியாள வேண்டியவர்களை அ
யாண்டுகொண்டே தான் அடங்கி யொழுகல். "கருமஞ் செ
மல்" என்னும் தொடக்கத்துக் குறளையும் நோக்குக. மூ
மூன்று குறள்களால் பொதுவான அடக்கத்தைக் கூறினார்.
குறளால் பிறருக்கு அடங்கி யொழுகுதலின் பெருமையைக் கூ

கருந்து. இல் வாழ்வானது அடக்கம் அவனுக்கு மிக உ
பெருமையைத் தரும்.

நூ. எல்லார்க்கு நன்றும் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கோர் செல்வத் தகைத்து.

பொருள். பணிதல் எல்லார்க்கும் கன்றும்—பணிதல் ஏ
ருக்கும் கல்ல தாம்; அவருள்ளும் செல்வர்க்கு ஓர் செல்வம் தன
—எல்லாருள்ளும் செல்வவந்தருக்கு (அதனோடு வேறு)

அடக்க முடைமை.

செல்வ மாம் தகைமையை உடைத்து.

அகலம். மூன்றிய உரையாசிரியர்கள் பாடம் 'செல்வர்க்கே'. ண்டு ஏகாரம் வேண்டப்படுவதன் ருகலானும், 'ஓர்' இன்றி பமையாது வேண்டப்படுவ தொன் ருகலானும், 'செல்வர்க்கோர்' ன்பதே ஆசிரியர் பாடம் எனக் கொள்ளப்பட்டது. "பெருமை பெருமித மின்மை"—நிருக்குறள்.

கருத்து. செல்வர்க்கு அடக்கம் சிறப்பினைத் தரும். 95.

சு. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

பொருள். ஒருமையுள் ஆமை போல் ஐந்து அடக்கல் ஆற்றின்—ஒரு பிறப்பின்கண் (ஒருவன்) ஆமை போல ஐம் பொறிகளையும் அடக்குதலைச் செய்யின், எழுமையும் ஏமாப்பு உடைத்து—(அவன் தையும்) எழு பிறப்பின்கண்ணும் (அவனுக்கு அது) காவலாதலை புடைத்து.

கருத்து. அடக்கம் மேல் வரும் எழு பிறப்பிலும் பெருமை யக்கும். 96.

எ. யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குட் பட்டு.

பொருள். யா காவார் ஆயினும் நா காக்க—(மாக்கள்) எவற்றை அடக்காராயினும் காவினை அடக்குக; காவாக்கால் சொல் இழுக்குள் பட்டு சோகாப்பர்—(நாவினை) அடக்காதபொழுது (அவர்) சொற் குற்றத்துட் பட்டுத் தொக்கப்படுவர்.

அகலம். மணக்குடவர் பாடம் 'சொல்லிழுக்குட் பட்டு'. மற்றை நால்வர் பாடம் 'சொல்லிழுக்குப் பட்டு'. நாவினைக் காவா தார் சொல்லிழுக்குட் பட்டுச் சோகாப்பர் என்பதே அதிகப் பொரு

மாகலான், மணக்குடவர் பாடமே ஆசிரியர் பாடம் எனக் கொள்
ட்டது. சோகாத்தல்—துக்கப்படுதல்.

கந்தீ. ஒருவன் நாவினை அடக்கிப் பேசுக. 97.

அ. ஒன்றாலும் நீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்.

பொருள். ஒன்றாலும் நீ சொல் பொருள் பயன் உண்டாயின் ஒருவன் சொல்லும் சொற்களில்) ஒன்றாலும் நீய சொல்லின் ாருளினது (நீய) பயன் உண்டாயின், நன்று ஆகா(த)து ஆகி ம்—(அவன் சொல் ஒவ்வொன்றும்) நன்மையைத் தாராத சொல் ஆ விடும்.

அகலம். நன்றாகாதது என்பது செய்யுள் விகாரத்தால் தக கெட்டு நின்றது.

கருத்து. ஒருவன் சொல்லும் சொற்களில் ஒன்று நீச் சொற் னே அளிப்பின், அவன் சொல்லிய சொற்களெல்லாம் நீயனவாய் 98.
ம்.

கூ. நீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாறுதே
வாயினுற் சுட்ட வடு.

பொருள். நீயினால் சுட்ட புண் உள் ஆறும்—நீயால் சுட்ட ன் உள்ளே ஆறிவிடும்; வாயினால் சுட்ட வடு ஆறாது—சொல்லாற் ட்ட புண் (உள்ளே ஒரு நாளும்) ஆறாது.

அகலம். எகாரம் தேற்றம். வாய் என்பது ஆகுபெயர், யினின்று வரும் சொல்லிற்கு ஆயினமையால். மூத்திய உரை ாசிரியர்கள் பாடம் 'நாவினால்'. 'வாயினால்' என்பது எதுகை ம் மோனையும் ஒத்துத் தொடையின்பம் பயத்தல் காண்க. அன்றி ம், வாய் என்பது ஆசிரியர் அடிக்கடி வழங்கும் சொற்களில் ஒன்று

ஒழுக்க முடைமை

ாலான், 'வாயினால்' என்பதே ஆசிரியர் பாடம் எனக் கொள்ளப்
ட்டது.

கருத்து. ஒருவனை இகழ்ந்து பேசின், அஃது அவன் மனத்தை
ட்டு ஒரு நாளும் நீக்காது. 99.

ய. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

பொருள். கதம் காத்து அடங்கல் கற்று ஆற்றுவான் செவ்வி
னத்தை அடக்கி (த் தான்) அடங்குதலைக் கற்றுக் கைக்கொண்டு
ழகுவானது நல்ல சமயத்தை, ஆற்றின் நுழைந்து அறம் பார்க்கும்
(அவன்பாற் செல்லுதற்குரிய) நெறியிற் புகுந்து அறக்கடவுள்
ர்க்கும்.

அகலம். அறம் என்பது ஆகுபெயர், அறக்கடவுளுக்கு
னமையால்.

கருத்து. வெகுளியை விடுத்து அடக்கத்தைக் கைக்கொண்டு
ழகுபவன் வேண்டியவற்றை யெல்லாம் கடவுள் அருள்வார். 100.

ய௧-ம் அதி:—ஒழுக்க முடைமை.
அஃதாவது, நன்னடக்கை யுடைமை.

க. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

பொருள். ஒழுக்கம் விழுப்பம் தரலான்—ஒழுக்கம் (தன்னை)
டையார்க்கு) மேன்மையைத் தருதலால், ஒழுக்கம் உயிரினும் ஓம்ப
ம்—ஒழுக்கத்தை(த்தமது) உயிரினும் (மிகப்) பேணவேண்டும்.

அகலம். பரிமேலழகர் பாடம் 'தரலான்'. மற்றை நால்வர்
டம் 'தரலால்'.

திருக்குறள்—அறப்பால்.

கருத்து. தன் உயிரைக் காத்தலினும் மேலாக ஒருவன்
ஒழுக்கத்தைக் காக்கக் கடவன்.

உ: பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோ
தேரினு மஃதே துணை.

பொருள். பரிந்து ஓம்பி ஒழுக்கம் காக்க—(ஒருவன்)
திப் பேணி ஒழுக்கத்தைக் காக்கக் கடவன்; தெரிந்து ஓம்பி
னும் அஃதே துணை—(தனக்குத் துணையாவனவற்றை யெல்
அறிந்து பேணி ஆராயினும் ஒழுக்கமே (தனக்குத்) துணை (யாகல

கருத்து. ஒருவனுக்கு நல்லொழுக்கமே "பொன்றுங்
பொன்றாத் துணை."

கூ. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

பொருள். ஒழுக்கம் உடைமை குடிமை (ஆம்)—ஒழு
உடைமையால் (ஒருவனுக்கு) குடியுயர்வு உண்டாம்; இழுக்கம்
ந்த பிறப்பு ஆய் விடும்—இழுக்கத்தால் (ஒருவனுக்குத்) த
குடிப்பிறப்பின் தன்மை உண்டாகிவிடும்.

அகலம். பிறப்பு என்பது ஆகு பெயர், அதன் தன்ம
ஆயினமையால். ஆம் என்னும் ஆக்கச் சொல் வருவித்து உ
பட்டது.

கருத்து. நல் லொழுக்கத்தால் குடிப் பிறப்புயர்வும் தீ ஒ
கத்தால் குடிப்பிறப்புத் தாழ்வும் உண்டாம்.

சு. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

பொருள். பார்ப்பான் ஒத்து மறப்பினும் கொள்ளல் ஆ
(மறைஃதோக்) கற்பவன் மறைகளை மறப்பினும் (அவற்றை மறுப

ஒழுக்க முடைமை.

ற்றுக்கொள்ளல் கூடும்; பிறப்பு ஒழுக்கம் குன்ற கெடும்—(அவன்)
குடிப்பிறப்பின் ஒழுக்கம் குறையக் கெடுவான்.

கருத்து. கல்வியினும் ஒழுக்கம் மேம்பட்டது. 104.

எ. அழுக்கா றுடையான்க ணுக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

பொருள். ஒழுக்கம் இல்லான்கண்—என்னடக்கை இல்லா
ான்கண், அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று—பொருமை
டையவனிடத்துச் செல்வம் (இல்லையாதல்) போல, உயர்வு இல்லை—
யர்ச்சி இல்லை(யாகும்).

கருத்து. ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்வு இல்லை. 105.

சு. ஒழுக்கத்நி னெல்கா ருயரோ ரிழுக்கத்நி
னேதம் படுபாக் கறிந்து.

பொருள். இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து—(என்
டக்கையினின்று) தவறுதலால் குற்றம் உண்டாதலைத் தெரிந்து,
ரயோர் ஒழுக்கத்தின் ஒல்கார்—அறிவுடையோர் என்னடக்கையி

ரின்று தளரார்.

அகலம். 'பாக்கு' என்பது தொழிற்பெயர் விகுதி. முதல் இன்' ஐந்தாம் வேற்றுமைப் பொருளிலும், இரண்டாவது 'இன்' ன்றும் வேற்றுமைப் பொருளிலும் வந்தன.

கருத்து. அறிவுடையார் ஒழுக்கத்தினின்று தவறார். 106.

எ. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி னெய்துவ ரெய்தாப் பழி.

பொருள். ' ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர்—(மாக்கர்) தன் டக்கையால் மேன்மையை அடைவர்; இழுக்கத்தின் எய்தா(த)

பழி(யும்) எய்துவர்—(நன்னடக்கையினின்று) தவறுதலால் அ வொண்ணாத பழியையும் அடைவர்.

அகலம். "கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்க பொல்லாத தில்லை யொருவற்கு—கல்லாய், இழுக்கத்தின் மிக்க வில்லை யில்லை, ஒழுக்கத்தின் மிக்க வுயர்வு".—பழமொழி. கெ விகாரத்தால் எய்தாத என்பதன் சுறும், உம்மையும் கெட்டு நி

கருத்து. ஒழுக்கத்தால் புகழையும், இழுக்கத்தால் இக அடைவர்.

அ. நன்றுக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழு மென்று மிடும்பை தரும்.

பொருள். நல் ஒழுக்கம் நன்றுக்கு வித்தாகும்—நல்ல கை இன்பத்திற்குக் காரண மாகும்; தீ ஒழுக்கம் என்றும் இ தரும்—தீய நடக்கை எஞ்ஞான்றும் துன்பம் தரும்.

அகலம். நன்று என்பது இன்பம் எனப் பொருள் லாலும், எதுகை நயம் பயத்தாலலும், 'நன்றுக்கு' எ ஆசிரியர் பாடம் எனக் கொள்க.

கருத்து. நல்லொழுக்கம் இன்பத்தையும் தீ யொழுக்கம் பத்தையும் தரும்.

கூ. ஒழுக்க முடையவர்க் கொல்லாதே தீய வழுக்கியும் வாயாற் சொலல்.

பொருள். தீய வழுக்கியும் வாயால் சொல்லல்—தீய

னே கழுவியும் வாயினற் சொல்லுதல், ஒழுக்கம் உடையவர்க்
லாது—எல்ல கடக்கை யுடையார்க்கு இயலாது.

அகலம். எகாரம் அசை. மணக்குடவர், காமந்தர் '
'ஒல்லாதே'. மற்றை மூவர் பாடம் 'ஒல்லாவே.' 'ஒல்ல

பிறனில் விழையாமை.

ாண்பது ஒருமை வினையா யிருத்தலான், அதுவே ஆசிரியர் பாடம்
ாகக் கொள்ளப்பட்டது.

கருந்து. ஒழுக்க முடையவர் தீய சொற்களை ஒருபோதும்
சொல்லார். 109.

ஐ. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

பொருள். பலகற்றும் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார்—
ல நூல்களைக் கற்றும் உயர்ந்தாரோடு பொருந்த கடத்தலைக்
ல்லாதவர், அறிவு இல்லாதார்—அறிவு இல்லாதவர்.

அகலம். இல்லாதார் என்பது செய்யுள் விகாரத்தால் ஈகர
வாற்றுக் கெட்டு நின்றது. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே"
ன்றமையான், உலகம் என்பதற்கு உயர்ந்தார் எனப் பொருள்
ரைக்கப்பட்டது.

கருந்து. ஒருவன் உயர்ந்தோர் கடையைக் கைக்கொள்க.110.

ஐஉ-ம் அதி:—பிறனில் விழையாமை.

அஃதாவது, பிறனது மனைவியைக் காதலியாமை. 'இல்'
ன்பது ஆருபெயர், அதன்கண் வாழும் இல்லாளுக்கு ஆயினமையால்.

பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

பொருள். பிறன் பொருளான் பெட்டு ஒழுகும் பேதைமை
-பிறனுடைய பொருளாகிய மனையாளைக் காதலித்து நடக்கும்
டமை, ஞாலத்து அற(மே) பொரு(ளே) கண்டார்கண் இல்—
லகத்தில் அற நூலையாவது பொருள் நூலையாவது அறிந்தாரிடத்து
ல்லை.

திருக்குறள்—அறப்பால்.

அகலம். ஒருவன் மனைவி அவனுடைய பொருளானபடி அவளைப் 'பிறன் பொருள்' என்றார். அறம், பொருள் எ ஆருபெயர்கள், அவற்றைக் கூறும் நூல்களுக்கு ஆயினமை ஓகாரம் இரண்டும் செய்யுள் விகாரத்தால் தொக்கன.

கருத்து. பிறன் மனையாளைக் காதலித்தல் கனவும், ப மாம்.

உ. அறன்கடை நின்றாரு னெல்லாம் பிறன்கடை நின்றாரிற் பேதையா ரில்.

பொருள். அறன்கடை நின்றாருள் எல்லாம்—மறத்தில் நின்றவர்களுள் எல்லாம், பிறன்கடை நின்றாரின் பேதையார் இ பிறன் (வீட்டுப்) புறவாயிலின்கண் நின்றவரைப் போல மன இல்லை.

அகலம். கடை—புறம். அறத்திற்குப் புறம் மறமாத அதனை 'அறன்கடை' என்றார். பிறன் மனையாளிடம் செல் அவன் வீட்டு முன்வாயில் வழியாகச் செல்லாமல் ஒளித்து வாயில் வழியாகச் செல்வது வழக்காகலின், பிறன்கடை நி என்றார்.

கருத்து. பிறன் மனையாளைக் காதலிப்பவர் மற்றைய ப களைச் செய்பவரினும் பெரு மடையர்.

ஈ. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற் றீமை புரிந்தொழுகு வார்.

பொருள். மன்ற தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகு —(தம்மை) மிகத் தெளிந்துகொண்டவருடைய இல்லாவிட தீமை புரிந்து நடப்பவர், விளிந்தாரின் வேறு அல்லர்—இறந்த வேறு அல்லர்.

பிறனில் விழையாமை.

அகலம். தெளிந்தார்—(தம்மை நல்லொழுக்க முடையவ
ரன்று தமது நண்பராகவோ தொழிலாளராகவோ) தெளிந்
காண்டவர்.

கருத்து. தெளிந்தாருடைய இல்லாளிடத்துத் தீமை புரிபவ
சத்தா ராவர். 113

ச. எனைத்துணைய னாயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகில்.

பொருள். தினை துணையும் தேரான் பிறன் இல் புகில்—
ருவன்) சிறிது அளவும் ஆராயாதவனாய்ப் பிறனுடைய இல்லின
ன் துழையின், எனை துணையன் ஆயினும் என் ஆம்—எவ்வள
ருமை யுடையவ னானாலும் யாது பயன் ஆம்? (ஒரு பயனு
லை).

அகலம். தேரான்—(பிறன் இல்லின்கண் தீமை புரியச் செ
னால் தனக்கு உண்டாகும் கேடுகளை) ஆராயாதவனாய். மணக்
வர் பாடம் 'எனைத்துணையனாயினும்'; 'புகில்'. முந்திய உரை
சிரியர்கள் பாடம் 'எனைத்துணைய ராயினும்'. 'புகல்'. 'எனை
ணய னாயினும், என்பது 'தேரான்' என்பதற்கு ஒப்ப ஒருமைய
த்தலானும், புகில் என்பது பொருத்தமான பொருளைத் தருதல
ம், அவையே ஆசிரியர் பாடங்கள் எனக் கொள்ளப்பட்டன.

கருத்து. பிறன் மனையாள்பாற் செல்பவன் தனது பெருமை
யெல்லாம் இழப்பன். 114

ரு. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

பொருள். எளிது என இல் இறப்பான்—(பிறனது இல்லின்
செல்லுதல்) எளிது என்று கருதி (ப்பிறன்) இல்லினுள் செ

பவன், எ ஞான்றும் விளியாது நிற்கும் பழி எய்தும்—எஞ்ஞான்
அழியாது நிற்கும் பழியை அடைவான்.

கருந்து. பிறன் மனையான்பாற் செல்பவன் அழியாத பழி அடைவன்.

கூ. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

பொருள். பகை பாவம் அச்சம் பழி என நான்கும்—பகை பாவம் பழி பயம் என்று சொல்லப்பட்ட நான்கும், இல் இறப்பான்கண் இகவா ஆம்—பிறனது இல்லின்கண் செல்பவன் இடத்தில் (நின்று) நீங்கா வாம்.

அகலம். "அறம்புகழ் கேண்மை பெருமையிக் நான்கு பிறன்ரூர கச்சுவார்ச் சேரா—பிறன்ரூர, கச்சுவார்ச் சேரும் பகை பழி பாவமென், றச்சத்தோ டிக்கூற் பொருள்".—நாலடியார். இல் விறப்பான்கண் என்பது வேற்றுமை மயக்கம், ஏழாம் வேற்றுமை யுருபு ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வந்தமையான்.

கருந்து. பிறன் மனையான்பாற் செல்பவனை விட்டுப் பகை பாவம், அச்சம், பழி என்னும் நான்கும் நீங்கா. 11

எ. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலா
பெண்மை நயவா தவன்.

பொருள். பிறன் இயலான் பெண்மை நயவாதவனே—பிறனது இயல்புக்குத் தக்கபடி ஒழுகுகின்றவனது பெண்மையினை விரும்பாதவனே, அறன் இயலான் இல்வாழ்வான் என்பான்—அறத்தின் இயல்போடு கூடி இல்வாழ்பவன் என்று தெரிவித்து (அறிவுடையோரால்) சொல்லப்படுவான்.

பிறனில் விழையாமை.

அகலம். எகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது. பிறன் இல்புக்குத் தக்கபடி ஒழுகக் கடமைப் பட்டவனாதலால், பிறன் லான் என்றார். பெண்மை—பெண்ணோடு கூடி நுகரும் இன்பம். 'ஐ' என்பது 'ஒடு' என்னும் உருபுப் பொருளைத் தந்தது.

கருந்து. பிறன் மனையாளைக் காதலியாதவன் அற நெறியில் வாழ்க்கையை நடாத்துபவன். 117.

அ. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு.

பொருள். பிறன் மனை நோக்காத பேராண்மை—பிறனது
ாயாளைத் (தீய எண்ணத்துடன்) பாராத பெரிய ஆண்மைத்
மை, சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கும்—சால்புடை
க்கு அறம் மாத்திரமா? நிறைந்த ஒழுக்கமும் ஆம்.

அகலம். ஒழுக்கும் என்பதன் உம்மை செய்யுள் விகாரத்தால்
ாக்கது. 'மனை' ஆகுபெயர், மனையாளுக்கு ஆயினமையால்.
றன்மனை பின்னோக்காப் பீடினிது".—இனியவை நாற்பது.

கருத்து. பிறன் மனையாளைக் காதலியாமை அறமும் ஒழுக்கமு
. 118.

௬. நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறர்க்குரியா டோடோயா தார்.

பொருள். நாமம் நீர் வைப்பில் நலத்துக்கு உரியார் யார் என்
ன்—அச்சத்தைத் தரும் கடல் சூழ்ந்த உலகின்கண் நன்மைக்கு
பவர் யார் என்னின், பிறற்கு உரியாள் தோள் தோயாதார்—
னுக்கு உரியவளது தோளினைச் சேராதவர்.

183

திருக்குறள்—அறப்பால்.

அகலம். செய்யுள் விகாரத்தால் நலத்துக்கு என்பது அ
சாரியை கெட்டும், நாம் என்பது 'அம்' சாரியை பெற்றும் நின்
நாம்—அச்சம்.

கருத்து. பிறன் மனையாளைக் காதலியாதவர் எல்லா நன்
களையும் பெறுதற்குரியர்.

௰. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரைய
பெண்மை நயவாமை நன்று.

பொருள். அறன் வரையான் அல்ல செய்யினும்—(ஒரு
அறத்தைக் கைக்கொள்ளாதவனாய் மறங்களைச் செய்யினும், பி
வரையாள் பெண்மை நயவாமை நன்று—பிறனுடைய வரைக்
நின் றொழுகுவாளது பெண்மையினை விரும்பாமை நன்மை.

அகலம். பிறன் வரையும் வரைக்குள் நின்றொழுகுவா

பிறன் வரையான் என்றார். செய்யினும் என்பது யாரை வெ
கெட்டு நின்றது.

கருந்து. ஒருவன் அறத்தைச் செய்யாது மறத்தையே செ
னும், பிறன் மனையாளைக் காதலியா திருத்தல் நன்மை.

யிடம் அதி:—பொறை யுடைமை.

அஃதாவது, பொறுமை யுடைமை.

க. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

பொருள். அகழ்வாரை தாங்கும் நிலம் போல—(மண்வெ
கொண்டு தன்னைத்) தோண்டுவாரைத் தாங்கும் நிலம் போல, த
இகழ்வார்ப் பொறுத்தல் தலை—தம்மை இகழ்வாரைப் பொறு
தலையாய பொறுமை.

பொறை யுடைமை.

அகலம். இகழ்வார் என்பது இரண்டாம் வேற்றுமை,
தொகை. "தம்மை யிகழ்த்தமை தாம்பொறுப்ப தன்றிமற், றெ
ம யிகழ்த்த வினைப்பயத்தா—லும்மை, யெரிவாய் நிரயத்து வீ
ழொ லென்று, பரிவதூஉஞ் சான்றோர் கடன்."—நாலடியார்.

கருந்து. தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலையா
பொறுமை.

121

உ. பொறுத்த விறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

பொருள். இறப்பினை என்னும் பொறுத்தல்—(ஒருவன்
ர் செய்த) மிகையினை எஞ்ஞான்றும் பொறுக்கக் கடவன்; அதனை
த்தல் அதனினும் நன்று—அம் மிகையினை (உடனே) மறத்த
தல் பொறுத்தலினும் (மிக) நன்று.

கருந்து. பிறர் செய்த பிழையை உடனே மறந்திடுக. 122

ங. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

பொருள். விருத்த ஒரால் இன்மையுள் இன்மை—விருத்தி
ர விலக்குதல் வறுமையுள் வறுமை; மடவார்ப் பொறை வன்
யுள் வன்மை—(மிகை செய்த) மடையரைப் பொறுத்தல் வலி
யுள் வலிமை.

அகலம். மடவார் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை.
க செய்தற்குக் காரணம் மடமை என்பதைக் குறிக்கவே 'மட
ப் பொறை' என்றார். வன்மையுள் வன்மை அறிவுடைமை,
றிவற்றங் காக்குங் கருவி" என்று ராகலின். இன்மையுள்
மை அறிவின்மை, "அறிவின்மை யின்மையு ளின்மை" என்று
லின். 'ஒப்புமுடித்தல்' என்னும் உத்தியால் மடவார்ப் பொறைக்

க் காரணமாய அறிவுடைமையைக் கூறும் இக் குறளில் வி
)தாராலுக்குக் காரணமாய அறிவின்மையையும் கூறினர்.

கருந்து. அறிவில்லாதார் செய்த பிழைகளைப் பொறுத்
வண்டும்.

. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடை
போற்றி யொழுகப் படும்.

பொருள். நிறை உடைமை நீங்காமை வேண்டின்—
டைமை (தன்னை விட்டு) நீங்காதிருத்தலை (ஒருவன்) விரும்
பொறை உடைமை போற்றி ஒழுக படும்—பொறையுடைமை
பேணி ஒழுக வேண்டும்.

கருந்து. பொறையுடையவனை விட்டு நிறையுடைமை நீங்க

ரு. ஒறுத்தாரை யொன்றுக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

பொருள். ஒறுத்தாரை ஒன்றுக வையார்—(தமக்குத்
செய்தானை) ஒறுத்தவரை ஒரு பொருளாக மதியார்; பொறுத்த
பொன் போல் பொதிந்து வைப்பர்—பொறுத்தவரைப் பொ
(த்துணியில் பொதிந்து வைத்தல்) போல (மனத்தின்கண்) பே
வைப்பர் (அறிவுடையார்).

அகலம். ஒறுத்தவர்—தண்டித்தவர். 'அறிவுடையார்'

பது அவாய்நிலையான் வந்தது.

கருந்து. பொறுத்தாரை அறிவுடையார் போற்றுவர்.

க. ஒறுத்தார்க் கொருநாளே இன்பம் பொறுத்தார்க்கு
பொன்றும் துணையும் புகழ்.

பொருள். ஒறுத்தார்க்கு ஒரு நாளே இன்பம் (ஆம்)—

பொறை யுடைமை.

ருந் நீக்கிழைத்தானை) ஒறுத்தவர்க்கு ஒரு நாளே இன்பம் ஆ
பொறுத்தார்க்கு பொன்றும் துணையும் புகழ் (ஆம்)—பொறுத்த
க்கு (அவர்) இறக்கும் அளவும் (இன்பத்தோடு) புகழ் ஆம்..

அகலம். முந்திய உரையாசிரியர்கள் பாடம் 'ஒரு நாளை
"பொன்றும் துணையும்" என்று பின்னர்க் கூறியிருத்தலின், ப
நிலே ஏகாரம் சண்டு இன்றியமையாதது. ஆகலான் 'ஒரு நாளே
என்பது ஆசிரியர் பாடம் எனக் கொள்ளப்பட்டது. 'ஆம்' எ
னும் ஆக்கச் சொல் இரண்டிடத்தும் வருவித்து உரைக்கப்பட்டது

கருந்து. பொறுத்தவர்க்குப் பொன்றும் துணையும் இன்பமு
புகழும் உண்டு.

12

எ. அறனல்ல கற்பிறர் செய்யினும் கொந்து
நிறனல்ல செய்யாமை கன்று.

பொருள். அறன் அல்ல தன் பிறர் செய்யினும்—அறன் அ
லாத செயல்களைத் தனக்குப் பிறர் செய்யினும், கொந்து நிற
அல்ல செய்யாமை கன்று—மனம் வருந்தி நிறன் அல்லாத செய
களைச் செய்யா திருத்தல் கன்மை.

அகலம். பிறர் செய்த தீங்குகளைப் பொறுத்தல் நிறனுடை
செயலாம்; பொறுது எதிர்த் தீங்கு செய்தல் நிறனற்ற செயலா
அதுபற்றித் 'நிறனல்ல' என்றார். பரிமேலழகர் பாடம் முறைமை
'நிறனல்ல', 'கோகொந்து', 'அறனல்ல'. நருமர் பாடம் முறைமை
'நிறனல்ல', 'கோர்கொந்து,' 'அறனல்ல.' தாமத்தர் பாட
முறையே 'நிறனல்ல,' 'கோய்கொந்து,' 'அறனல்ல'. அற
அல்ல—அறன் அல்லாத செயல்கள்; அஃதாவது, பாவச்செயல்கள்

திருக்குறள்—அறப்பால்.

தகுதி. மூன்றுஞ் சோர்ய 'செய்யினும்' என்பதன் உம்மை தொக்
குரிய 'அறனல்ல' வற்றையே குறிக்கும். ஆகலான், 'அறனல்ல' எ
பதையே ஆசிரியர் முதற் சோர்க் கூறினர் என்று கொள்க. திரு
மாக எழுதத் தெரியாதவன் எழுதிய எட்டெழுத்தில் அகரத்திற்
நிகரத்திற்கும் வேற்றுமை காண்டல் அரிது. அவ் வேட்ட
பெயர்த்தெழுதியோன் முதற் சொன் முதல் எழுத்தாகிய அகரத்
நிகரமாகக் கருதி அன்னம் எழுதியிருத்தல் கூடும். அவ்வாறு
முதற் சோர் 'நிறனல்ல' என்றுய பின்னர் இக் குறளைப் படிக்
புலவர் எவரும் ஐந்தாஞ்சோர் 'அறனல்ல' என்பதுதான் என்று கரு
தல் இயற்கை. அவ்வாறு அவர் கருதிய பின்னர்க் குறளின் நா
காஞ்சோர் 'கொக்' என ஓர் அசையாக இருத்தல் கண்டு, அதனை
நிருத்த முயலுதலும் இயற்கை. அம் முயற்சியின் பயன்தா
குறளின் நான்காஞ் சோர் 'கோகொக்' எனவும், 'கோய்கொ
எனவும் 'கோகொக்' எனவும் மூன்றுக மூவர் உரை எடுகளி
காணப்படுகின்றது. நிறனல்லவற்றைத் தனக்குப் பிறர் செய்யினு
தான் அறனல்லவற்றைச் செய்யலாகா தென்பது யாவரும் அறி
தொன் றுகலான், அதனை ஈண்டுக் கூறுதல் மிகையே யாகும்; ஆனு
அறனல்லவற்றைச் செய்த பிறர்க்கும் கொக்து நிறனல்லவற்றை
செய்யலாகா தென்று கூறுதல் இன்றியமையாதது. ஆகலான், 'நி
னல்ல' என்பதையே ஐந்தாஞ் சோக ஆசிரியர் கூறினர் என்
கொள்க. ஐந்தாஞ் சோர் 'நிறனல்ல' என்றுய பின்னர் நான்காஞ் சோ
'கொக்து' என் நிருத்தலில் எவ்விதத் தடையும் இல்லை. ஆகலா
'அறனல்ல' என்பதையே முதற் சோரும், 'கொக்து' என்பதையே
நான்காஞ் சோரும், 'நிறனல்ல' என்பதையே ஐந்தாஞ் சோரும
ஆசிரியர் கூறினர் எனக் கொள்க.

கருத்து. தனக்குப் பிறர் பல மறங்களைச் செய்யினும், தான
அவரைப் பொறுக்கக் கடவன்.

அ. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

பொருள். மிகுதியான் மிக்கவை செய்தாரை—(செல்வம் தலியவற்றின்) மிகுதியினால் (செருக்குக் கொண்டு தமக்குத்) தீங்கு ன் இழைத்தாரை, தாம் தம் தகுதியால் வென்று விடல்—தாம் மது பொறுமையினால் வென்று விடுக.

அகலம். தகுதி என்பது ஈண்டுப் பொறுமை என்னும் ாருள் தந்து நின்றது.

கருத்து. தமக்குத் தீங்கு செய்தாரைப் பொறுத்திடுக. 128.

கூ. துறந்தாரிற் றூய்மை யுடைய சிறந்தார்வா
யின்னுச்சொ லேற்கிற் பவர்.

பொருள். இறந்தார் வாய் இன்னு சொல் கோற்கிற்பவர்—ய செய்தாரது வாயினின்று வரும் தன்பம் தரும் சொற்களைப் ாறுக்கும் ஆற்றலுடையவர், துறந்தாரின் தூய்மை உடையர்—ர்த்தாரினும் (அதற்) தூய்மை யுடையவர்.

அகலம். இல் என்னும் இடைச்சொல் ஆற்றலை உணர்த்தி றது.

கருத்து. பிறர் சொல்லும் இன்னுச் சொற்களைப் பொறுப்ப துறந்தாரினும் தூயர். 129.

ம. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னுச்சொ லேற்பாரிற் பின்.

பொருள். பிறர் சொல்லும் இன்னு சொல் கோற்பாரின் பின் றர் கூறும் தன்புற்தரும் சொற்களைப் பொறுப்பவர்க்குப் பின் உண்ணாது நோற்பார் பெரியர்—(ஆண்) உண்ணாமல் தவம் வார் பெரிய ராவர்.

அகலம். தவத்தினும் பொறுமை உயர்ந்தது என்றவாறு
மந்தர் பாடம் 'இன்னாது கோற்பாரின்'.

கருத்து. பிறரது இன்னாச் சொற்களைப் பொறுப்பவர் தவ
ய்வாரினும் மேற்பட்டவர். 130

௰௪-ம் அதி:—அழுக்கறாமை.

அஃதாவது, பொறாமை கொள்ளாமை.

தருமர் பாடம் 'அழுக்கறாமை'. மணக்குடவர், நச்சர், பரி
ழகர் பாடம் 'அழுக்காறாமை'. தாமந்தர் பாடம் 'அழுக்
றாமை'.

க. ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

பொருள். தன் நெஞ்சத்து அழுக்காறு இல்லாத இயல்பு
ன் உள்ளத்தின்கண் பொறாமை இல்லாத தன்மையை, ஒருவ
ழுக்கு ஆறா(க)கொள்க—ஒருவன் ஒழுக்கத்தின் நெறியாகக் கொள்

அகலம். பொறாமை—பிறர் ஆக்கங் கண்டு புழுங்குதல்.

கருத்து. பொறாமை யில்லாமை ஒழுக்கத்தின் நெறி. 1

உ. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

பொருள். யார்மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்
வரிடத்தும் (ஆக்கங் கண்டு) மனம் மகிழ்தலைப் பெற்றால், வி
பேற்றின் அஃது ஒப்பது இல்லை—(ஒருவன் பெறும்) விழு
பேறுகளுள் அதனை ஒப்பது இல்லை.

அகலம். விழுமிய—சிறந்த. அதனை—அப் பெறுதலை
அப் பேற்றை. அன்மை என்பது இன்மையை உணர்த்தாது,
றொரு பொருளாதலை உணர்த்தும் ஒரு சொல். அழுக்காறு—

அழுக்கறாமை.

ழுக்கங் கண்டு மனம் புழுங்குதல். அழுக்காறன்மை அல்லது அழு

ாற்றின் அன்மை—பிறர் ஆக்கம் கண்டு மனம் மகிழ்தல். பிற
ாக்கங்கண்டு மனம் மகிழ வேண்டு மென்பது "பிறனுக்கம் பே
ழுக்கறுப் பான்" என்பதனாலும் விளங்கும்.

கருந்து. பிறர் ஆக்கம் கண்டு மனம் மகிழ்தல் ஓர் ஒப்பற்
பது. 13

கூ. அறனுங்கம் வேண்டாதா னென்பான் பிறனுக்க
பேலு தழுக்கறுப் பான்.

பொருள். பிறன் ஆக்கம் பேலாது அழுக்கறுப்பான்—பிற
செல்வத்தை (க்கண்டு) மகிழாமல் பொறாமை கொள்பவன், அற
ாக்கம் வேண்டாதான் என்பான்—அறமும் பொருளும் வேண்ட
வன் என்று (பெரியோரால்) சொல்லப் படுவான்.

அகலம். அழுக்கறு என்பது பகுதி. அழுக்கறு—பொறா
கொள். பேலாது என்பது கண்டு மகிழாமல் என்னும் பொருட்

கருந்து. அழுக்காறு உடையவனுக்கு அறமும் பொருளு
ல்லை. 1

ச. அழுக்காற்றி னில்லவை செய்யா சிழுங்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

பொருள். இழுக்கு ஆற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து—த
தெறியில் துன்பம் உண்டாதலைத் தெரிந்து, அழுக்காற்றின் அல்ல
செய்யார் (அறிவுடையார்)—பொறாமையால் மறங்கோச் செய்
அறிவுடையார்.

அகலம். முதல் 'இன்', 'ஆன்' உருபின் பொருள் த
ன்றது. பாக்கு என்பது தொழிற்பெயர் விகுதி.

கருந்து. அழுக்காறு பல பாவங்களுக்கும் துன்பங்களுக்
ஏதுவாகும். 1

9. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னுர்
வழுக்கியுங் கேடீன் பது.

பொருள். ஒன்னுர் வழுக்கியும்—பகைவர் (கேடு செய்ய றியும், அழுக்காறு உடையார்க்கு கேடு சான்பது—பொருமை யுரு ர்க்குக் கேடு பயப்பதற்கு, அதுவே சாலும்—பொருண்மே தும்.

அகலம். பிரிநிலை ஏகாரம் செய்யுள் விகாரத்தால் தொக்கது 'கேடீன்பது' சான்காம் வேற்றுமைத் தொகை.

கருத்து. அழுக்காறு உடையானை அழித்தற்கு வேறு பட ண்டா; அதுவே போதும்.

10. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற மூடுப்பதூஉ
மூண்பதூஉ மின்றிக் கெடும்.

பொருள். கொடுப்பது அழுக்கறுப்பான்—(ஒருவனுக்கு ஒ ருவன்) கொடுப்பதன்கண் பொருமை செய்பவன், சுற்றம் உடு ும் உண்பதும் இன்றி கெடும்—சுற்றத்தோடு உடுப்பதும் உண்பது மாமல் கெடுவன்.

அகலம். கொடுப்பது அழுக்கறுப்பா னுடைய சுற்றம் உடு ம் உண்பதும் இன்றிக் கெடும் என உரைப்பாரும் உளர். அ று உரைத்தல், ஒவ்வொருவனும் செய்த வினைகளின் பயன் வனவனையே சேரும் என்ற வடமொழி தென்மொழிதூல் வு கு முரண்படும். அதனுல் அவ்வுரை பொருத்தாது. உடுப்பது க்கும் துணி. உண்பது—உண்ணும் உணவு. சுற்றம் என்ப ன்றும் வேற்றுமைத் தொகை. அனபெடை இரண்டும் இன் க்கண் வந்தன.

கருத்து. கொடுப்பது அழுக்கறுப்பான் தன் ஆக்கத்தி ற் காரமான சுற்றத்தையும், தன் உடையையும் உண்வையும் இழப்ப

அழுக்கருமை.

11. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வினையைக் காட்டி விடும்.

பொருள். அவ்வித்து அழுக்காறு உடையானை—(உன்ன தைக்) கோடுவித்துப் பொருமையை உடையவனை, செய்யவ தவ்வினையை காட்டி விடும்—திருமகள் (தன்) தமக்கைக்குக் காட் விடுவன்.

அகலம். 'தவ்வையை என்பது வேற்றுமை மயக்கம், இர டாம் வேற்றுமை யுருபு நான்காம் வேற்றுமைப் பொருள் தா தின்றமையால்.

கருத்து. பொருமையை உடையவன் வறுமையை அடைவ

அ. அழுக்கா றெனவொரு பாவி யிருஞ்செற்றுத்
நீயுழி யுய்த்து விடும்.

பொருள். அழுக்காறு என ஒரு பாவி—பொருமை என் சொல்லப்பட்ட ஒப்பற்ற பாவி, இரு செற்று நீயுழி உய்த்து விடும் செல்வத்தைக் கெடுத்து நரகத்தின்கண் புகுத்தி விடும்.

அகலம். நமது பாடம் 'பாவம்'.

கருத்து. பொருமை செல்வத்தைக் கெடுத்து நரகத்
புகுத்தி விடும். 1

கூ. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கக் கெடும்.

பொருள். அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்விய கேடும்—கோடிய உள்ளத்தான தது செல்வமும் நேரிய உள்ளத்தான வறுமையும், நினைக்க கெடும்—(ஒருவன்) நினைக்கும் (கால) அவ அழியும்.

102 OK

திருக்குறள்—அறப்பால்.

அகலம். மணக்குடவர் பாடம் 'நினைக்கக் கெடும்'. மற்றை ல்வர் பாடம் 'நினைக்கப் படும். "பொல்லா தவர்கண் மைபொருள் வதும், நல்லார் மிகவன் றுயர்கண் ணுவதும், தொல்லார் வினையால் நினுக் தொடர்பாய், நில்லா தெனும்வாய் மொழிநிச் சயமே".—

ரபோதசந்திரோதயம்.

கருத்து. இவ் விரண்டும் வெகு விரைவில் நீங்குவன. 139

ஐ. அழுக்காற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

பொருள். அழுக்காற்று அகன்றாரும் இல்லை—பொருமை ன்கண் (நின்று) செல்வ ராயினாரும் இல்லை; அஃது இல்லா பருக்கத்தின் நீங்தாரும் இல்—பொருமை இல்லாதாருள் செ

ித்தின் நீங்கினரும் இல்லை.

அகலம். தருமர், மணக்குடவர், தாமத்தர் பாடம் 'அழு
ாற் றகன்றரும்'. பரிமேலழகர் பாடம் 'அழுக்கற் றகன்றரும்
ர்சர் பாடம் 'அழுக்காற் றகன்றதும்', 'பெருக்கத்திற் றீர்ந்ததும்
ல்லார் என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை.

கருத்து. அழுக்காறு வறுமையையும், அழுக்காறின்மை செ
ித்தையும் கொடுக்கும். 14

ஐடு-ம் அதி:—கள்ளாமை.

அஃதாவது, திருடாமை.

i. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன்றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

பொருள். எள்ளாமை வேண்டுவான் ' என்பான்—(பி
ிகழாதிருத்தலை விரும்புவான் எனப்படுபவன், தன் நெ

கள்ளாமை.

ித்து ஒன்றும் கள்ளாமை காக்க—தனது உள்ளம் எத்தன்மை
ஒரு) பொருளையும் திருடக் (கருதா)மல் காக்கக் கடவன்.
கருத்து. கனவு இகழைத் தரும். 141

ஐ. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கொள்வே மெனல்.

பொருள். பிறன் பொருளை கள்ளத்தால் கொள்வேம் என—
னுடைய பொருளைத் திருட்டுத்தனத்தால் கொள்வேம் எ
னத்தால் உள்ளலும் தீதே—மனத்தால் நினைத்தலும் தீதே.

அகலம். எகாரம் தேற்றத்தின்கண் வந்தது. கள்ளம்—
ருட்டுத்தனம். தருமர், மணக்குடவர் பாடம் 'கள்ளத்தாற் கள்
னல்'. நச்சர், பரிமேலழகர் பாடம் 'கள்ளத்தாற் கொள்
னல்'. தாமத்தர் பாடம் 'கள்ளத்தாற் கொள்வோ மெனல்
ர் என்பதே போதியதாகலான், அதுவே ஆசிரியர் பாடம் எ
ரன்னப்பட்டது. உள்ளத்தால் என வேண்டாது கூறினர்.

கருத்து. கனவு செய்ய நினைத்தலும் தீது. 14

கூ. களவினு லாகிய வரக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

பொருள். களவினுல் ஆகிய ஆக்கம்—களவால் உண்ட
ல்வம், அளவு இறந்து ஆவது போல கெடும்—அளவு கட
ர்வது போல (த்தோன்றிக் கொண்டிருந்து) கெடும்.

அகலம். தருமர் பாடம் 'ஆக்கம் வினையுங்கா லாவது'. "
து செய்வா ரரும்பொரு ளாக்கத்தை, கல்லது செய்வார் கயப்ப
ஞல்லொலிநீர், பாய்வதே போலுந் துறைவகேள் தீயன, ஆ
பான்று கெடும்" என்ருர் பழமொழியார்.

திருக்குறள்—அறப்பால்.

கருந்து. களவினுல் வரும் செல்வம் வளர்வது போ
ன்றுமே யன்றி உண்மையில் கெடும். 1

சு. "களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

பொருள். களவின்கண் கன்றிய காதல்—களவின்கண் மி
சை, விளைவின்கண் வீயா(த) விழுமம் தரும்—(அவ்வாசை) வ
ால் நீங்காத துன்பத்தைத் தரும்.

கருந்து. களவின்கண் காதல் விளைவின்கண் துன்பம் த

நு. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கரு
தொச்சாப்புப் பார்ப்பார்க ளில்.

பொருள். அருள் கருதி அன்பு உடையர் ஆதல்-அருளை அவ
பை உடையவ ராதல், பொருள் கருதி பொச்சாப்பு பார்ப்பார்
—(பிறன்) பொருளை அவாவி (அவனுடைய) மறதியை (எ
ப்பார்பிடத்து இல்லை.

அகலம். தருமர், நச்சர் பாடம் 'பொய்ச்சாப்பு'.

கருந்து. களவு செய்வார்க்கு அன்பு உண்டாகாது. 1

சு. அளவின்க ணின்றொழுக லாற்றூர் களவின்கட்
கன்றிய காத லவர்.

பொருள். களவின்கண் கன்றிய காதல் அவர்—களவின்க

வேட்கையை யுடையவர், அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்
மது) எல்லையின்கண் நின்று ஒழுகல் செய்யார்.

அகலம். தமது எல்லையின்கண் நின்று ஒழுகல் செய்யார்
மனையின்கண் புகுந்து களவு செய்வர்.

கள்ளாமை.

ருந்து. களவினை விரும்புவோர் பிறர் மனை புகுந்தும் களவு
ார். 146.

ர. களவென்னுங் காரறி வாண்மை யாவென்னுங்
மாற்றல் புரிந்தார்க ணில்.

போருள். களவு என்னும் கார் அறிவு ஆண்மை—களவு என்று
ப்படும் இருண்ட அறிவினை ஆளுதல், அளவு என்னும் ஆற்றல்
ர்கண் இல்ல—(தமது) எல்லையுள் நின்றொழுகலாகிய வலி
ா விரும்பினரிடத்து இல்லை.

அகலம். அளவு என்பது ஆகுபெயர், அளவின்கண் நின்
கலுக்கு ஆயினமையால். களவாகிய காரியத்தைக் காரறிவு
ம் காரணமாக உபசரித்தார். நாமந்நர் பாடம் ' ஆற்ற லறிக்
ர '.

ருந்து. களவு செய்தற்குக் காரணம் களவால் செல்வம் ஆம்
ம் மயக்க அறிவே. 147.

ச. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

போருள். அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம் போல—தமது
ுள் நின்றொழுகுவாரது உள்ளத்தின்கண் அறம் (நிற்றல்)போல,
றிந்தார் நெஞ்சில் கரவு நிற்கும்—களவு செய்வாரது நெஞ்
கண் வஞ்சகம் (நிலைத்து) நிற்கும்.

ருந்து. தமது எல்லையுள் நின்றொழுகுவோர் அறத்தையே
ர்; களவினைச் செய்வோர் கரவையே கருதுவர். 148.

ஈ. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்ற தவர்.

பொருள். களவு அல்ல மற்றைய தேறுதவர்—களவு அல்
ன (வாகிய) மற்றையவற்றை அறியாதவர், அளவு அல்ல செய்து
:—(தமது) அளவுக்கு மிஞ்சிய செயல்களைச் செய்து அழிவர்.

அகலம். ஆங்கு, ஏ, என்பன அசைகள். தேற்றுதவர் என்பது
நினை யாகலான், அது பிழைபட்ட பாடம் என்றறிக.

கருத்து. களவு செய்வார் தம் வலிமையின் அளவுக்கு மிஞ்சிய
ல்களைச் செய்தழிவர். 149.

ம. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

பொருள். கள்வார்க்கு உயிர் நிலை தள்ளும்—திருடுவார்க்கு
: நிலையாகிய உடம்பு தவறும்; கள்ளார்க்கு புத்தேள் உலகு தள்
ளு—திருடாதார்க்குத் தெய்வ உலகம் தவறாது.

அகலம். தவறும்—அழியும். களவு செய்யுங்கால் காணப்படின்
ல்லப்படுவன் என்பதைக் குறிக்கவேண்டி, உயிர்நிலை தள்ளும்
ரூர். தவறாது—தவறாமல் எய்தும்.

கருத்து. களவு செய்வார் கொலையுண்டு இறப்பர்; களவை
த்தார் சுவர்க்கம் அடைவர். 150.

நடும்—அதி:—வாய்மை.

அஃதாவது, மனச்சான்று அறிந்ததை அறிந்தபடி
ால்லுதல்.

க. தன்னெஞ் சறிக்கது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

பொருள். தன்னெஞ்சு அறிக்கது பொய்யற்க—தன் மன
ன்று அறிந்ததனை அறிக்கதற்கு மாறாகக் கூறற்க; பொய்த்த பி

ம் நெஞ்சே தன்னை சுடும்—அறிந்ததற்கு மாறாகக் கூறிய பின்னர்
ன் மனச்சான்றே தன்னை வருத்தும்.

அகலம். தன் மனச்சான்று அறிந்ததை அறிந்தபடியே
றுதல் வாய்மை என்றும், அறிந்ததற்கு மாறாகக் கூறுதல் பொய்
ம என்றும், பொய்ம்மை கூறுவதால் இன்னது விளையு மென்று
றினார். 'நெஞ்சு' ஆகு பெயர், அதன் சான்றுக்கு ஆயினமையால்
னச்சான்று—மனத்தின்கண் சான்றாய் நிற்கும் அறிவு. முந்தி
ரையாசிரியர்கள் பாடம் 'அறிவது'. 'அறிந்தது' என்ப
பாருத்தமான பொருளைத் தருதலானும், இன்னோசை பயத்தல
ானும், அதுவே ஆசிரியர் பாடம் எனக் கொள்ளப்பட்டது. பரி
ழகர் இக் குறளை மூன்றாங் குறளாகவும், உ, ௩ குறள்களை முறை
, உ குறள்களாகவும் கொண்டனர். இக் குறள் வாய்மைக்கு வி
றுகின்றமையாலும், உ, ௩ குறள்கள் முறையே வாய்மைக்கு வி
ம் பொய்மைக்கு விலக்கும் கூறுகின்றமையாலும் இது மு
றளாகவும், அவை உ, ௩ குறள்களாகவும் அமைக்கப்பட்டன.

கருத்து. தன் மனச்சான்று அறிந்ததை அறிந்தபடி வெ
ிடுதல் வாய்மை. 15

உ. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்
தீமை யிலாத சொலல்.

பொருள். வாய்மை எனப்படுவது யாது என்னின்—வாய்
என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாது என்றால், தீமை ய
ன்றும் இல்லாத சொல்லல்—(குற்றமற்ற உயிர்க்குத்) தீங்கு யாதெ
றையும் பயவாத சொற்களைச் சொல்லுதல்.

அகலம். மனச்சான்று அறிந்ததை அறிந்தபடி உரை
வாய்மை யாயினும், அது குற்றமற்ற உயிர்க்குத் தீங்கு பயக்குமா

அது வாய்மை எனச் சொல்லத்தக்கதன்று. இக் குறள் வாய்மை விலக்கு. இல்லாத என்பதும் சொல்லல் என்பதும் லகர வெ றும், என்னின் என்பது னகர வொற்றும் கெட்டு நின்றன.

கருத்து. குற்றமற்ற உயிர்க்குத் தீங்கு விளைக்குமாயின், வ மையும் பொய்ம்மை யாம். 1

௩. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

பொருள். புரை தீர்ந்த நன்மை பயக்கும் என்னின்—கு மற்ற நன்மையைக் கொடுக்கும் என்றால், பொய்ம்மையும் வாய் இடத்த—பொய்ம்மை (களும்) வாய்மையின் இடத்தன (வாம்).

அகலம். இக் குறள் பொய்ம்மைக்கு விலக்கு. வாய்மை இடத்தன—வாய்மையின் இடத்தில் வைக்கப்படத் தக்க பொய்ம்மை பல திறத்தன வாகலான், அதனைப் பன்மைப் பொரு கூறினர்.

கருத்து. புரை தீர்ந்த நன்மையைப் பயப்பின், பொய்ம் யும் வாய்மை யாம். 1

௪. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

பொருள். உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்—(ஒரு மனச்சான்றுக்குப் பொய்யாமல் ஒழுகின், உலகத்தார் உள்ளத் எல்லாம் உளன்—உலகத்திலுள்ளவர்கள் உள்ளத்து ளெல்லாம் உ (ஆவன்.)

அகலம். உள்ளம் என்பது ஆகுபெயர், உள்ளச் சான்று ஆயினமையால். உள்ளத்தால் என்பது வேற்றுமை மயக்கம், ஏ

வாய்மை.

வேற்றுமை யுருபு நான்காம் வேற்றுமைப் பொருள் தந்து நின் மயால்.

கருத்து. பொய் கூறாதான் உலகத்தா ரெல்லாராலும் போற் படுவான். 154.

நி. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

பொருள். 'மனத்தொடு வாய்மை மொழியின்—(ஒருவன்) உன்
தோடு பொருந்தி உண்மையைக் கூறின், தவத்தொடு தானம்
ப்வாரில் தலை—தவமும் தானமும் செய்பவருள் தலையானவன்.

அகலம். பிற்றிய 'ஓ' உம்மைப் பொருளில் வந்தது. தான
ம் என்பது உம்மை கெட்டு நின்றது.

கருத்து. மனத்தோடு கூடி வாய்மை மொழிவோன் அகத்
ாவியினும் சிறந்தவன்.' 155.

சு. பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

பொருள். பெய்யாமை அன்ன புகழ் இல்லை-பொய்யாமையை
த புகழ்க் காரணம் இல்லை; பொய்யாமை எல்லா அறமும் தரும்—
ன்றியும்,) பொய்யாமை எல்லா அறங்களையும் தரும்.

அகலம். புகழ் என்பது ஆகுபெயர், அதன் காரணத்திற்கு
ணமையால். ஒருவன் வாய்மையைக் கைக்கொள்ளின், அவன்
ங்களை யெல்லாம் விட வேரும்; மறங்களை யெல்லாம் விடவே,
ன் அறங்களை யெல்லாம் புரிய வேரும். அதுபற்றியே 'பொய்யாமை
ல்லா வறமுந் தரும்' என்றார். மணக்குடவர் பாடம் 'பொய்யாமை
ல்லா அறமும்'. மற்றைய உரையாசிரியர்கள் பாடம் 'எய்யாமை
ல்லா வறமும்'. எய்யாமை என்பது எவ்வகைப் பொருத்தமான

நலையும் தாராமையான், மணக்குடவர் பாடமே ஆசிரியர் பாடமாக் கொள்ளப்பட்டது.

கருத்து. வாய்மை கூறுதல் எல்லா அறங்களையும் புகழையும் 156

எ. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

பொருள். பொய்யாமை பொய்யாமை ஆற்றின்—(ஒருவன்
ய்யாமையைப் பொய்யாமல் ஆற்றின், பிற அறம் செய்யாமை
பாமை நன்று—மற்றை அறங்களைச் செய்யாமையைச் செ
ம நன்மை.

அகலம். பொய்யாமையைப் பொய்யாமல் ஆற்றல்—வா
யச் சிறிதும் மாற்றாமல் கூறுதல். செய்யாமையைச் செய்ய
—செய்தல். இரண்டு எதிர்மறைச் சொற்கள் சேர்ந்து ஒ
பாட்டுப் பொருளைத் தந்தன.

கருத்து. ஒருவன் வாய்மையைக் கூறின் மாத்திரமே, அவ
றங்களைச் செய்தலால் பயன் உண்டு. 15

அ. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

பொருள். புறம் தூய்மை நீரான் அமையும்—உடம்பின
மை நீரால் உண்டாகும்; அகம் தூய்மை வாய்மையால் காண
—உள்ளத்தினது தூய்மை வாய்மையால் அறியப்படும்.

அகலம். மணக்குடவர், தாமத்தர் பாடம் 'நீரால்'. அ
மை காட்சி யளவையான் அறியப்பட முடியாத தொன்றாகலால்
ா வாய்மையால் அறிய லாகும் என்றார்.

புறவ கூறாமை.

கருத்து. வாய்மை அகத்தைத் தூயதாக்கும். 158.

கூ. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

பொருள். சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கு அல்ல—
றோர்க்கு எல்லா ஒளிகளும் ஒளிகள் அல்ல; பொய்யா விளக்கே
க்கு—பொய்யாமை (யால் வரும்) ஒளியே ஒளி.

அகலம். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. பொய்யாமையின்
யமாகிய விளக்கைப் பொய்யா விளக்கு என்றார்.

கருத்து. பொய்யாமையாகிய விளக்கு ஒன்றே மெய்ப்பொ
ந் காட்டும். 159

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

பொருள். மெய்யா (க) யாம் கண்டவற்றுள்—உண்மையா
ம் கண்டவற்றுள், வாய்மையின் நல்ல எனைத்து ஒன்றும் இல்லை
வாய்மையைப் போல நல்லவை எத்தன்மைத்தாய ஒன்றும் இல்லை

அகலம். 'பிற' அசை. மெய்யாக என்பது ஈறு கெட்
ாறது. இக் குறள் "ஒன்றாக நல்லது" என்னும் தொடக்கத்த
ளுக்கு மாறுபடாதோ என்னின், மாறு படாது. என்னை? இ
றன் கொள்ளவேண்டிய அறங்களில் தலையாயதைக் கூறுகின்ற,
க் குறள் தள்ளவேண்டிய மறங்களில் தலையாயதைக் கூறுகின்ற.

கருத்து. வாய்மை கூறுதலைப் போன்ற நல்லொழுக்
வறொன்றும் இல்லை. 16

௰எ-ம் அதி:—புறங் கூறாமை.

அஃதாவது, (பிறன்) புறத்தில் (அவனைப் பழித்
ரையாமை.

திருக்குறள்—அறப்பால்.

க. அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது.

பொருள். ஒருவன் அறம் கூறான் அல்ல செய்யினும்—ஒரு
ங்களைக் கூறாதவனாய் மறங்களைச் செய்யினும், புறங்கூறான்
இனிது—புறங்கூறான் என்று சொல்லப்படுதல் (கேட்டோர்
பம் பயக்கும்.

கருத்து. புறங்கூறல் மறஞ் செய்தலினும் தீது. 1

௩. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

பொருள். புறன் அழீ பொய்த்து நகை—(ஒருவனது) பு
(அவனை) இழித்துக் கூறி (அவன் முன்னே உயர்த்துக் கூ
ய்த்து நகையாடல், அறன் அழீ அல்லவை செய்தலின் தீதே
ங்களை அழித்து மறங்களைச் செய்தலினும் தீதே.

அகலம். ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. அழித்
லை அழித்தல் என்றார். ஒருவனை இழித்துக் கூறுதல் அவ
நமையை அழித்தலால், இழித்தலை அழித்தல் என்றார்.
டைகள் இரண்டும் இன்னிசைக்கண் வந்தன.

கருந்து. இதுவும் அது.

உ புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

பொருள். புறம் கூறி பொய்த்து உயிர் வாழ்தலின்—(ஒ
) புறத்தே (அவனைப்) பழித்துக் கூறியும் (அவன் முன்(
ந்து கூறியும் உயிர் வாழ்தலினும், சாதல் அறம் கூறும் ஆ
ம்—இறத்தல் அற நூல் (புறங் கூறுமைக்குச்) சொல்லும் கன்
லாம்) தரும்.

புறங் கூறுமை.

அகலம். புறங் கூறிப் பொய்த்து உயிர் வாழ்தல் என்றமையால்,
ப்த்து என்பதற்கு (அவன் முன்னே) உயர்த்துக் கூறி என்று
ருள் உரைக்கப் பட்டது. சாதல் என்பது இயற்கைச் சாவைக்
ந்து நின்றது. அறம் என்பது ஆகுபெயர், அறநூலுக்கு ஆயின
ால்.

கருந்து. புறங்கூறி வாழ்தலினும் சாதல் நன்று. 163.

ச. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

பொருள். கண் நின்று கண் அற சொல்லினும்—(ஒருவனது)
முன் நின்று கண்ணோட்டம் நீக்க (அவன் குறைகளைக்) கூறினும்,
இன்று பின் நோக்கா சொல் சொல்லற்க—(அவன்) முன் இல்
ல் (அவனைப்) பின் நோக்காமைக்கு எதுவாகிய சொற்களைச்
ல்லற்க.

அகலம். நோக்காமைக்கு எதுவாகிய சொல்லை நோக்காச்
ல் என்றார். அச் சொல்லாவது, புறங்கூறல். முன் இல்லாமல்
பது பின் நின்று எனப் பொருள் தந்து நின்றது. கண்ணோட்
—இசைக்கம். நச்சர் பாடம் 'பின்னோக்குஞ் சொல்'.

கருந்து. புறங்கூறல் கண்ணோட்டமின்மையினும் நீது. 164.
அறஞ்சொல்வா னெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

பொருள். அறம் சொல்வான் நெஞ்சத்தான் அன்மை—அறஞ்
ச் சொல்பவன் உள்ளத்தால் மறங்களை உள்ளுபவனு யிருத்
, புறஞ்சொல்லும் புன்மையால் காணப்படும்—(அவன்) புறங்
றும் இழிசெயலால் அறியப்படும்.

அகலம். 'அன்மை' அப் பொருட்டாதலை "விழுப்பேற்றின்"
ளும் தொடக்கத்துக் குறளின் அகலத்திற் காண்க. மூன்றிய

உரையாசிரியர்கள் பாடம் ' அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்
இப் பாடம் பொருத்தமான பொருளொன்றையும் தாராமை
' அறஞ் சொல்வான் ' என்பதே ஆசிரியர் பாடம் எனக் கொள்க

கருத்து. அறஞ் சொல்பவன் புறஞ்சொல்லுவ னுயின், அ
அறச் சொற்களெல்லாம் பொய்ச் சொற்கள் என்றறிக.

சு. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும்.

பொருள். பிறன் பழி கூறுவான்—பிறன் (புறத்தில் அ
பழிகளைக் கூறுபவன், தன் பழி உள்ளும் திறன் தெரிந்து க
படும்—தன் பழி யுள்ளும் திறனுளவற்றைத் தெரிந்து (மற்றவ
கூறப்படுவான்.

அகலம். " பல்லா ரவைநடுவண் பாற்பட்ட சான்
சொல்லா சொருவரையு மூன்றுன்றப்—பல்லா, நிரைப்புறவ் க
நெடியோனே யாயினும், உரைத்தா லுரைபெறுத லுண்டு " எ
பழமொழியார்.

கருத்து. புறங்கூறுவான் பிறரால் புறங்கூறப்படுவான்.

எ. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட நேரு நவர்.

பொருள். நக சொல்லி நட்பு ஆடல் தேறுதவர்—மி
படி (நல்ல சொற்களைச்) சொல்லி நட்புச் செய்தலே அறியாதவர்,
சொல்லி கேளிர் பிரிப்பர்—பிரியும்படியாகப் புறங்கூறி (த
கண்பரைப் பிரிப்பர்.

அகலம். ' கேளிர் ', ' ஆடல் ' இரண்டாம் வேற்றுமை
தொகைகள். தாமந்தர் பாடம் 'பகைச்சொல்லின்', 'நகைச்சொல்ல

ிய உரையாசிரியர்கள் பாடம் 'தேற்றாதவர்'. தேற்றாதவர் து ஈண்டுப் பொருத்தமற்ற பிறவினைப் பொருளைத் தரு ன், அது பிழைபட்ட பாடம் என அறிக.

கருத்து. புறங்கூறுவார் தமது கண்பரையும் பகையாக்கிக் ள்வர். 167.

அ. துன்னியார் குற்றமுந் தூற்று மாபிலு
ரென்னார்கொ லேநிலார் மாட்டு.

பொருள். துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்—ஒருங் கண்பாது குற்றத்தையும் (பலர் அறியும்படி புறஞ்) சொல்லும் ்புடையவர், எதிலார்மாட்டு என்னர்—பகைவரிடத்து எத் மைய ராவர்?

அகலம். கண்பாது புறத்தில் அவர் குற்றங்களை எடுத்துக் பவர் பகைவரது புறத்தில் அவரிடத்து இல்லாத குற்றங்களை எடுத்துக் கூறுவர் என்றவாறு. 'கொல்' அசை. நருமர், தாமத் பரிமேலழகர் பாடம் 'என்னைகொல்'. மணக்குடவர், நச்சர் ம் 'என்னர்கொல்'. நருமர் பாடம் 'மரபினர்'.

கருத்து. புறங்கூறுவார் பொய்ப்பழியுங் கூறுவர். 168.

கூ. அறனெனக்கி யாற்றுங்கொல் வையம் புறனெனக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

பொருள். புறன் நோக்கி புன்சொல் உரைப்பான் பொறை—னது) புறத்தை நோக்கி இழிசொல் கூறுபவனுடைய உடற் சுமை ர, அறம் நோக்கி வையம் ஆற்றும் கொல்—(யாவரையும் சுமப் தனது கடனென்ற) அறத்தை நோக்கிப் பூமி தாங்கும் கொல்?

அகலம். கொல் என்னும் அசைச்சொல் ஈண்டு வினுப் ருளில் வந்தது. பிறனது புறத்தை நோக்கி—பிறன் இல்லாத

-த்தைப் பார்த்து. மணக்குடவர் பாடம் 'அறனோக்கி', ாக்கி'.

கருந்து. புறங்கூறுவாரது சாவைப் பலரும் விரும்புவர்.

ம. எதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பி
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.

பொருள். எதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கி
வரது குற்றங்களைக் காண்டல் போல் தமது குற்றங்
னின், பின் மன்னும் உயிர்க்கு தீது உண்டோ—பின்னர்
ய மானிட உயிர்களுக்குத் தீமை உண்டோ? (இல்லை.)

அகலம். ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது.

கருந்து. அன்னியர் குற்றங்களைக் காண்டல்போல் தன் கு
ஒருவன் காணின், தன் குற்றங்களை விடுத்து மேம்படுவான்.

ஐஅ-ம் அதி:—தீவினை யச்சம்.

அஃதாவது, தீவினை செய்தற்கு அஞ்சுதல்.

க. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

பொருள். தீவினை என்னும் செருக்கு—தீய வினையை வி
செருக்கினை, தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்—
களைச் செய்துகொண்டிருக்கிறவர் அஞ்சார்; நல்ல வினைக
தைகொண்டிருக்கிறவர் அஞ்சுவர்.

அகலம். தீய வினை புரிதற்குக் காரணம் செருக்கு என்,
செருக்கிற்கு இடங்கொடுக்க லாகாதென்றும் கூறியவாறு.
உண்மை—நல்வினை. தாமந்தர் பாடம் 'என்னுஞ் 'செயற்
னையாகிய காரியத்தைச் செருக்காகிய காரணமாக உபசரித்த

தீவினை யச்சம்.

கருந்து. தீவினை புரிதற்கு அஞ்சுதல் வேண்டும். 171

உ. தீயவே தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

பொருள். தீய தீயவே பயத்தலால்—தீ வினைகள் தீய பயன்
தீய வினைத்தலால், தீயவை தீயினும் அஞ்ச படும்—(ஒருவன்)
தீவினைகளைத் தீயினும் மிக அஞ்ச வேண்டும்.

அகலம். தீயானது தீயவும் கல்லவும் பயத்தலானும், தீய வினை
வ பயத்தலானும், தீய வினைகளைத் தீயினும் அஞ்ச வேண்டும்
ர். மூன்றிய உரையாசிரியர்கள் பாடம் 'தீயவை தீய'. அது பிழை
பாடம், 'வ' இன்றியமையாத தாகலான்.

கருத்து. தீய வினை தீயினும் கொடிது. 172.

கூ. அறிவினு ளெல்லாக் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

பொருள். செறுவார்க்கும் தீய செய்யா(து)விடல்—பகைவர்க்
ங்குகள் செய்யாது விடுதல், அறிவினுள் எல்லாம் தலை—
னு ளெல்லாம் தலையாய அறிவு.

குகலம். செய்யாது என்பது செய்யுள் விகாரத்தால் ஈறு
) நின்றது. 'என்ப' அசை.

கருத்து. தீவினை புரியாமை சிறந்த அறிவு. 173.

கூ. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னுறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

பொருள். மறந்தும் பிறன் கேடு சூழற்க—(ஒருவன்) மறந்தும்
ற கேட்டை எண்ணற்க; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம்
(பிறனது கேட்டை) எண்ணின் (அவ்வாறு) எண்ணியவனது
ட அறக் கடவுள் எண்ணும்.

கருத்து. பிறன் கேட்டைக் கருதியவனுக்குக் கடவுள் (
ப்பர்.

கூ. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

பொருள். இலன் என்று தீயவை செய்யற்க—(தான் பொ
ாதவன் என்று நினைத்து (ப்பொருள் ஈட்டுதற்காகத்) தீய
(ஒருவன்) செய்யாதிருக்கக் கடவன்; செய்யின் மற்றும் (
இலன் ஆகும்—(தீய வினைகளைச்) செய்யின் உள்ளதும்

ாதவன் ஆவன்.

அகலம். உள்ளதாவது, தான் பொருள் இல்லாதவன் எ
த அறிவு. மணக்குடவர் பாடம் 'இலமென்று'. இல்
ஈமாகத் தீவினை செய்யின் என்றமையால், மற்றும் என்ப
தும் என்று பொருள் உரைக்கப்பட்டது.

கருத்து. தீய வினை புரிபவன் தன் அறிவையும் இழப்பன்.

சு. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க கோய்ப்பா
தன்னை யடல்வேண்டா தான்.

பொருள். நோய் பால தன்னை அடல் வேண்டாதான்—பி
பன தன்னை வருத்துதலை விரும்பாதவன், தீ பால பிறர்
ற்க—தீமைப் பகுதியனவற்றைப் பிறர்மாட்டுச் செய்யாதி
வன்.

அகலம். பிணிப் பகுதியன—பிணி வகையிற் சேர்ந்த
ப் பகுதியன—தீமை வகையிற் சேர்ந்தவை. 'தான' அ
கருத்து. தீவினை புரிவார் கோய்பல கொள்வர்.

எ. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

210
தீவினை யச்சம்.

பொருள். எனை பகை உற்றாரும் உய்வர்—எத்தகைய(
பகையை அடைந்தவரும் தப்புவர்; வினை பகை வீயாது
சென்று அடும்—(தீய) வினையாகிய பகை நீங்காது (தன்னைச்
தவன்) பின்னே சென்று (அவனை) வருத்தும்.

கருத்து. தீய வினை புரிவாரைக் கெடுத்தற்கு வேறு
வர் வேண்டா; அதுவே போதும்

அ. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைக் தற்று.

பொருள். தீயவை செய்தார் கெடுதல்—தீய வினை
செய்தவர் அழிதல், நிழல் தன்னை வீயாது அடி உறைத்தற்று—
வன்) நிழல் அவனை (விட்டு) நீங்காது (அவன்) அடிகளின்
தங்குதற் போலும்.

அகலம். அடி என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை. உ
தற்று என்பது வினையெச்சத் தொகை. அஃது உறைத்தால் அ
என விரியும். மணக்குடவர் பாடம் 'தீவினை செய்தார்'.

கருத்து. தீவினை புரிவார் கேடுறுதல் திண்ணம்.

௬. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்று
துன்னற்க தீவினைப் பால்.

பொருள். தன்னை தான் காதலன் ஆயின்—தன்னைத் காதலிப்பவனாயின், தீவினை பால் எனைத்து ஒன்றும் துன்னற்க வினைப் பகுதிகளில் எவ்வளவு சிறியதான ஒன்றையும் நெரு திருக்கக் கடவன்.

கருத்து. தன்னைக் காதலிப்பவன் தீவினையை அணுகற்க.

௰. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்வா னெனின்.

திருக்குறள்—அறப்பால்.

பொருள். மருங்கு ஓடி தீ வினை செய்வான் என்னின்—(ன் அற நெறியை விட்டுப்) பக்கத்தில் ஓடித் தீய வினைகளைச் செ ன் என்றால், அரு கேடன் என்பது அறிக—நீக்குதற்கு அ ட்டை யுடையவன் என்று அறியக்கடவன்.

அகலம். முந்திய உரையாசிரியர்கள் பாடம் 'செய்யா னெனி து பிழைபட்ட பாடம், 'அருங் கேடன்' என்பதற்கு 'நீக்கு ய கேட்டை யுடையவன்' என்பதே பொருளாகலானும், ஒன்றை ய்தற்கே ஓடுதல் இயற்கை யாகலானும்.

கருத்து. தீவினை செய்பவன் நீங்காத கேட்டை அடைவ

௰௬-ம் அதி:—ஒப்புர வறிதல்.

அஃதாவது, நாடொப்பன செய்தல். 'அறிதல்' என்ட ன்டுச் செய்தற் பொருட்டு.

க. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

பொருள். கடப்பாடு கைமாறு வேண்டா—ஒப்புரவுகள் க
ற்றை விரும்பா; மாரிமாட்டு உலகு என் ஆற்றும்—மழைக்கு
யாது கைம்மாற்றினைச் செய்யும்? (ஒன்றும் செய்ய இயலாது.)

அகலம். கொல், ஓ என்பன அசைகள். கைம்மாறு—பி
காரம். கடப்பாடு என்றமையாலும், மழையை உவமானமா
தினமையாலும், ஒப்புர வென்பது கைம்மாறு கருதாத உதவி என
ாள்க. ஒப்புரவு தவிர்க்கப்படுவ தன்று என்பதை உணர்
ண்டி, அதனைக் கடப்பாடு என்றார். ஒப்புரவு செய்வாரது வே
மையை ஒப்புரவின்மேல் ஏற்றிக் கூறினர்.

கருத்து. ஒப்புரவு கைம்மாறு கருதாத உதவி. 1

ஒப்புர வறிதல்.

உ. தான்ஆற்றித் தக்க பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

பொருள். தான் ஆற்றி தக்க பொருள் எல்லாம்—முயற்சி
ய்து தக்க பொருளெல்லாம், தக்கார்க்கு வேளாண்மை செய்தல்
ாருட்டு—தகுதி யுடையார்க்கு உதவி செய்தற் பொருட்டு.

அகலம். 'ஆற்றித் தக்க' என்பதற்குத் 'தான்' என்பதை
த்தாவாகக் கொள்க.

கருத்து. சம்பாதித்தும் பொருளெல்லாம் தக்கார்க்கு உதவி
ய்தற் பொருட்டே. 182.

ஈ. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலிதே
யொப்புரவி னல்ல பிற.

பொருள். ஒப்புரவின் பிறநல்ல—ஒப்புரவு போன்ற மற்றை
ல செயல்களோ, புத்தேள் உலகத்தும் மீண்டும் பெறல் அரிது—
ய்வ உலகத்தும் இவ் வுலகத்தும் பெறுதல் அரிது.

அகலம். ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. மணக்குடவர்
—ம் 'பெறற்கரிதே'.

கருந்து. ஒப்புரவு போன்ற நல்லவை இவ் வுலகத்திலும் ய்வ உலகத்திலும் இல்லை. 183.

ச. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

பொருள். ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்—(நாட்டுக்கு] த செயலைச் செய்பவன் உயிரோடு கூடி வாழ்பவன்; மற்றையான் த்தாருள் வைக்கப்படும்—அச் செயலைச் செய்யாதான் இறத்தவ (ஒருவனுகச்) கருதப்படுவான்.

திருக்குறள்—அறப்பால்.

அகலம். நாட்டுக்கு ஒத்த செயல்—ஒப்புரவு.

கருந்து. ஒப்புரவு செய்கின்றவன் உயிரோடு கூடி வாழ்கின் ன்; ஒப்புரவு செய்யாதான் பிணத்தை ஒப்பன். 18.

ரு. ஊருணி நீர்நிறைக் தற்றே யுலகவாம்
போற் வாளன் திரு.

பொருள். உலகு அவாவும் பேர் அறிவாளன் திரு (அடைதல் லக கடைமை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினர் ஆன்கின்றவ சல்வத்தை அடைதல், ஊருணி நீர் நிறைத்து அற்று—ஊருண ர் நிறைத்தாற் போலும்.

அகலம். ஊருணி—ஊரில் வாழ்வார் உண்ணும் நீரையுடை னம். உலகு என்பது ஆகுபெயர், உலக கடைக்கு ஆயினமையா லக கடையாவது, ஒப்புரவு. நிறைத்தற்று என்பது வினையெச்ச தாகை. ஊருணி நீரை ஊரார் தடையின்றித் துய்த்தல்போல ப்புர வுடையான் செல்வத்தை ஊரார் தடையின்றித் துய்ப்ப ன்று கூறிய வாறு. 'அடைதல்' அவாய் நிலையான் வந்தது. எ அசை. அவாவும் என்பது சுற்றியல் கெட்டு நின்றது. "ஊருண றையவு முதவு மாடுயர், பார்கெழு பழுமரம் பழுத்தற் றுகவு ர்மழை பொழியவுங் கழனி பாய்தி, வார்புனல் பெருகவு றக்கின் ரூர்கள்யார்" என்ரூர் கம்பர்.

கருந்து. ஒப்புர வுடையான் செல்வம் ஊரார்க்குப் பயன் படு

சு. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றூற் செல்வ

நயனுடை யான்கட் படின்.

பொருள். நயன் உடையான்கண் செல்வம் படின்—ஒப்புர டையானிடத்தில் செல்வம் பொருந்தின், (அது) பய்ன் மரம் ஊ ன் பழுத்து அற்று—அது பயன் மரம் ஊரினுன் பழுத்தாற் போலு

ஒப்புர வறிதல்.

